# ஒரே படம்!



இன்பமூட்டவும் அறிவை
வளர்த்திடவும் துணைசெய்கின்ற "ஒரே படம்"

வெற்றிமேல் வெற்றி பெற்றுத்
திரளான மக்கள் தினமும்
கண்டு களிக்கின்ற.................. "ஒரே படம்"

பெருவாரியான மக்களின்
உள்ளத்தைக் கவர்ந்துவிட்ட...... "ஒரே படம்"

மக்களிடை மகத்தான மதிப்பைப்
பெற்று மட்டற்ற மகிழ்ச்சியை
அளித்திட்ட.............................. "ஒரே படம்"

...அந்தப்படம் "வேலைக்காரி" தான் என்று
திரண்டெழுந்து வரும் மக்கள் தீர்ப்புக்கூறுகின்றனர்

# வேலைக்காரி

ஒரு ஜுபிடர் வெற்றி.............................. ஏ.எஸ்.ஏ.சாமி · உருவாக்கியது
அறிஞர் அண்ணாதுரை · தீட்டியது

சென்னை பாரகன் · கிரௌன் · லக்ஷ்மி
மற்றும் · ராஜதானி · பூராவும் · நடைபெறுகிறது.


# நாணயமான விலைகள்

ரிஜிஸ்டர்டு கோத்ரெஜின்


ஒவ்வொரு பொருள்களின்

## ஸோப்புகள் - கிளிசரின்


இவைகளின் நாணயமான விலைகள்



நெ. 1—11 அணா



நெ. 2—8½ அணா



'வத்னி'—6½ அணா
'வத்னி'(சிறிய சைஸ்)-2 அணா




ஸாண்டல்-7 அணா




லிம்டா(வேப்)-7 அணா





கஸ்-7 அணா




டர்கிஷ்பாத்-4¾ அணா



ஷேவிங் ஸ்டிக்
(கார்டன்) - 7½ அணா
(தகரடப்பா) - 10 அணா




ஷேவிங் ரவுண்டு-4½ அணா

கிளிசரின்
ரூ. 66-8-0, 56 பவுண்டு (கே.பி)
ரூ. 33-12-0, 28 பவுண்டு (கே.பி)
மேலும் 5, 10 அந்தர் வெயிட்
பாக்கிங்குகள்.

சுங்க வரி, ஆக்ட்ராய், வேறு வரிகளிருந்தால் விலை சிறிது கூடும்.

### கோத்ரெஜ் சோப்ஸ், லிமிடெட்.

தாவர எண்ணைகளால் சோப்புகளை முதல் முதல் இந்தியாவில் செய்தவர்



# விற்பனையாளர் கால்வலியினால் முடமானார்



## பின்பு ‘க்ருஷன்’ அதன்விளைவை வெற்றி கரமாகத் தாக்கியது

விற்பனையாளர் காந்தி மேல் நாட்டு பிரயாணத்தினின்று திரும்பியபோது அவரை ரயிலினின்று தூக்கி வர வேண்டியதாயிற்று. மறுபடியும் வேதனை உண்டாக்கும் கால்வலி அவரை அதிவிரைவில் பிடித்தது. சில நாட்கள் கழிந்து எவ்வாறோ காரியாலயத்தை அடைந்து மானேஜரைக் கண்டு அவர் ராஜினாமாக் கொடுத்தார்......


ஆறு மாதங்களுக்குப் பின்: என்ன மாறுதல். அதிக விற்பனையின் காரணமாக காந்தி கால் வருடப் பரிசைப் பெற்று விட்டார். அவரது சகாக்கள் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவிக்க அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

"உங்கள் ரகசியம் என்ன" என்று அவர்கள் கேட்டனர்.

"தினம் காலை உண்டிக்கு முன் "க்ருஷன்" சாப்பிடுவதுதான்" அவர் கொடுத்த பதில்.

கால்வலி உபத்திரவம், நரம்புத் தளர்ச்சி இவைகள் சுத்தமற்ற ரத்த ஓட்டத்தின் அறிகுறி. அவைகள் ரத்தத்தில் விஷம் கலந்திருப்பதைக் காண்பிக்கின்றன. ‘க்ருஷன்’ ஆறுவித இயற்கை உப்புகளின் சேர்க்கையாதலினால் உட் சுத்தத்தை உறுதியாக்கி ரத்த ஓட்டத்தை துப்புரவாக்குகிறது. புதிய பலத்துடன் சுத்தம் செய்யப் பட்ட நீங்கள் புது வீரத்துடன் பரிணமிக்கிறீர்கள். பின்பு கால்வலி நரம்புத் தளர்ச்சி சம்பந்தப்பட்ட நோய்கள் உங்களை விட்டுச் செல்கின்றன.

இன்றே ‘க்ருஷன்’ வாங்குங்கள் கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும் விலை ரூ. 1-10 (மஞ்சள் பெட்டியில்)




## நீங்கள் கூட அந்த ‘க்ருஷன்’ உணர்ச்சியை அடையலாம்



க்ஷிராஜாவின்

# பவளக்கொடி

மாகாணம் முழுவதும்

**50** தியேட்டர்களில்


இப்பொழுது நடைபெறுகிறது...

# கல்கி பொருளடக்கம்

மலர் 8 இதழ் 40 | மே 1 | விரோதி ஹ சித்திரை 19உ



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



# மகாத்மா காந்தி தேசீய ஞாபகார்த்த நிதிக்காக

## ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

**உதவும் சங்கீதக் கச்சேரி**

★

சங்கீதரத்ன ஸ்ரீ டி. சௌடய்யா — பிடில்
ஸ்ரீ எம். எஸ். சக்திவேல் — மிருதங்கம்
ஆலங்குடி ஸ்ரீ கே. ராமச்சந்திரன் — கடம்

★

***30 - 4 - 49 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு***

**பம்பாய் மஹாலக்ஷ்மி ரேஸ் கோர்ஸில்**

★

*பம்பாய் மாகாண பிரதமர் **ஸ்ரீ பி. ஜீ. கேர்** அவர்கள்*
*தலைமை வகிப்பார்கள்*

**டிக்கட்டுகள்: ரூ. 250/- 100/- 50/- 25/- 10/- 5/-**

எஸ். கே. பாடீல்
தலைவர், பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டி

# கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 40


## என்ன செய்தி?

### மாற்றிக் கொள்ளுங்கள்

கோவாவில் ஜனங்களின் சுதந்திர அபிலாஷையை நசுக்குவதற்காகப் போர்ச்சுகல் சர்க்கார் ஆயிரக்கணக்கான நீக்ரோ சிப்பாய்களை இறக்குமதி செய்திருக்கிறார்கள்; போலீஸ் படையைப் பெருக்கி வருகிறார்கள்; இன்னும் அதிகத் துருப்புகளைத் தருவிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் என்றெல்லாம் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அங்கு சுதந்திர இயக்கத்தில்,—அதாவது இந்தியாவிலுள்ள போர்ச்சுகல் பிரதேசங்கள் இந்தியாவுடன் ஐக்கியம் அடைய வேண்டும் என்ற இயக்கத்தில் கலந்துகொண்ட சிலருக்குப் போர்ச்சுகல் சர்க்கார் பதினைந்து வருஷம் சிறைத் தண்டனை விதித்திருக்கிறார்கள். எனவே, போர்ச்சுகல் சர்க்காருடன் ஒப்பிடும்போது பிரஞ்சு இந்திய சர்க்காரின் செய்கை அவ்வளவு மோசமானதல்ல என்று கூறலாம்!


பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களின் எதிர்காலத்தை மேற்படி பிரதேசங்களில் வாழும் மக்களே முடிவு செய்ய வேண்டும் என்பதைப் பிரஞ்சு சர்க்கார் ஆட்சேபிக்கவில்லை. அதற்காக சர்வ ஜன வாக்கு எடுப்பதற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். சர்வ ஜன வாக்கு எடுத்து முடிவு செய்வதை இந்திய சர்க்காரும் பூரணமாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போது தகராறு எல்லாம் எதைக் குறித்து ஏற்பட்டிருக்கிறது? சர்வ ஜன வோட்டு எடுப்பதை வாயளவில் அங்கீகரித்துள்ள பிரஞ்சு சர்க்கார் அவ்விஷயமாகத் திரை மறைவில் எவ்வித முட்டுக்கட்டையும் போடக்கூடாது, எத்தகைய சூழ்ச்சியும் செய்யக்கூடாது என்பதை யொட்டித்தான். எனினும், பிரஞ்சு இந்திய மக்கள் ஏகோபித்து ஒற்றுமையுடனிருந்தால் பிரஞ்சு சர்க்கார் எதுவும் செய்ய முடியாது.


பிரஞ்சு இந்திய அசெம்பிளியைச் சேர்ந்த மூன்று அங்கத்தினர்கள் டில்லிக்கும் பாரிசுக்கும் தூது செல்லப் போகிறார்கள். அந்தத் தூது கோஷ்டியினால் என்ன பலன் ஏற்படப் போகிறதோ? ஒரு சிலருடைய தவறான போக்கினால் பதினாயிரக் கணக்கான ஜனங்கள் துன்பத்துக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. மேற்படி தூது கோஷ்டியினரும் அவர்களை ஆதரிக்கும் மற்றவர்களும் இந்த உண்மையை அறிந்து தங்களுடைய போக்கை மாற்றிக் கொள்வார்களாயின், பிரஞ்சு இந்தியப் பிரச்னை தாமதமின்றித் திருப்திகரமாகத் தீர்ந்துவிடும்.

### மன்னிக்க முடியாதது

"முஸ்லிம் லீக் தலைவர்கள் பாகிஸ்தானில் பாலும் தேனும் வழிந்தோடப் போகிறது என்று பசப்பினார்கள். ஏழை முஸ்லிம்களின் மத உணர்ச்சியைத் தூண்டி விட்டார்கள். கடைசியில் நாம் காண்பது என்ன? அந்தச் சுயநலவாதிகள் மந்திரி பதவிகளை ஏற்றுக் கொண்டு பாமர ஜனங்களையும் லீக் கொள்கைகளையும் கைவிட்டு விட்டார்கள்" என்று மேற்கு பாஞ்சால முஸ்லிம் லீக் மகாநாட்டில் பலர் காரசாரமாகப் பேசியிருக்கிறார்கள். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தைச் சேர்ந்த பட்டாணியர்களோ வெனில், "இரண்டு நூற்றாண்டுகளாக பிரிட்டிஷாரின் அடக்கு முறைகளுக்கு அடிபணிய மறுத்தவர்கள் தோற்று முளைத்துள்ள பாகிஸ்தானின் அடக்குமுறைகளுக்கா அஞ்சுவோம்!" என்று கர்ஜிக்கிறார்கள். பட்டாணியர்—பாகிஸ்தான் தகராறு கூடிய சீக்கிரம் ஐக்கிய நாடுகள் சபையில் சிரிக்கப்போகிறது என்றும் செய்திகள் கூறுகின்றன. பட்டாணியர்களையும் முஸ்லிம் லீக் பக்தர்களையும்கூடத் திருப்தி செய்ய முடியாத பாகிஸ்தான் சர்க்கார், வகுப்பு ஒற்றுமை நிலவி வரும் காஷ்மீரத்தில் மத வெறி விஷத்தைப் புகுத்த முற்படுவதும், அங்கு அமைதியாகவும் நேர்மையாகவும் சர்வ ஜன வாக்கு எடுக்க முடியாமல் பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்து வருவதும் மன்னிக்க முடியாத அக்கிரமங்கள் அல்லவா?

# எல்லாம் உங்கள் நன்மைக்கே!





6
பிறகு என் மேஜை வேலை செய்ய ஆரம்பித்ததும்,
திட்டம்
திட்டம்
திட்டம்
திட்டம்
7
அதன் பலனாக ஸ்ரீ ஓமந்தூரார் தாமாகவே
பதவியை விட்டுப் போகும்படி நேர்ந்ததும்,
8
அந்தப் பதவியில்
ஸ்ரீ குமாரசாமி ராஜாவைப்
பலவந்தப்படுத்தி
உட்கார-
வைத்ததும்..
9
இவ்வளவுக்கும் பிறகு இராப்-
பகலாகத் தூக்கமின்றி ஏங்கியதும்,
எல்லாம் உங்களுடைய நன்மையை
உத்தேசித்துத்தான்!......
10
ஆகையால், பொதுஜனஸ்வாமி!
உங்களுடைய நன்மைக்காக எனக்கு ஒரு
டெபுடி மந்திரி பதவியோ பார்லிமெண்டரி
காரியதரிசி பதவியோ கொடுக்கும்படி
சிபார்சு செய்யுங்கள்!
SHASTRY

# இலங்கை சர்க்கார் ஒன்று நினைக்க....!



உப்பு இல்லாத உணவும் ஒற்றுமை இல்லாத குடும்பமும் உருப்பட முடியாது என்ற அரிய பெரிய தத்துவத்தை இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீ சேனநாயகா சமீபத்தில் எடுத்துரைத்தார்.

ஒரு குடும்பத்தின் க்ஷேமத்துக்கு ஒற்றுமை எவ்வளவு அவசியமோ அது போலவே ஒரு தேசத்தின் க்ஷேமத்துக்கும் ஒற்றுமை மிகவும் அவசியம் என்று உபதேசித்தார்.

கொழும்பு நகரில் அகில இலங்கை சேவகர் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தபோது ஸ்ரீ சேனநாயகா அவ்வாறு கூறினார்.

"ஸ்ரீமான் இலங்கைக்கு நான்கு மனைவியர் இருக்கின்றனர். சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர் சமூகங்களே அந்த மனைவிகள் ஆவர். அவர்களுக்குள் சக்களத்திப் போராட்டம் ஏற்படாமல் இருக்க வேண்டும். அவர்களிடையே ஒற்றுமை இல்லாவிடில் இலங்கை மக்கள் அடங்கிய பெரும் குடும்பம் மகிழ்ச்சியுடன் வாழ முடியாது" என்று இலங்கைப் பிரதம மந்திரி சொன்னார்.

சமீபத்தில் தமிழ், சிங்களப் புது வருட தினக் கொண்டாட்டத்தை யொட்டி நடைபெற்ற கூட்டத்திலும் அவர், இலங்கையிலுள்ள பல்வேறு வகுப்பினரிடை ஒற்றுமை நிலவவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்.

ஜனங்களிடையே ஒற்றுமை குன்றிப் பரஸ்பரம் சந்தேகமும் பீதியும் குரோதமும் ஏற்பட்டதால்தான் இந்தியா பிளக்கப்பட்டது என்பதை எடுத்துக்காட்டி, அத்தகைய நிலைமை இலங்கையில் ஏற்படுவதற்கு யாரும் இடம் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

இலங்கைப் பிரதமரின் மேற்படி அருமையான பிரசங்கங்களையும் அவற்றில் அடங்கியுள்ள உயர்ந்த கருத்துகளையும் போற்றுகிறோம்.

ஆனால் அந்தக் கருத்துகள் இலங்கை சர்க்காரால் எவ்வளவு தூரம் செயலில் காட்டப்பட்டு வருகின்றன என்பதே இப்போது கேள்வியாகும்.

இலங்கையின் பொருளாதார நிலைமை சீர்கெட்டிருப்பதற்கு இந்தியர் தான் காரணஸ்தர்கள் என்று இலங்கை சர்க்கார் பிரசாரம் செய்து வருவது சமூகங்களிடையே ஒற்றுமை நிலவுவதற்கு வழிவகை உண்டுபண்ணுவதாகுமா?

இந்தியத் தொழிலாளர்களை நீக்கி விட்டு அவர்களுடைய ஸ்தானத்தில் சிங்களத் தொழிலாளர்களையே நியமிக்க வேண்டும் என்ற கொள்கையை மேற்படி சர்க்கார் கடைப்பிடிக்க முற்பட்டிருப்பது சமூக ஒற்றுமைக்கு உகந்ததா?

இலங்கையிலே பிறந்து வளர்ந்து இலங்கையைத் தாய் நாடாகக் கொண்டுள்ள, இந்தியாவைப் பார்த்துமிராத இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை அளிக்க மறுத்து, முதல்தரப் பிரஜை யென்றும் இரண்டாந்தரப் பிரஜையென்றும், பரம்பரைப் பிரஜை யென்றும் ரிஜிஸ்தர் பிரஜை யென்றும் பாகுபாடு செய்யும் சட்டத்தை நிறைவேற்றியுள்ள இலங்கை சர்க்காரின் செய்கை ஒற்றுமை நிலவுவதற்கு உதவி செய்வதாகுமா?

இலங்கையில் வேறு எந்த சமூகத்துக்கும் விரோதமான முறைகளைக் கைக்கொள்ள விரும்பாத இலங்கை சர்க்கார், இந்தியத் தொழிலாளர், இந்திய வியாபாரிகள் முதலியோரை மாத்திரம் மிகவும் பாதிக்கக் கூடிய பல காரியங்களையும் செய்ய முற்பட்டிருப்பது பல்வேறு சமூகங்களிடையேயும் ஒற்றுமை ஏற்படுவதற்கு அவசியமானதா?

• • •

லண்டனில் நடந்த காமன்வெல்த் மகாநாட்டுக்கு ஸ்ரீ சேனநாயகா இந்தியா வழியாகச் சென்றபோது, இலங்கை இந்தியர் பிரச்னை வெகு காலத்துக்கு முன்பே தீர்க்கப்பட்டு விட்டது என்று கூறியதாக முதலில் ஒரு செய்தி வந்தது.

பிறகு, அவர் அவ்வாறு கூறவில்லை என்று மறுத்து மற்றொரு செய்தி வந்தது.

இலங்கைப் பிரதம மந்திரி அவ்விதம் கூறியிருந்தாலும் கூறாவிடினும், இந்தியா—இலங்கைப் பிரச்னையை, குறிப்பாக இலங்கை இந்தியர் பிரஜா உரிமைப் பிரச்னையைத் தீர்ந்து போன ஒரு விஷயம் என்றே இலங்கை சர்க்கார் முடிவு செய்து விட்டார்கள் என்பது அவர்களுடைய செய்கைகளிலிருந்து தெரிகிறது.

உலகத்தின் மதிப்பிற்குரிய, சர்வதேச அரசியல் நீதி சாஸ்திரத்தைக் கரை கண்ட பண்டித ஜவாஹர்லால் நேருவின் யோசனைகளை இலங்கை சர்க்கார் நிராகரித்து விட்டனர்.

இந்தியர் பிரஜா உரிமைச் சட்டத்தை யொட்டி இலங்கை பார்லிமெண்டில் இந்தியர் பிரதிநிதிகள் கொண்டு வந்த திருத்தங்களில் ஒன்றைக் கூட மேற்படி சர்க்கார் ஏற்றுக் கொள்ள வில்லை.

இந்தியர்களைத் தென்னாப்பிரிக்காவிலிருந்து விரட்டுவதற்காக அந்த தேச சர்க்கார் அவர்களுக்கு போனஸ் தொகை கொடுப்பதுபோல், "நாங்கள் இலங்கையரல்ல" என்று சொல்லும் ஏழை இந்தியர்களுக்கு இலங்கை சர்க்கார் சில வசதிகளைச் செய்திருக்கிறார்கள்.

இலங்கையின் பண்பாட்டுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் முக்கிய காரணமாக விளங்கும் இலங்கை இந்தியர் சமூகத்தின் மீது இலங்கை சர்க்கார் கைக்கொண்டு வரும் முறைகள், இந்தியர்கள் இலங்கையின் விரோதிகள் என்று உலகத்துக்குப் பறைசாற்றுவது போலவே இருக்கின்றன!

* * *

இலங்கை இந்தியர் பிரச்னை தீர்ந்து போனதாக இலங்கை சர்க்கார் கருதுகிறார்களெனினும், இந்தியர் சமூகம் அவ்வாறு நினைக்க வில்லை என்பது, சமீபத்தில் அங்கு நடந்த இலங்கை இந்தியர் காங்கிரஸ் நடவடிக்கைகளிலிருந்து நன்கு தெரிகிறது.

அதாவது இலங்கை சர்க்கார் ஒன்று நினைக்க இலங்கை இந்தியர் ஒன்று நினைக்கிறார்கள்!

"இலங்கையில் குடியேறி இந்த நாட்டைத் தாய் நாடாகக் கொண்ட இந்தியர்கள் இங்கேயே பரம்பரையாக வாழ்வோரைப் போன்றவர்களே. எனவே, எதேச்சாதிகார முறைகளால் அவர்களுடைய உரிமைகளைப் பறிக்கும் சக்தி இந்த ஜகத்தினிலே யாருக்கும் இல்லை.

"இலங்கை இந்தியர்களின் ஏகோபித்த எதிர்ப்பையும் இந்திய சர்க்காரின் நியாயமான, தீர்க்காலோசனையுடன் கூடிய ஆட்சேபணைகளையும் பொருட்படுத்தாமல் இந்தியர் பிரஜா உரிமை சம்பந்தமாக இங்கு இரண்டு சட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன. அவ் விஷயமாகக் கடைசி நேரத்திலாவது இலங்கை சர்க்காரின் மனம் மாறும் என்று நம்புகிறோம்.

"அவ்விதம் மாறாவிடில், கொடுமையையும் கொடுங்கோன்மையையும் வெற்றிகரமாக எதிர்த்து நிற்க முடியும் என்பதை நாம் உலகத்துக்குக் காட்ட வேண்டும்" என்று இலங்கை இந்தியர் காங்கிரஸ் தலைவரும் இலங்கை பார்லிமெண்டு அங்கத்தினருமான ஸ்ரீ கே. ராஜலிங்கம் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

மேற்படி காங்கிரசுக்குப் பண்டித நேரு அனுப்பிய வாழ்த்துச் செய்தியை அவரது கட்டளைக்கு இணங்க இந்தியா ஹை கமிஷனரான ஸ்ரீ கிரி நேரில் சென்று அறிவித்தார்.

அந்தச் செய்தி துன்பத்துக்கு உள்ளாகி வரும் இலங்கை இந்தியர்களுக்கு ஆறுதலையும் உற்சாகத்தையும் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

"நீங்கள் அஞ்சவேண்டாம். இந்திய சர்க்கார் உங்களைக் கைவிடமாட்டார்கள்" என்று சொல்வதற்கொப்ப, ஜவாஹர்லால்ஜி இந்திய சர்க்கார் பிரதிநிதி மூலம் செய்தி அனுப்பியது மேற்படி காங்கிரசில் கலந்துகொண்ட பதினாயிரக் கணக்கானவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும்.

இலங்கை சர்க்கார் நிறைவேற்றியுள்ள சட்டங்களுக்கு அங்குள்ள இந்தியர்கள் மௌனமாகப் பணிந்துவிடப் போவதில்லை என்பது இந்தியர் காங்கிரஸ் நடவடிக்கைகளிலிருந்து நிதர்சனமாகத் தெரிகிறது.

இந்நிலையில் இலங்கை சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள்?

இந்தியாவின் நட்பை இழந்துவிடக் கூடாது என்பதற்காகக் காமன்வெல்த் மண்டலத்தில் இந்தியா இருக்கவேண்டும் என்று பிரிட்டனும் மற்றும் பல நாடுகளும் பெரு முயற்சி செய்து வரும் இந்தச் சந்தர்ப்பத்தில், இலங்கை சர்க்கார் மாத்திரம் அதன் நட்பை இழக்கத் துணிவார்களா?

# சில்லறை விஷயங்கள்

**பு**திய சென்னை மந்திரி சபையில் சேர்க்கப்படாத மாஜி மந்திரிகளான ஸ்ரீ அவிநாசிலிங்கமும் ஸ்ரீ கூர்மையாவும் பழைய மந்திரி சபையிலிருந்து தாங்கள் ராஜிநாமா செய்ய வேண்டி நேர்ந்ததற்குக் காரணம் என்னவென்பதை விளக்கிப் பேசியிருக்கிறார்கள்.

ஸ்ரீ கூர்மையாவின் பேச்சுதான் மிக்க சோகம் விளைவிப்பதாக இருக்கிறது.

“பழைய மந்திரி சபையில் எங்களுடன் பதவி வகித்த எழுபேர் புதிய மந்திரி சபையிலும் இருக்கிறார்கள். என்னையும் வேறு இவரையும் மாத்திரம் விட்டுவிட்டார்கள். இதிலிருந்து, நாங்கள் மந்திரி பதவி வகிக்கத் தகுதியற்றவர்கள் என்று அல்லவா ஜனங்கள் நினைப்பார்கள்?” என்று ஸ்ரீ கூர்மையா வருத்தப்படுகிறார்.

ஸ்ரீ கூர்மையா என்னத்துக்காக இப்படி வருத்தப்பட வேண்டும்? மந்திரி வேலை பார்க்கத் தகுதி அவசியமென்று இப்போது யாரும் நினைக்கவே இல்லையே!

* * *

“**கா**ப்பி ஹோட்டல்காரர்கள் கிராமபோனையும் ரேடியோவையும் அடிக்கடி வைத்து இரைச்சல் உண்டாக்குவதை நகர சபைகள் தடுக்க வேண்டும்” என்று ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் திருச்சி நகரசபை தமக்கு அளித்த உபசாரப் பத்திரத்தின்போது கூறியிருக்கிறார்.

இதைக் கேள்விப்பட்ட சென்னை ஹோட்டல் முதலாளி ஒருவர் கூறுவதாவது: “அப்படியா சேதி? சென்னைக் கார்ப்பரேஷனில் நடக்கும் அமளியையும் இரைச்சலையும் விடவா எங்கள் ரேடியோவும் கிராமபோனும் அதிக இரைச்சல் போடுகின்றன?”

* * *

“**எ**ன்ன ஸார், உடம்புக்கு?” என்று கேட்டாராம் ஒருவர்.

“ஒன்றும் இல்லை; வயிற்று வலி” என்றாராம் மற்றவர்.

“அப்படியா? — என்ன சாப்பிட்டீர்கள் அப்படி வயிற்றை வலிப்பதற்கு?”

“ஏதோ மண்ணாங்கட்டியைச் சாப்பிட்டேன்!”

இது சமீப காலம்வரை ஒரு ஹாஸ்யத் துணுக்காக விளங்கி வந்தது. இப்போது நிஜத் துணுக்காகவே ஆகிவிட்டது.

மண்ணாங்கட்டியுடன் ஏதோ ஒன்றிரண்டு அரிசியையும் சாப்பிட்டு வருகிறோம்.

இந்த மண்ணாங்கட்டிப் பிரபாவம் டில்லியில் உள்ள நம்முடைய உணவு மந்திரி ஸ்ரீ ஜெயராம்தாஸ் தௌலத்ராம் காதுக்குக்கூட எட்டிவிட்டது. இனிமேல் உணவுப் பொருள்கள் முற்றிலும் உணவுப் பொருள்களாகவே ஜனங்களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று அவர் மாகாண சர்க்கார்களுக்குச் சுற்றறிக்கைகள் அனுப்பியிருக்கிறாராம்.

இந்தச் சுற்றறிக்கையைப் பார்த்துவிட்டு ஸ்ரீமான் பேராசை வியாபாரி முணுமுணுக்கும் சத்தம் கேட்கிறது. “என்ன ஸார் இது! உணவு உற்பத்தியைப் பெருக்க ஜயராம்தாஸ் தௌலத்ராமினால் முடியவில்லை; மாகாண சர்க்கார்களாலும் முடியவில்லை. ஏதோ எங்களால் ஆன அளவில் உணவு உற்பத்தியைப் பெருக்கலாம் என்று நினைத்தால் அதற்கும் முட்டுக்கட்டை போடுகிறாரே இந்த தௌலத்ராம்!”

* * *

**ப**ஸ் டிக்கட்டுகளுக்குப் பரிசு கொடுப்பதென்று சென்னை சர்க்கார் போக்குவரத்து இலாகா முடிவு செய்திருக்கிறது.

முதல் பரிசு முப்பது ரூபாயாம்; இரண்டாவது பரிசு இருபது ரூபாயாம்.


இது ஒரு லாட்டரியைப் போலிருக்கிறது என்று பலர் கண்டிக்கத் தொடங்கியதும், போக்குவரத்து இலாகா அதை மறுத்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில் லாட்டரிக்கும் மேற்படி பரிசுத் திட்டத்துக்கும் உள்ள வித்தியாசத்தை அந்த அறிக்கை விளக்கியிருக்கிறது.

லாட்டரிக்குத் தனியாகக் கட்டணம் வசூலிப்பதுண்டாம்; பஸ் டிக்கட் பரிசுக்காகத் தனியாகக் கட்டணம் வசூலிப்பதில்லையாம்.

“அப்படியா? தனியாக வேறு கட்டணம் வசூலிக்க வேண்டுமா? கனம் கோபால் ரெட்டி பஸ் கட்டணத்தை உயர்த்திய பிறகு அது பஸ் கட்டணமாகத் தோன்றவில்லை; லாட்டரிச் சீட்டுக் கட்டணமாகத்தானே தோன்றுகிறது!” என்று அபிப்பிராயப் படுகிறார் ஒரு பஸ் பிரயாணி.

# திருவாரூர்த் திருவிழா

சிலகாட்சிகள்



தமிழ்த் திருநாள்



# திருவாரூர்த் திருவிழா

**ரா. கி.**

[சென்ற வாரத் தொடர்ச்சி]

திருவாரூர்த் தமிழ்த் திருவிழாவின் இலக்கியப் பகுதி மகாநாடு சவிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

"காட்டில் பல யானைகள் இருக்கின்றன. ஆகையால் 'ஒரு யானையை நான் கண்டேன்' என்று சொல்வதில் பொருள் உண்டு. கடையிலே பல புத்தகங்கள் இருக்கின்றன. ஆகையால் 'நேற்று ஒரு புத்தகம் வாங்கினேன்' என்று சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால், 'இன்று காலையில் ஆற்றங்கரைக்குப் போனேன். கிழக்கே ஒரு சூரியனைக் கண்டேன்' என்று யாராவது சொல்வார்களா? சூரியன் ஒன்றே ஒன்றுதான்! ஆகையால் 'ஒரு சூரியன்' என்று சொல்லுவதில்லை. இதுபோலவே, ஒரு சாதகன் தத்துவ விசாரணை செய்துகொண்டிருக்கும் வரையில் 'உலகில் கடவுள், ஜீவன் என்று இரண்டு பொருள் இல்லை; இரண்டும் ஒன்றுதான்!" என்று சொல்லி வருகிறான். விசாரணை முடிந்து ஆத்மானுபவம் ஏற்படும் போது அந்த 'ஒன்று'ம் மறைந்துவிடுகிறது. முதலில் சாதகனுக்கு இரண்டு என்பது இல்லையாகிறது; பிறகு ஒன்றும் இல்லையாகிவிடுகிறது!" — இந்த அற்புதமான உண்மையைக் கொண்டு 'கமலை' என்னும் திருவாரூரில் எழுந்த பாடல் ஒன்றை ரவிகமணி பாடிக்காட்டிப் பொருளையும் விளக்கினார். அந்தப் பாடல் வருமாறு:—

ஆய்வார் பதிபசு
　　பாசத்தின் உண்மையை;
　　　　ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச
　　வாழ்க்கையெல்லாம்; கல்வி
　　　　கேள்வி அல்லல்
ஓய்வார்; சிவானந்த
　　வாரியுளே இரண்டும்
　　　　ஒன்றும் அறத்
தோய்வார் கமலையுள்
　　ஞானப்பிர காசன்மெய்த்
　　　　தொண்டர்க ளே!

இலக்கிய மகாநாட்டில் ரவிகமணியின் தலைமை உரைக்குப் பிறகு வெவ்வேறு விஷயங்களைப் பற்றிப் பல இனிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. டாக்டர் மு. வரதராஜனார் "சிலப்பதிகாரம்" பற்றி அழகான சொற்பொழிவு நிகழ்த்தினார். "மதுரையின் வீதியில் ஒரு பெண் குரல் கேட்டது!" என்று அவர் சொற்பொழிவைத் தொடங்கியவிதம் நாடகப் பண்புடன் இலங்கிற்று. திரு ரா. பி. சேதுப்பிள்ளை சொல்லாராய்ச்சியைக் குறித்து இனிய தமிழில் கேட்போர் செவி குளிர உரையாடினார். ஸ்ரீ சேதுப் பிள்ளையின் 'ஊரும் பேரும்' என்னும் நூலைப் படித்தவர்கள் அவர்களுடைய சொல்லாராய்ச்சிச் சொற்பொழிவு எவ்வளவு ரஸமாயிருந்திருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம். திரு கே. பாலசுப்பிரமணிய ஐயர் தமிழில் உள்ள சமயப் பாடல்களைக் குறித்துப் பக்திச் சுவை சொட்டப் பேசினார். ஸ்ரீமதி சீலாவதி அம்மையார் பெண்மைக்குரிய பெருந் தகைமையுடன் கம்பராமாயணத்தின் பெருமையை எடுத்துப் பேசினார். இலக்கிய மகாநாடு இனிது நடந்தேறியது.

• • •

இந்த ஆண்டு தமிழ்த் திருவிழாவின் தலைவர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார். ஸ்ரீ ரெட்டியாரின் தலைமைச் சொற்பொழிவில் அவருடைய இலக்கியப் பற்று நன்கு வெளியாயிற்று. ஸ்ரீ ரெட்டியாரின் முடிவுரையில், அவர் வெறும் வாய்ப்பேச்சுடனில்லாமல் தீர்மான முறையில் செயலாற்றுவதில் எவ்வளவு ஊக்கம் கொண்டவர் என்பது வெளியாயிற்று. எல்லாவற்றையும் விட, சபையோரின் உற்சாகத்திலிருந்து ஸ்ரீ ரெட்டியார் தமது இரண்டு வருஷத்து நேர்மையான ஆட்சியின் மூலம் தமிழ் மக்களின் உள்ளத்தில் எவ்வளவு இடம் பெற்றிருக்கிறார் என்பதும் வெளியாயிற்று.

இந்திய சர்க்காரின் ரயில்வே உதவி மந்திரி ஸ்ரீ கே. சந்தானம் திருவாரூர்த் திருவிழாவைத் திறந்து வைப்பதற்காகப் புது டில்லியிலிருந்து விஜயம் செய்திருந்தார். சோழவளநாடு தம் காலத்தில் அளித்திருக்கும் தலைசிறந்த அறிவாளிகளில் ஸ்ரீ கே. சந்தானம் ஒருவர். சென்ற வருஷம்



குமாரி பத்மினியும் குமாரி ஹேமா மாலினியும் தமிழ்த் திருவிழாவில் இன்னிசை விருந்து அளித்தார்கள்.

மதுரையில் நடந்த தமிழ் விழாவில் ஸ்ரீ கே. சந்தானம் எழுதிய "செல்வம்" என்னும் நூல் ஐந்நூறு ரூபாய் பரிசு பெற்ற விவரம் நேயர்கள் பலருக்கு நினைவிருக்கலாம்.

ஸ்ரீ கே. சந்தானம் திறப்பு விழாப் பிரசங்கத்தில் ஒரு மொழிக்கு இருக்க வேண்டிய முக்கியமான குண நலன்களை வரிசைப் படுத்திக் கூறினார். (1) தெளிவு (2) அழகு (3) இனிமை (4) காம்பீர்யம் (5) சக்தி ஆகிய முக்கிய அம்சங்கள் எல்லாம் தமிழில் உள்ளன என்றும், இத்தகைய தமிழ் மொழியைத் தற்காலத்துக் குரிய முறையில் வளர்ப்பது நம் கடமை என்றும் எடுத்துக் காட்டினார். "ஒருவன் ஒருத்தியைக் காதலித்தான்! கலியாணம் செய்து கொண்டான்!" என்பது போன்ற மட்டமான கதைகளை எழுதிவிட்டுத் தமிழ் வளர்த்து விட்டதாக எண்ணிக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை செய்தார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கொள்கையும் இதுதான். இந்த வருஷ ஆண்டு விழாவில் ஏழு துறைகளில் ஏழு நூல்கள் எழுதியவர்களுக்கு ஏழு ஐந்நூறு ரூபாய்ப் பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசு பெற்ற நூல்களைப் பற்றிய விவரம் கீழே காண்க:—

| விஷயம் | நூலின் பெயர் |
|---|---|
| 1. கவிதை | இசைவெள்ளம் |
| 2. கணிதம் | வகையீட்டு கணிதம் |
| 3. சிறுவர் இலக்கியம் | குழந்தை எப்படிப் பிறக்கிறது? அப்பாவும் மகனும் |
| 4. சுகாதாரம் | உயிரணுக்களின் உலகம் |
| 5. கல்வி | கல்வி |
| 6. இயற்கை நூல் | நமது பூமி—விழி ஜீவசரித்திரம்—மனிதன் வரை |
| 7. விவசாயம் | காய்கறித் தோட்டம் |

பரிசு பெற்ற மேற்படி ஏழு நூல்களில் ஒன்றாவது "ஒருவன் ஒருத்தியைக் கலியாணம் செய்து கொண்ட கதை" அல்ல என்பதை நேயர்கள் கவனிக்கலாம்.

தமிழ்த் திருவிழாவில் மிக முக்கியமான நிகழ்ச்சி, நூல்களுக்குப் பரிசு வழங்குவது தான் என்று சொல்ல வேண்டியதில்லை. கழகத்தின் தலைவர் ஸ்ரீ டி. என். அவிநாசிலிங்கம் அந்தத் திருப்பணியை நிறைவேற்றினார். பரிசு கொடுக்கும் சமயத்தில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு வீரநிரக்கள் செறிந்து ஆவேச மயமாக இருந்தது. தமிழ் வளர்ச்சியிலும் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திலும் ஸ்ரீ டி. என். அவிநாசிலிங்கம் அளவற்ற ஆர்வம் கொண்டிருக்கிறார். அவருடைய முயற்சிகளுக்குத் தக்க உதவி புரிவது தமிழன்பர்களின் கடமையாகும்.

பரிசு பெற்ற அறிஞர்களின் உருவப் படங்களை அடுத்த பக்கத்தில் காணலாம்.

* * *

திருவிழாவில் மற்றொரு சிறப்பான நிகழ்ச்சி ஆஸ்தான கவிஞர் நாமக்கல் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்குச் செய்த உபசாரம். கவிஞருக்கு மாலை சூட்டி வெள்ளித் தட்டுப் பரிசளிக்கப்பட்டது. பரிசைப் பெற்றுக்கொண்ட ஆஸ்தான கவிஞர் தற்கால நிலைமையில் தமிழை வளர்க்கும் வழிகளைப் பற்றிய அருமையான பாடல் ஒன்றைப் பாடிச் சபையை மகிழ்வித்தார்.

* * *

சென்னை சர்க்காரின் சார்பாக உணவு மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்களும் மராமத்து இலாகா மந்திரி கனம் பக்தவத்ஸலம் அவர்களும் திருவிழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். டாக்டர் ராஜன் விஞ்ஞானப் பகுதி மகாநாட்டையும்

கனம் பக்தவத்ஸலம் சரஸ்வதி மகால் புத்தக சாலைக் காட்சியையும் திறந்து வைத்தார்கள்.

• • •

திருவிழாவில் முதல் நாள் மாலை குமாரி பத்மினியும் குமாரி ஹேமா மாலினியும் சபையோருக்கு இசைத்தமிழ் விருந்து அளித்தனர். பத்மினியும் மாலினியும் சென்னை மாகாணப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரீ வி. கே. விஜயராகவன் ஐ. பி. எஸ். அவர்களின் புத்திரிகள். குமாரி ஹேமா மாலினி பரத நாட்டியக்கலையில் புகழ் பெற்றவர். சகோதரிகள் இருவரும் சேர்ந்து இனிய குரலில் இழைந்து பாடுவது வெகு அழகாயிருக்கிறது. நல்ல தஞ்சாவூர்ச் சங்கீத பாணியில் சுருதி சுத்தமாகவும் அக்ஷர சுத்தமாகவும் பாடுகிறார்கள். "அருள் புரிவாய்" என்னும் கீர்த்தனத்தில் ஆரம்பித்து "வாழிய செந்தமிழ்" பாடி முடித்தவரையில் அந்த மாபெரும் சபையில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் இனிமையான தமிழ் இசை இன்பத்தில் மூழ்கியிருந்தார்கள்.

வருங்காலத்தில் குமாரிகள் பத்மினியும் ஹேமாவும் இசை உலகில் நல்ல முன்னேற்றம் அடைந்து பெரும் புகழ் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

• • •

இரண்டாம் நாள் இரவு ஸ்ரீ டி.கே.எஸ். சகோதரர்கள் தமிழகமெல்லாம் புகழ்பெற்ற ஔவையார் நாடகத்தை நடத்தித் தமிழ்த் திருவிழாவைச் சிறப்பித்தார்கள். கணக்கற்ற மக்கள் கண்டு களித்தனர்.

• • •

திருவிழா இரண்டு நாளும் காலையில் குறைந்தபட்சம் பத்தாயிரம் பேரும் மாலையில் முப்பதினாயிரம் ஜனங்கள் வரையிலும் வந்து கலந்து கொண்டிருப்பார்கள் என்று மதிப்பிட்டேன். இவர்களில் வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் சுமார் ஐயாயிரம் பேர் இருக்கலாம். தஞ்சை ஜில்லாவுக்கு வெளியிலிருந்து இரண்டாயிரம் அன்பர்கள் வந்திருப்பார்கள். இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த தமிழன்பர்கள் சிலரையும் பார்த்தேன்.

தமிழ் சம்பந்தமான எந்தத் திருவிழாவும் செட்டிநாட்டு அன்பர்கள் வராமல் சிறப்படைவதில்லை. செட்டிமார் நாட்டிலிருந்து இந்த விழாவுக்குச் சுமார் இருநூறு பேர் வந்திருந்தார்கள். சொற்பொழிவுகளில் ரஸிக்க வேண்டிய இடத்தில் ரஸித்தும் கைதட்ட வேண்டிய இடங்களில் கைதட்டியும் சபையில் கலகலப்பை உண்டாக்கித் திருவிழாவுக்கு உயிர் கொடுத்து வந்தவர்கள் செட்டி நாட்டு அன்பர்கள் தான்.

• • •

திருவிழாவை நடத்தியவர்களைப் பற்றிக் கடைசியாகச் சொல்வது தானே முறை? எத்தனையோ தமிழ் விழாக்களும் திருவிழாக்களும் இதுவரை நான் பார்த்துத்தானிருக்கிறேன். திறமையான ஏற்பாடுகளிலும் வெளியூரிலிருந்து வந்தவர்களை உபசரிப்பதிலும் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதிலும் திருவாரூர்த் திருவிழாவுக்கு இணையாக வேறு எங்கேயும் நடந்ததில்லை. வெளியூர்களிலிருந்து வந்தவர்களுக்குத் தனித்தனியாக நாலு இடத்தில் ஜாகை வசதி; குளிக்க வசதி; காலா காலத்தில் சிற்றுண்டி, சாப்பாடு; கூடுமான இடங்களில் எல்லாம் மின்சார விசிறிகள்; ஆயிரக்கணக்கான பனை ஓலை விசிறிகள். இப்படிச் சகல சௌகரியங்களும் அளிக்கப்பட்டன. இராத்திரியில் தொட்டிலில் போட்டு ஆட்டித் தூங்கப் பண்ணவில்லை என்பது ஒன்றுதான் குறை. வேறு குறை ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

மகாநாட்டுப் பந்தலைப் பார்ப்பதற்குப் பதினாயிரம் கண்கள் வேண்டும். மழைக்கும் வெய்யிலுக்கும் காற்றுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பிரம்மாண்டமான கொட்டகை. அதில் வேய்ந்திருந்த கீற்றுக்கள் ஒரு லட்சம் இருக்கும்! அதில் உபயோகித்திருந்த சவுக்குக் கழிகளுக்குப் பல சவுக்கு மரத் தோப்புகளை வெட்டித் தீர்த்திருக்க வேண்டும்.

பகலிலும் இரவிலும் மெர்க்குரி தீபங்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியாக ஒளி வீசி ஜொலித்துக் கொண்டிருந்தன. எங்கெங்கும் மின்சார விசிறிகள் சுழன்றன.

பிரசங்க மேடையாகவும் அரங்க மேடையாகவும் உபயோகிக்கப்பட்ட விசாலமான மேடை அமைப்பதற்கு ஆயிரம் ஆட்கள் வேலை செய்திருக்க வேண்டும்.

பொதுவாக, காங்கிரஸ் மகாசபை வைபவத்தைப் போல் அவ்வளவு பிரமாதமாகத் தமிழ்த் திருவிழா நடைபெற்றது.


இப்படியெல்லாம், வேறு யாரும் செய்யலாம் என்றே நினைக்க முடியாத முறையில் தமிழ்த் திருவிழா ஏற்பாடுகளைச் செய்தவர் வடபாதிமங்கலம் ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார். அவருக்கு உறுதுணையாக இருந்து தைரியம் கொடுத்து எல்லாக் காரியங்களையும் நடத்திக் கொடுத்தவர் அண்ணாசாமி ஸ்ரீ அ. வேதரத்தினம் பிள்ளை. ஸ்ரீ வேதரத்தினம் அவர்களின் வரவேற்பு உரை ஓர் இனிய தமிழ்ப்பொழிவாயிருந்தது.

கணிதம்



டி.கே. மாணிக்கவாசகம்

கவிதை




எம்.பி. சோமசுந்தரம்

சிறுவர் இலக்கியம்



பொ. திருகூடசுந்தரம்

கல்வி



கே. எஸ். நாகராஜன்

சுகாதாரம்



அ. வெ. சுப்பிரமணியம்

இயற்கை நூல்



ஜமதக்னி

ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார் அவர்களுக்கு மற்றும் உதவி புரிந்த இளைஞர்களில், காப்டன் நாராயணசாமிப் பிள்ளை (ஐ. என். ஏ.), ஸ்ரீ அய்யப்ப முதலியார் ஆகியவர்கள் என் மனக்கண் முன்பு வருகிறார்கள். இன்னும் நூற்றுக் கணக்கான தொண்டர்கள் மகாநாடு சிறப்பாக நடப்பதற்குத் தொண்டு புரிந்திருக்க வேண்டும்.

மொத்தத்தில், சடையப்ப வள்ளலின் சந்ததிகள் இன்னும் சோழநாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைத் திருவாரூர்க்காரர்கள் நிரூபித்து விட்டார்கள்.

ஸ்ரீ தியாகராஜ முதலியார் வயதில் இளைஞர். ஆனால் காரியத் திறமையில் முதிர்ந்தவர் என்று தெரிந்தது. வடபாதி மங்கலம் பற்றித் தமிழ்நாடு அறியும். பெருஞ்செல்வம் படைத்த குடும்பம். செல்வம் படைத்த பயன் என்ன என்பதை ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார் இந்தத் தமிழ் விழாவிலே கண்டுகொண்டார். பொது ஊழியத்தில் ஏற்படும் இணையில்லாத இன்பத்தையும் அறிந்து கொண்டார். ★

மகாநாடு சம்பந்தமான எல்லா ஏற்பாடுகளையும் தாமே கவனித்துச் செய்தார். அவருடைய மாளிகைகள், பிற கட்டிடங்கள், ஆள் படை வசதிகள், மோட்டார் வண்டிகள், நெற்களஞ்சியங்கள், செல்வாக்கு, சிநேக உரிமை, சொந்த சாமர்த்தியம்,—எல்லாவற்றையும் சில தினங்கள் தமிழ்த் தாய்க்கே உரிமை யாக்கி யிருந்தார். பிரதிநிதிகள் இறங்கியிருந்த ஒவ்வொரு ஜாகைக்கும் பல தடவை நேரில் போய்ப் பார்த்துப் பிரதிநிதிகளின் வசதிகளைக் கவனித்துக் கொண்டார்.

இதையெல்லாம் ஸ்ரீ தியாகராஜ முதலியாரின் தகப்பனார் ஸ்ரீ ரங்கநாத முதலியார் அவர்கள் பார்த்துக் களித்தார்கள்.

**"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல் என்னும் சொல்!"**

என்ற பொய்யா மொழியின் உண்மையை அன்று நேரில் பார்த்து மகிழ்ந்தோம்.

* * *

"தமிழ்த்தாய் வாழ்க!" என்று காரைக்குடி திரு சா. கணேசன் அவர்கள் எழுப்பிய பெருமுழக்கத்துடன் திருவாரூர்த் தமிழ்த் திருவிழா இனிது நிறைவேறியது. ஆதிசிவன் பெற்ற தமிழன்னை விரைவில் மகோன்னதமான சிங்காதனத்தில் வீற்றிருக்கப் போகிறாள் என்பதில் ஐயமில்லை.

★ ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார் தமிழ் விழாவுக்கு வந்திருந்த தமிழ் அன்பர்களைக் கரங்கூப்பி முகமலர்ச்சியுடன் வரவேற்கும் காட்சியை அட்டைப் படத்தில் காணலாம்.




பன்னிரண்டாம் அத்தியாயம்

## சீதாவின் பெருமிதம்

"சீதா! வாடி, அம்மா! நான் சகல விஷயமும் கேள்விப்பட்டேன்! மாப்பிள்ளை இந்த எலெக்ஷனிலே ஜயிக்கிறதற்காக நீ ரொம்பப் பாடுபடுகிறாயாம். எனக்கு ரொம்ப சந்தோஷம். சொந்த மனுஷான் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? இந்த மாதிரி சமய சந்தர்ப்பத்துக்கு ஒத்தாசை செய்வதற்காகத்தானே பந்துக்கள் வேண்டும் என்கிறது?" என்றாள் சரஸ்வதி அம்மாள்.

சூரியா சொன்னதிலிருந்து மாமியின் மனோபாவத்தைச் சீதா கொஞ்சம் தெரிந்து கொண்டிருந்தபோதிலும் சரஸ்வதி அம்மாள் இவ்வளவு அன்பும் ஆதரவுமாகப் பேசியது சீதாவுக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. ஆயினும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் "மாமி! நீங்கள் வந்து விட்டீர்கள் அல்லவா! என்னுடைய தலைப் பொறுப்பு நீங்கியது. இனிமேல் எல்லாம் உங்கள் பாடு! இன்னும் இரண்டு நாளில் நான் ஊருக்குக் கிளம்ப வேண்டும்!" என்று சொன்னாள்.

"ஊருக்குக் கிளம்புகிறாயா? அழகாய்த்தானிருக்கிறது! நான் வந்து விட்டேனே என்று சொல்கிறாயா? நான் நாளைக்கே ஊருக்குப் போய் விடுகிறேன், சீதா!......"

"மாமி! மாமி! சத்தியமாய் நான் அதற்காகச் சொல்லவில்லை. உங்கள் பேரில் எனக்கு என்ன விரோதமா? எப்போதாவது உங்களுடைய வார்த்தையை எதிர்த்து நான் ஏதாவது சொல்லியிருக்கிறேனா? உண்மையாகவே நான் ஊருக்குப் போக வேண்டும் என்றிருக்கிறேன்......"

"எல்லாம் மாப்பிள்ளைக்கு எலெக்ஷன் ஆன பிற்பாடு போகலாம். நீ சொல்லித்தான் மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு நிற்கிறாராம். நீ மீட்டிங்கில் பேசுகிறாயாம்; பாடுகிறாயாம். உன்னால்தான் மாப்பிள்ளைக்குச் சேர்மன் வேலை ஆகப்போகிறதென்று இந்த ஜில்லாவெங்கும் பேச்சாயிருக்கிறது. அப்படியிருக்க, நீ திடீரென்று ஊருக்குப் போகிறேன் என்றால், மாப்பிள்ளைக்கு யார் ஒத்தாசை செய்வார்கள்?"

"மாமி! உங்களுடைய மாப்பிள்ளைக்கு யாருடைய ஒத்தாசையும் வேண்டியதில்லை. அவருடைய சாமர்த்தியத்துக்கு இன்னொருத்தருடைய ஒத்தாசை எதற்கு? அதிலும் என்னால் என்ன பிரமாதமாகச் செய்துவிட முடியும்? உங்களுடைய பெண் லலிதா அடிக்கடி 'அஸ்து' சொல்லாமலிருந்தால் மாப்பிள்ளைக்கு அதுவே பிரமாத ஒத்தாசையாக இருக்கும். இந்த அதி

சயத்தைக் கேளுங்கள், மாமி! உங்கள் மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு நிற்கிறது பற்றி இந்தத் தேவபட்டணத்தில் உள்ள அத்தனை ஜனங்களும் சந்தோஷப் படுகிறார்கள். யாரிடம் இவர் போனாலும் 'உங்களுக்குத்தான் எங்களுடைய வோட்டு!' என்று சொல்கிறார்கள். ஆனால் லலிதாவுக்கு மட்டுந்தான் இது ஒன்றும் பிடிக்கவில்லை. ஓயாமல் முணு முணுத்துக் கொண்டிருக்கிறாள். மாப்பிள்ளை எலெக்ஷனுக்கு நின்றதினால் ஏதோ குடிமுழுகிப் போய்விட்டது போல் சண்டை பிடிக்கிறாள். அவருக்கும் 'சீ!' என்று போய்விடுகிறது! அவர் மனம் வெறுத்து 'எனக்கு இந்த எலெக்ஷனும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம்; எங்கேயாவது காசி ராமேசுவரத்துக்குப் போய்விடுகிறேன். இல்லாவிட்டால் திருவண்ணாமலைக்குப் போய் ரமண ரிஷிகளின் ஆசிரமத்தில் சேர்ந்து விடுகிறேன்' என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார். இன்று காலை முதல், பாருங்கள், இரண்டுபேருக்கும் ஓரே சண்டை!..."

சரஸ்வதி அம்மாள் கோபத்தோடு தன் குமாரி லலிதாவைப் பார்த்து, "ஏண்டி, லலிதா! இப்படித்தான் செய்கிறதோ? அழகாயிருக்கிறதடி! உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன? அல்லது யாராவது கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொண்டு கூத்தடிக்கிறாயா? இனிமேல் அக்ரமாதிரியெல்லாம் வாயைத் திறந்து சொல்லக்கூடாது! தெரிகிறதா? ஏதாவது சொன்னாயோ நானே நாலு அறைகொடுத்து உன்னை ஒரு அறையில் போட்டுப் பூட்டிவிடுவேன். இல்லாவிட்டால், இந்த எலெக்ஷன் முடிகிற வரையில் ராஜாம்பேட்டைக்குப் புறப்பட்டுப் போய்விடு!"

"சரி, அம்மா! நான் போய்விடுகிறேன்!" என்று லலிதா விளையாட்டுப் புன்சிரிப்புடன் கூறினாள்.

"பார்த்தீர்களா, மாமி, இவள் சொல்வதை? ஊருக்குப் போய்விடுகிறாளாம்! நன்றாயிருக்கிற தல்லவா கதை? நாளைக்கு மாப்பிள்ளை எலெக்ஷனில் ஜயித்ததும், இவளைச் 'சேர்மனுடைய ஒயிப்' என்றும், 'மிஸ்ஸஸ் சேர்மன்' என்றும் கொண்டாடப் போகிறார்களா? வேறு யாரையாவது கொண்டாடப் போகிறார்களா? டீ பார்ட்டிகளுக்கும் டின்னர்களுக்கும் இவளை அழைத்து மாலை போடப் போகிறார்களா? வேறு யாரையாவது அழைத்து மாலை போடப் போகிறார்களா? 'எங்கள் வீட்டுக் கலியாணத்துக்கு வரவேண்டும்' 'எங்கள் வீட்டுக் கிரஹப் பிரவேசத்துக்கு வரவேண்டும்' என்று இவளை வருந்தி வருந்தி அழைக்கப் போகிறார்களா? வேறு யாரையாவது அழைக்கப் போகிறார்களா? குரூப் போட்டோவில் இவள் அகத்துக்காரர் பக்கத்தில் ஜம்மென்று உட்காரப் போகிறாளா? வேறு யாராவது உட்காரப் போகிறார்களா? அதெல்லாம் தெரியாமல் இவள் ஓயாமல் ஏதாவது நிஷ்டூரம் சொல்லிக் கொண்டிருக்கிறாள். கொஞ்சம் இவளுக்கு நீங்கள் புத்தி சொல்ல வேண்டும்!"

"கொஞ்சம் சொல்கிறது, என்ன? நிறையச் சொல்லுகிறேன். இவள் மாத்திரந்தான் இப்படி என்று நினைக்காதே. இவளுடைய அண்ணா இருக்கிறானே, உன்னுடைய அம்மாஞ்சி சூரியா, அவனும் இப்படித்தான் ஏதாவது உளறிக்கொண்டிருக்கிறான். எலெக்ஷனுக்கு நின்று விட்டதால் ஏதோ குடி முழுகி விட்டது போல உளறுகிறான். 'வாயை மூடிக்கொண்டிரு! மாப்பிள்ளையிடம் ஏதாவது உளறி வைக்காதே!' என்று கண்டித்து அவனை அழைத்துக் கொண்டு வந்தேன். அண்ணாவும் தங்கையும் ஒரே அச்சு. இரண்டுபேரும் அப்பாவைக் கொண்டு பிறந்து விட்டார்கள்! பிதிரார்ஜித நிலங்களையெல்லாம் பிரித்து ஆட்படைகளுக்குக் கொடுத்து விட வேண்டும் என்று சொன்னார் பாரு! அப்பாவைப் போலத்தான் பெண்ணும் பிள்ளையும் இருப்பார்கள். எலெக்ஷனுக்கு நிற்கக் கூடாதாம்; பணங்காசு சம்பாதிக்கக் கூடாதாம். ஆனால் ஜெயிலுக்கு மட்டும் போக வேண்டுமாம்! அடியே, சீதா! உனக்கு இருக்கிற புத்தியிலே எட்டிலே ஒன்று இவர்களுக்கு இருக்கக் கூடாதா?"

சீதாவின் உடம்பு பூரித்தது; உள்ளத்தில் கர்வம் ஓங்கி வளர்ந்தது. தன்னைக் கண்டால் வேப்பங்காயைப் போலக் கசந்து கொண்டிருந்த மாமி இப்படித் தன்னைச் சிலாகிக்கும் காலம் ஒன்று வரும் என்று சீதா கனவிலும்

எண்ணிய தில்லை. அப்படிப் பட்ட காலம் வந்தே விட்டது! இதை நினைத்துச் சீதாவின் நெஞ்சம் பெருமிதத்தினால் வெடித்துவிடும் போல் விம்மியதில் வியப்பில்லை யல்லவா?

லலிதாவுக்கோ அம்மாவின் பேச்செல்லாம் ஒரு விதத்தில் கசப்பாயும் இன்னொரு விதத்தில் சந்தோஷமாயும் இருந்தது. அம்மாவின் அப்பட்டமான சுயநலப் பேச்சு கசப்பாயிருந்தது. தன் அருமைத் தோழியின் விஷயத்தில் அம்மாவின் மனோபாவம் மாறியது அவளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி அளித்தது. இந்த ஒரு நல்ல பயனுக்காகவே தன் புருஷன் தேர்தலுக்கு நின்றது சரிதான் என்று அவளுக்குத் தோன்றியது.

"அம்மா! இத்தனை நாளைக்குப் பிறகு இப்போதாவது நீ அத்தங்கா நல்லவள் என்றும் புத்திசாலி என்றும் ஒப்புக் கொண்டாயே? அதற்காக ரொம்ப சந்தோஷம்!" என்றாள்.

"அதென்ன அப்படிச் சொல்கிறாய், லலிதா! நான் எப்போதாவது உன் அத்தங்காளைப் பொல்லாதவள் என்றோ அசடு என்றோ சொல்லியிருக்கிறேனா? சீதா! நீயே சொல்லடி, அம்மா! உன்னுடைய அப்பாவும் அம்மாவும் ஒழுங்காகக் குடித்தனம் செய்து வாழவில்லையே என்று வருத்தப்பட்டுப் பேசி யிருக்கிறேன். அது ஒரு தப்பா? அதுவும் ஏதோ அபிமானத்தினால்தான் சொன்னேனே தவிர, வேறு அவர்கள் பேரில் எனக்கு என்ன வருத்தம்? எனக்கு என்ன அவர்கள் கெடுதல் செய்து விட்டார்கள்? இப்போது பாரேன்! இந்தப் பெண்ணை அநாதையாய் விட்டு விட்டு அவள் கண்ணை மூடி விட்டாள்! அந்தப் பிராமணனைப் பற்றியோ ஒன்றுமே தெரியவில்லை:.."

சீதாவுக்கு இந்தப் பேச்சு ரஸிக்கவில்லை. பேச்சை மாற்ற விரும்பி அவள் "மாமி! என்னுடைய கதை அப்புறம் இருக்கட்டும்! நான் பெண் பிறந்த வேளை அப்படி! இப்போது நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றிச் சொல்லுங்கள். இரண்டு நாளில் நான் எப்படியும் ஊருக்குப் புறப்பட வேண்டும்..." என்றாள்.

"ஊருக்குப்போகிற பேச்சை மட்டும் எடுக்க வேண்டாம், சீதா! அதுதான் முன்னமே சொன்னேனே? இந்த வீட்டில் இனிமேல் உன் இஷ்டப்படி ஏதாவது நடக்கா விட்டால் என்னைக் கேள்!" என்றாள் சரஸ்வதி அம்மாள்.

"மாமி! அதற்காக மட்டும் நான் சொல்லவில்லை. என் குழந்தை வஸந்தியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. பள்ளிக்கூடம் சாத்தப் போகிறார்கள் என்று. குழந்தையைப் பார்ப்பதற்கு நான் போக வேண்டாமா?"

"சூரியாவைப் போய் வஸந்தியை அழைத்துக்கொண்டு வரச் சொன்னால் போகிறது. அவனை நான் போகச் சொல்கிறேன். நீ மட்டும் இந்த எலெக்ஷன் முடிகிற வரையில் அந்தண்டை இந்தண்டை போகக் கூடாது."

"நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லும் போது நான் போகவில்லை, அம்மாமி! சூரியாவையே போகச் சொல்லுங்கள். ஆனால் உங்கள் பெண்ணிடம் மட்டும் சொல்லி வையுங்கள். அவள் அபசகுனம் போல் எதற்கெடுத்தாலும் 'அஸ்து' என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது......"

"லலிதாவைப் பற்றி இனிமேல் நீ கொஞ்சம்கூடக் கவலைப்பட வேண்டாம். லலிதா வாயைத் திறந்தால் நீ என்னைக் கேள். நானு அறை கொடுத்து ஒரு அறையில் தள்ளிக் கதவைப் பூட்டி விடுகிறேன். நாலு வருஷமாய் மாப்பிள்ளை வருமானமே இல்லாமலிருக்கிறார். இந்தச் சேர்மன் வேலையாவது கிடைக்க வேண்டுமே யென்று நம்முடைய குல தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டிருக்கிறேன். இவள் இனிமேல் ஏதாவது குறுக்கே சொல்லட்டும்; நான் பார்த்துக் கொள்கிறேன். நீ இத்தனை நாள் செய்ததுபோல் இனிமேலும் எலெக்ஷன் வேலையைக் கவனி! எப்படியாவது மாப்பிள்ளை ஜயித்து விடவேண்டும்! ஜயிப்பது உன்னைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். சீமாச்சு மாமா மெனக்கட்டு வந்து உன்னைப்பற்றி ஏதேதோ புகார் சொன்னார். அதையெல்லாம் நான் கேட்பேனா? 'போங்காணும்! யார் மேலாவது கோள் சொல்வதே உமக்கு வேலை! உம்முடைய வேலையைப் பாரும்!' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டேன்.

இந்தக் காலத்திலே எல்லாம் அவரவர்களுடைய சொந்தக் காரியத்தையே பார்க்கிறார்கள். சீமாச்சு மாமாவுக்கு இப்போதுள்ள சேர்மன் ஜவுளி லைஸென்ஸ் வாங்கிக் கொடுத்தாராம். அதிலே ரொம்பப் பணம் இவருக்கு லாபமாம். இரண்டு மச்சு வீடு கட்டியாகிவிட்டது! அதற்காகப் பழைய சேர்மனுக்குச் சீமாச்சு மாமா விழுந்து விழுந்து வேலை செய்கிறாராம். சிநேகம், பந்துத்வம் எல்லாம் எங்கேயோ பறந்துவிட்டது. இந்தக் காலத்திலே காசு பணந்தான் பெரிது. சீதா! உன்னைப் போலச் சொந்த மனுஷ்யாளிடம் அபிமானத்துடன் இருப்பவர்களை நான் பார்த்ததேயில்லை. இந்தப் பெண் தத்துப்பித்து என்று என்னவெல்லாமோ பேசியிருந்தும் நீ பொறுமையாயிருந்திருக்கிறாயே? அதைச் சொல்லு! உனக்கு இவள் என்ன வேணுமானாலும் செய்யலாம்! தோலைச் செருப்பாய்த் தைத்துப் போட்டாலும் தகும்!" என்று சொன்னாள் சரஸ்வதி அம்மாள்.

## பதின்மூன்றாம் அத்தியாயம்

# ராகவன் பகற் கனவு

நீலத்திரைக் கடலைக் கிழித்துக் கொண்டு நீராவிக் கப்பல் சென்று கொண்டிருந்தது. அது இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குச் சென்று கொண்டிருந்த எஸ். எஸ். எலிஸபெத் என்னும் பிரயாணக் கப்பல். அதில் நமது கதாநாயகன் சௌந்தர ராகவன் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். பெரும் பிரயத்தனம் செய்து அந்தக் கப்பலில் சௌந்தர ராகவன் இடம் பெறவேண்டியிருந்தது. மகா யுத்தம் முடிந்து ஒரு வருடங்கூட ஆகவில்லையாதலால் கப்பல்களில் பிரயாணிகளுக்கு இடங் கிடைப்பது இன்னமும் கஷ்டமாகத்தானிருந்தது.

யுத்தம் முடிந்து சில மாதத்துக்கெல்லாம் ராகவன் இங்கிலாந்துக்குச் சென்றான். போதிய காரணமில்லாமல் தன்னைச் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து நீக்கிவிட்ட அநீதிக்குப் பரிகாரம் தேடுவது அவன் இங்கிலாந்து சென்றதன் நோக்கம். என்னதான் கம்பெனி வேலை என்றாலும், அதில் சம்பளம் எவ்வளவுதான் கிடைத்தாலும் சர்க்கார் உத்தியோகத்துக்கு ஈடாகாதென்பது ராகவனுக்குச் சீக்கிரத்திலேயே தெரிந்துபோய் விட்டது. மேலும் எதற்காகத் தன்பேரில் ஒரு வீண் அபாண்டம் சர்க்கார் தஸ்தாவேஜிகளில் இருக்க வேண்டும்? யுத்தத்தில் பிரிட்டன் தோற்றுப் போய் இந்தியாவில் அரசாங்கம் மாறியிருந்தாலும் ஒருவாறு மன நிம்மதி அடைந்திருக்கலாம். ஆனால் யுத்தத்தில் பிரிட்டன் ஜயித்து இந்தியாவிலும், பிரிட்டிஷ் ஆட்சி நிலைத்திருக்கிறது! அவ்விதமிருக்கும்போது சர்க்கார் உத்தியோகத்தை எப்படி அவன் அலட்சியம் செய்ய முடியும்?

ஆரம்ப கால்த்தில் ராகவனுடைய பொருளாதார ஞானத்தை மெச்சி உத்தியோகம் கொடுத்த துரை இங்கிலாந்திலேதான் அச்சமயம் இருந்தார். அவரிடம் தன்னுடைய கட்சியைச் சொல்லி முறையிட்டுச் சிபார்சு பெறலாம் என்ற ஆசை அவனுக்கு இருந்தது. அந்த ஆசை எவ்வளவு வீண் ஆசை என்பது இங்கிலாந்துக்குப் போன பிறகுதான் தெரிந்தது.

யுத்தத்தின்போது ஜெர்மன் விமானங்கள் இங்கிலாந்தில் பெரும் பகுதியைப் பாழாக்கியிருந்தன. கோடானு கோடி பணம் யுத்தத்தில் செலவான காரணத்தினால் இங்கிலாந்து 'இன்ஸால்வெண்ட்' ஆகிவிடுமோ என்று பயப்படும்படியான நிலைமையில் இருந்தது. ஆங்கில மக்கள் போதிய உணவில்லாமலும் உடையில்லாமலும் மற்ற வாழ்க்கை வசதிகள் இல்லாமலும் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தார்கள். லட்சக்கணக்கான ஜனங்கள் குடியிருப்பதற்குக் கூரையுள்ள இடம் இல்லாமல் வெளியில் காய்ந்து மழையில் நனைந்து குளிரில் விறைத்துக் கொண்டிருந்தார்கள். செத்துப் போனவனுடைய உடம்பில் புத்துயிர் ஊட்ட முயற்சி செய்வதைப் போன்ற அசாத்தியமான புனருத்தாரண முயற்சியில் ஆங்கில மக்களும் ஆங்கில சர்க்காரும்

ஏகோபித்து ஈடுபட்டிருந்தார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் ராகவனுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றி யார் உருகிக் கண்ணீர் வடிப்பார்கள்? அவனுடைய குறையைக் காதிலேதான் யார் வாங்கிக் கொள்வார்கள்?

ராகவனுக்கு உத்தியோகம் கொடுத்து அவனைச் செல்லப் பிள்ளையைப்போல் நடத்திய துரை கூட இப்போது அவனுடைய புகாரை அதிகமாகப் பொருட்படுத்த வில்லை. "மிஸ்டர் ராகவன்! இங்கே நாங்கள் அன்றாடம் ஜீவனம் செய்கிற பாடே பெரும்பாடாக இருக்கிறது. பெரிய பெரிய சீமான்கள் எல்லாரும் தினந் தோறும் க்யூவில் நின்று அரைராத்தல் ரொட்டி வாங்கிக் கொண்டு வந்து காலட்சேபம் செய்ய வேண்டியிருக்கிறது. நீ உனக்கு உத்தியோகம் போனதைப் பற்றிப் பிரமாதப்படுத்துகிறாய். உன்னுடைய புகாரை எடுத்துக் கொண்டு நான் இங்கே யாரிடமாவது சிபார்சு செய்யப்போனால் என்னைப் பார்த்துச் சிரிப்பார்கள்! நீ வேலை பார்க்கும் கம்பெனியில் ஒரு வேலை கிடைத்தால் நான்கூட வந்துவிடுவேன்! இங்கே நீ வீணுக அலைந்து காலங் கழிக்காதே! இந்தியாவுக்குத் திரும்பிப் போய்க் கிடைத்திருக்கும் உத்தியோகத்தைச் சரியாகக் காப்பாற்றிக் கொள்!" என்று மாஜி வரவு செலவு இலாகாத் தலைவர் கூறிய புத்திமதி ராகவனைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. அது மட்டுமல்லாமல் துரை இன்னொரு விஷயமும் சொன்னார்:—" ராகவன்! இனிமேல் இந்தியாவில் சர்க்கார் உத்தியோகத்துக்கு முன்னைப்போல் அவ்வளவு மதிப்பு இராது. இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்து விடுவது என்று இங்கே தொழிற்கட்சி மந்திரிகள் தீர்மானம் செய்து விட்டார்கள். அது சரியான தீர்மானம்! ஏனெனில் எங்களால் இனிமேல் நாற்பது கோடி ஜனங்கள் உள்ள ஒரு தேசத்தைக் கட்டி ஆளமுடியாது. அதற்கு வேண்டிய ஆள் பலமும் வசதிகளும் இங்கே இல்லை. இந்தியா சுதந்திரம் பெற்ருல் முதலில் காங்கிரஸ்காரர்கள்தான் அதிகாரத்துக்கு வருவார்கள். காங்கிரஸ் அதிகாரத்தின் கீழ் நீ சர்க்கார் உத்தியோகம் பார்க்க விரும்ப மாட்டாய் அல்லவா?"

ராகவனுடைய உள்ளம் மேலும் குழப்பத்தை அடைந்தது. துரையின் கேள்விக்கு என்ன பதில் சொல்லுவது என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆயினும் சர்க்கார் உத்தியோகம் திரும்பக் கிடைக்கும் என்ற ஆசை போய் விட்டது! நல்ல வேளை, கம்பெனி உத்தியோகத்தை அவன் விட்டு விடவில்லை. நாலு மாதம் லீவு வாங்கிக் கொண்டுதான் வந்திருந்தான். திரும்பிப் போய்க் கம்பெனி உத்தியோகத்தை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான் என்று முடிவு செய்தான்.

இந்தியாவுக்குப் போகும் கப்பலில் இடம் கிடைப்பது மிகவும் பிரயாசையாயிருந்தது. கப்பலுக்காகக் காத்திருந்த சமயத்தில் அங்குமிங்கும் அவன் சுற்றி அலைந்தான். அப்படி அலைந்தபோது அவன் கண்ட காட்சிகளும் கேட்ட விஷயங்களும் அவனுடைய மனதில் ஆச்சரியமான ஒரு மாறுதலை உண்டாக்கின. ஆகா! இந்த இங்கிலீஷ்காரர்கள் எப்பேர்ப்பட்டவர்கள்? எத்தகைய தீரர்கள்? நாட்டின் சுதந்திரத்துக்காக என்னவெல்லாம் கஷ்டப்பட்டிருக்கிருர்கள்? நாட்டின் சுபிட்சத்துக்காக எப்படியெல்லாம் பாடுபடுகிருர்கள்? ஆனால் இந்தியாவில் நாம் இத்தனை காலமும் என்ன செய்து வந்தோம்? அன்னியர்களின் கீழ் அடிமை உத்தியோகம் பார்த்து வந்தோம். அதைத் திரும்பப் பெறுவதற்காகக் கெஞ்சுமணியம் செய்ய இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். சீ! இது என்ன மானங்கெட்ட பிழைப்பு? இங்கிலீஷ் படிப்பு என்னமாதிரி நம்முடைய புத்தியைக் கெடுத்துவிட்டது?—போனதற்கெல்லாம் பரிகாரமாக, பிராயச்சித்தமாக, இனிமேல் நடந்து கொள்ளவேண்டும். இந்தியாவின் சுதந்திரத்துக்காக ஏதேனும் ஒரு பிரமிக்கும்படியான காரியம் செய்ய வேண்டும்.......

எஸ். எஸ். எலிஸபெத் கப்பலின் மேல் தளத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு செளந்தரராகவன் சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோது மேற்கண்டவாறு பற்பல எண்ணங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன. மனதை அதன் போக்கிலேயே விட்ட போது, பதினைந்து வருஷங்களுக்கு

முன் கராச்சியிலிருந்து பம்பாய்க்குக் கப்பலில் பிரயாணம் செய்ததில் வந்து மனம் நின்றது. ஆகா! அந்தப் பிரயாணம் எவ்வளவு ஆனந்தமாக இருந்தது? அது பெரும்பாலும் சாமான்கள் அடுக்கிய சாதாரண நாலாந்தரமான கப்பல்தான்! இந்தக் கப்பலின் விஸ்தீரணத்திலோ கம்பீரத்திலோ அழகிலோ வசதியிலோ எட்டில் ஒரு பங்குகூட அந்தக் கப்பலில் இல்லை! ஆயினும் அந்தக் கப்பலில் அவன் அப்போது செய்த பிரயாணம் ஆகாச வெளியில் புஷ்ப ரதத்தில் தேவர் தேவியர்களுக்கு மத்தியில் கந்தர்வர்களின் கானத்தைக் கேட்டுக்கொண்டு செய்த பிரயாணத்தைப்போல் ஆனந்தமயமாயிருந்தது. காரணம், அதே கப்பலில் தாரிணியும் பிரயாணம் செய்ததுதான். அடடா! என்ன தவறு செய்துவிட்டோம்? கொஞ்சம் மனோதைரியம் காட்டிப் பிடிவாதம் பிடித்துத் தாரிணியைக் கலியாணம் செய்துகொண்டிருந்தால் வாழ்க்கை எவ்வளவு ஆனந்தமயமாயிருந்திருக்கும்?

தாரிணியிடமிருந்து மனம் சீதாவிடம் பாய்ந்தது. தாரிணியைப் புறக்கணித்தது ஒரு பிசகு என்றால், சீதாவை மணந்துகொண்டது அதைவிடப் பெரிய பிசகு. கிட்டாவய்யர் மகள் லலிதாவைக் கலியாணம் செய்துகொண்டிருந்தால் இல்வாழ்க்கை நிம்மதியாகவாவது இருந்திருக்கும். லலிதாவைப் பார்க்கப் போன இடத்தில் இவள் குறுக்கே வந்து சேர்ந்தாள்! கண்களை அகல விரித்துப் பார்த்து நம்முடைய மதியை மயக்கி விட்டாள்! ஒரு விஷயம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். கண்ணழகிலே மட்டும் சீதாவுக்கு இணையில்லைதான். தாரிணியின் கண்களைக் காட்டிலுங்கூட சீதாவின் கண்கள் கொஞ்சம் அதிக அழகானவை என்பதில் சந்தேகம் இல்லை! ஆனால் கண்ணழகு மட்டும் ஒரு பெண்ணிடம் இருந்தால் போதுமா? போதாது என்பதற்குத் தன்னுடைய வாழ்க்கையே அத்தாட்சி! அந்தக் கண்களின் வழியாக அவளுடைய உள்ளத்தின் இயல்பைப் பார்க்கும் சக்தி தனக்கு இல்லாமற் போய்விட்டதே? சீச்சீ! என்ன சஞ்சல புத்தி? என்ன சண்டை பிடிக்கும் சுபாவம்? என்ன அசூயை? என்ன ஆத்திரம்? பெண்களின் கெட்ட குணங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பிரம்மதேவன் சீதாவைப் படைத்திருக்க வேண்டும்! 'சீதா' என்னும் பெயரைக் காட்டிலும் 'சூர்ப்பனகை' என்னும் பெயர் அவளுக்கு அதிகப் பொருத்தமாயிருக்கும்!

சீச்சீ! இது என்ன எண்ணம்? தவறு முழுதும் சீதாவினுடையதுதானா? தன் பேரிலும் தவறு இருக்கத்தான் இருக்கிறது! அவளை நடத்த வேண்டியபடி முதலிலிருந்தே நடத்தியிருந்தால் சொன்னதைக் கேட்டுக்கொண்டு அடங்கி நடந்திருப்பாள்! புதுடில்லி நாகரிக வாழ்க்கைக்கு அவளைத் தயார்ப் பண்ண யத்தனித்தது அல்லவா இப்படி வினையாக வந்து முடிந்தது? அவள் சுபாவம் கெட்டுப் போனதற்கு அந்த மடையன் சூரியாவும் ஒரு காரணம். தன்னுடைய அபிப்பிராயங்களைக் காட்டிலும் சூரியாவின் அபிப்பிராயங்கள் அல்லவா அவளுக்கு மேலாகப் போயிருந்தன? கடைசியாக எப்படிப்பட்ட படுகுழியில் கொண்டுபோய் அந்தப் படுபாவி அவளைத் தள்ளிவிட்டான்?

இந்த ஸ்திரீகளின் சுபாவமே அதிசயமானதுதான்! சூரியாவிடம் அப்படி என்ன அழகை, அற்புதத்தை, இவர்கள் கண்டு விட்டார்களோ, தெரியவில்லை. சீதாவாவது 'அம்மாஞ்சி' என்று சொல்லி உருகிக்கொண்டிருந்தாள். தாரிணிக்கும் சூரியாவுக்கும் என்ன சம்பந்தம்? அவர்களுக்குள் எப்படி சிநேகம் ஏற்பட முடியும்? ஆகா! சூரியாவைப் போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்புவிப்பதற்காகத் தாரிணி எப்பேர்ப்பட்ட சாகஸமான காரியம் செய்தாள்? என்ன துணிச்சல்? என்ன தைரியம்? இரண்டு பேரும் அன்றைக்கு மறைந்தவர்கள் அப்புறம் வெளிப்படவே இல்லை! மத்திய சர்க்காரின் துப்பறியும் இலாகா எவ்வளவோ முயன்றும் பயனில்லை! எப்படி அவர்கள் மாயமாய் மறைந்திருப்பார்கள்?

இதில் ரொம்பவும் விசித்திரமான வேடிக்கை என்னவென்றால், கல்கத்தாவில் சீதாவைத் தாரிணி என்ற பெயரால் கைதுசெய்து பாதுகாப்புச் சிறையிலே வைத்திருந்ததுதான்! இந்த விஷயம் கல்கத்தாவுக்கு வந்து கொஞ்ச

நாளைக்குப் பிறகுதான் ராகவனுக்குத் தெரிய வந்தது. ஆனாலும் அதைப் பற்றி அவன் நடவடிக்கை ஒன்றும் எடுக்க முடியாமல் இருந்தது. அவன் தாரிணி இல்லை, சீதா என்று தான் சொன்னால், அவன் ஏன் கைதியான போது அதைச் சொல்லவில்லை என்று கேட்பார்கள் அல்லவா? டில்லியிலிருந்து அவன் கல்கத்தா வந்த காரணம் என்னவென்று கேட்பார்கள் அல்லவா?—அந்தக் கேள்விகளுக்கு என்ன பதிலைச் சொல்வது? கிடக்கட்டும், கிடக்கட்டும்! சிறையிலேயே அடைந்து கிடக்கட்டும்; நன்றாகப் புத்தி வரட்டும். எல்லாருக்கும் விடுதலை கிடைக்கும்போது அவனுக்கும் விடுதலை கிடைத்து வெளி வரட்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

எப்படியிருந்தாலும் சீதாவுக்கு இன்னொரு 'சான்ஸ்' கொடுத்துப் பார்க்க வேண்டியதுதான்! அவளுடன் இல்லறம் நடத்த இன்னொரு பிரயத்தனம் செய்ய வேண்டியதுதான்!—இவ்விதம் சௌந்தர ராகவன் மனமுவந்து தயவு செய்ய எண்ணியதற்குச் சில முக்கியமான காரணங்கள் இருந்தன. ஒன்று, சீதாவுடன் தான் இல்வாழ்க்கை நடத்தாவிட்டால் பயம் என்கிற பிசாசின் வாயில் விழவேண்டியிருக்கும்! அது இருப்புச் சட்டியிலிருந்து அடுப்பு நெருப்பில் விழுவது போலாகும். இரண்டாவது காரணம், குழந்தை வஸந்தி. சீமைக்குப் புறப்படுமுன் ராகவன் சென்னைக்குத் தன் மகளைப் பார்க்கப் போயிருந்தான். அப்போது குழந்தை தன் கபடமற்ற கண்களினால் தந்தையை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, "அப்பா! அம்மாவை அழைத்து வரவில்லையா?" என்று கேட்டாள். அந்தக் கேள்வியில் தொனித்த ஆதங்கத்தை ராகவனால் மறக்கவே முடியவில்லை. குழந்தையை முன்னிட்டாவது மறுபடியும் ஒரு தடவை குடித்தனம் நடத்திப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தான். மூன்றாவதாக இன்னொரு காரணமும் இருந்தது. அது கொஞ்சம் விசித்திரமான காரணந்தான்.

ராகவன் புது டில்லியை விட்டுக் கிளம்புவதற்கு முன்னால் ஒரு நாள் இரவு பத்து மணிக்கு வீட்டுக்குள் திடீரென்று ஒரு ஸ்திரீ வந்தாள். அவளுடைய தோற்றம் அச்சத்தை அளித்தது. அதைவிட அவள் பேச்சு பயங்கரமாயிருந்தது. "நான் யார் தெரியுமா?" என்று கேட்டாள். "தெரியாது!" என்றான் ராகவன். "உன் மனைவி சீதாவின் தாயார் நான்!" என்றாள் அந்த ஸ்திரீ. ராகவன் சிரித்துக்கொண்டே "சீதாவுக்கு எத்தனை தாயார்?" என்று கேட்டான். "சிரிக்காதே! உன் சாமர்த்தியம் உன்னோடு இருக்கட்டும். சீதா என்னுடைய மகள். வயிற்றில் பெற்ற மகள் அல்ல; ஆனாலும் அதைவிட அதிகம். உன் மனைவி ஒரு ரத்தின ஹாரம் போட்டுக் கொண்டிருந்தாளே? அது இருக்கிறதா? அல்லது விற்றுச் சாப்பிட்டுவிட்டாயா?" என்று கேட்டாள். ராகவன் சிறிது வியப்பும் அச்சமும் அடைந்தான். ஆயினும் வெளிக்கு அதைரியத்தைக் காட்டிக் கொள்ளாமல், "நீ எதற்காகக் கேட்கிறாய்? நீ யார்? உன் பெயர் என்ன?" என்று அதட்டிக் கேட்டான். "சொல்கிறேன், கேள். நான் உன் மாமியார்; என் பெயர் ரஸியா பேகம்; அந்த ரத்தின ஹாரத்தை நான் சீதாவுக்குக் கொடுத்தேன். அதனாலேதான் கேட்கிறேன். அது போனால் போகட்டும். சீதாவை நீ கஷ்டப் படுத்துகிறாய் என்று எனக்குத் தெரியும். உன்னிடமிருந்து தொல்லைப் படுவதைக் காட்டிலும் சிறையிலிருப்பது மேல் என்று எண்ணி அவள் சிறைக்குப் போயிருக்கிறாள். ஒரு நாள் வெளியில் வருவாள். அப்போது அவளை நீ சரியாக நடத்திப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால் உன்னை இந்தக் கத்தியால் ஒரே குத்தாகக் குத்திக் கொன்று விடுவேன்!" என்று சொல்லி ஒரு கத்தியை எடுத்துக் காட்டினாள். ராகவன் இப்போது உண்மையாகவே பயந்து நடுங்கிப் போனான். அவனால் வாயைத் திறக்கவே முடியவில்லை. சட்டென்று ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. 'ரஜனிபூர் பைத்தியம்' என்று ஒரு ஸ்திரீ ரஜனிபூர் ராஜாவைக் கொல்லப் பார்த்தாள் என்றும் அவள் டில்லியில் திரிந்து கொண்டிருந்தாள் என்றும் அவன் கேள்விப் பட்டிருந்தான். "நீ ரஜனிபூர்..." என்று தயக்கத்துடன் அவன்

கேட்க ஆரம்பித்தவுடனே, "ஆமாம்; நான் ரஜனிபூர் மகாராணி தான்! என் அருமை மகனை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்! இல்லா விட்டால் உன்னை நிச்சயமாய்க் குத்திக் கொன்று விடுவேன்!" என்று சொல்லி விட்டு அந்த ஸ்திரீ போய் விட்டாள்.

இந்தச் சம்பவம் கொஞ்சநாள் வரையில் ராகவனுடைய மனதில் இடைவிடாமல் குடி கொண்டிருந்தது. ரஜனிபூர் வைத்தியம் என்பது யார் என்றும், அவனுக்கும் தன் மனைவி சீதாவுக்கும் என்ன சம்பந்தம் என்றும் அறிந்து கொள்ளப் பெரிதும் ஆவலாயிருந்தது. வேறு வழியில் இதைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியவில்லை. சீதாவைக் கேட்டுத் தெரிந்து கொண்டால்தான் உண்டு. நாளடைவில் ரஸியா பேகத்தின் வார்த்தைகளின் வேகம் மறைந்து விட்டாலும் இன்னமும் உண்மையை அறிந்து கொள்ளும் ஆவல் ராகவனுடைய மனதில் இருக்கத்தான் இருந்தது. அதற்காகவாவது சீதாவை மறுபடியும் கூட்டி வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தத்தானே வேண்டும்?......

கடற்காற்று சுகமாக அடித்துக் கொண்டிருந்தது. கடல் அலைகளின் ஓசை பின்னணி சங்கீதத்தைப்போலக் கேட்டுக் கொண்டிருந்தது. ராகவனுக்குக் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது. தன்னை அறியாமல் சாய்மான நாற்காலியில் படுத்த வண்ணம் அவன் தூங்கிப் போனான்.



அந்தப் பகல்தூக்கத்தில் ராகவன் ஒரு கனவு கண்டான். ஒரு பெரிய அரண்மனை. அதில் தர்பார் மண்டபம். பளிங்கு மேடையில் முத்து விதானத்தின் கீழ் அமைந்த நவரத்தின சிம்மாசனத்தில் ராணி ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். "ரஜனிபூர் மகாராணிக்கு ஜே!" என்ற கோஷம் எங்கிருந்தோ கேட்டுக் கொண்டிருந்தது. முதலில் தூரத்தில் நின்று பார்த்த ராகவன் அந்தச் சிம்மாசனத்தை நெருங்கிப் போனான். பத்து அடி தூரத்தில் சென்றதும் மகாராணி ராகவனைப் பார்த்துப் புன்னகை புரிந்து "நான் யார் தெரிகிறதா?" என்று கேட்டாள். "ரஜனிபூர் ராணி!" என்றான் ராகவன். "நன்றாய்ப் பார்!" என்றாள் ராணி. உற்றுப் பார்த்தபோது ராகவனுடைய உள்ளத்தைக் கவர்ந்த வேறொரு முகமாகத் தெரிந்தது. "ஆ! தாரிணி! நீயா?" என்று கேட்டான் ராகவன். "இன்னும் நன்றாய்ப் பார்! பார்த்துச் சொல்லு!" என்றாள் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த மாது. ராகவன் பார்த்தான்: இப்போது சீதாவின் முகமாகத் தெரிகிறது. "ஆ! சீதா! நீதானா? தாரிணி மாதிரி எப்போது மாறினாய்?" என்று கேட்டான். "நான் மாறவில்லை. உங்கள் கண்களும் மனமும் மாறி விட்டன!" என்றாள் சீதா. "நான் உன்னைக் கஷ்டப்படுத்தியதையெல்லாம் மன்னித்து விடு!" என்றான் ராகவன். "நான் உங்களைக் கஷ்டப்படுத்தியதற்கும் நீங்கள் என்னைக் கஷ்டப் படுத்தியதற்கும் சரியாய்ப் போயிற்று. ஆகையால் மன்னிப்பதற்கு ஒன்றும் இல்லை. குழந்தை

வஸந்தி எங்கே?'' என்று சிம்மாசனத்தில் கிரீடமணிந்து வீற்றிருந்த சீதா கேட்டாள். "ஆகா! வஸந்தியை மறந்து விட்டேனே? இதோ போய் அழைத்து வருகிறேன்!'' என்று ராகவன் ஓடத் தொடங்கினான். வஸந்தியை எங்கேயோ விட்டு விட்டு வந்ததாக அவனுக்கு ஞாபகம் இருந்தது. ஆனால் எங்கே என்பது நினைவில் இல்லை. ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டே குழந்தையைத் தேடிக்கொண்டு ஓடினான்.




கால் புதைந்த ஆற்று மணலைக் கடந்து ஓடினான். கடற்கரை யோரமாக ஓடினான். ஓடையில் இறங்கித் தண்ணீரில் நனைந்துகொண்டு ஓடினான். காட்டிலும் மலையிலும் ஓடினான். பெரியதொரு அரண்மனையின் மேல் மாடி முகப்பில் ஓடினான். முதலில் "வஸந்தி!'' "வஸந்தி!'' என்றி கூச்சலிட்டுக் கொண்டே ஓடினான். பிறகு கூச்சல் போடவும் முடியாமல் தொண்டை நன்றாக அடைத்துக் கொண்டது. கால்கள் தடமாடின. தலை சுற்றியது. ஒரு பெரும் பிரயத்தனம் செய்து "ஐயோ! வஸந்தி!'' என்று ராகவன் கூச்சலிட்டான்.

யாரோ தோளைப் பிடித்துக் குலுக்கினார்கள். உடனே விழிப்பு வந்து விட்டது. கனவு மயக்கத்தில் வஸந்தி தான் என்று நினைத்துக்கொண்டு "ஆ! என் கண்மணி! வந்துவிட்டாயா?'' என்று சொல்லிக் கொண்டே திரும்பிப் பார்த்தான். அவனுடைய தோளைப் பிடித்துக் குலுக்கியவள் வஸந்தி அல்லவென்றும் பாமா என்றும் தெரிந்து கொண்டான். தன் மனதிற்குள்ளே "அடி பிசாசே! சற்று நேரம் என்னைச் சும்மா விடமாட்டாயா?'' என்று சொல்லிக்கொண்டு எழுந்தான்.

மேற்படி கனவு கண்டது முதல் ராகவனுக்கு வஸந்தியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அளவின்றிப் பெருகிற்று. குழந்தையை இனிமேல் என்றைக்கும் விட்டுப் பிரிவதில்லை என்று அடிக்கடி தீர்மானித்துக் கொண்டான். கனவை நினைத்துக்கொண்டு அவளுக்கு விபத்து ஒன்றும் நேராமல் இருக்க வேண்டுமே என்று ஓயாமல் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தான்.

**ப**ம்பாய்த் துறைமுகத்தில் கப்பலிலிருந்து கீழே இறங்கிய உடனே ஆகாச விமானத்தில் ஏறிச் சென்னைப் பட்டணத்துக்குச் சென்றான். பத்மா




புரத்தில் தன் தந்தை பத்மலோசன சாஸ்திரிகளின் வீட்டை அடைந்தான். வீட்டு வாசலில் வண்டி ஒன்று காத்துக் கொண்டிருந்தது. 'யாராவது ஊருக்குப் போகிறார்களா?' என்று மனதில் நினைத்துக் கொண்டான். டாக்ஸி வண்டியின் சத்தத்தைக் கேட்டு அவனுடைய தாயார் வெளியில் வந்து பார்த்தாள். மகனை ஆவலுடன் வரவேற்றாள். "ஏண்டாப்பா! வருகிறதாகக் கடிதம்கூட எழுதவில்லையே?" என்று ஆவலாகச் சொன்னாள். ராகவன் அதைப் பொருட்படுத்தாமல், "அம்மா! யாராவது ஊருக்குப் புறப்படுகிறார்களா?" என்று கேட்டான். "ஆமாண்டா, அப்பா! நீ வருகிறது தெரியாதோ, இல்லையோ? சூரியா வந்திருக்கிறான். குழந்தை வஸந்தியை அழைத்துக் கொண்டு புறப்படுவதற்கு இருந்தான். அதற்குள் நல்லவேளையாக நீ வந்துவிட்டாய்!" என்றாள்.

"குழந்தையை எங்கே அழைத்துப் போவதாகச் சொன்னான்?"

"தேவபட்டணத்துக்குத்தான். அங்கே அவன் அம்மா இருக்கிறாள் அல்லவா?"

"ஓகோ! அப்படியா?" என்று கர்ஜித்தான் ராகவன்.


காமாட்சி அம்மாள் "நீ வந்துவிட்டபடியால் இன்றைக்குக் குழந்தை போவதற்கில்லை!" என்றாள்.

"இன்றைக்கும் இல்லை; என்றைக்கும் இல்லை!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனான்.

சூரியாவுடன் ஊருக்குப் புறப்படுவதற்காகத் தயாராக நின்ற வஸந்தி அப்பாவைப் பார்த்ததும் ஒரே ஓட்டமாக ஓடிவந்து அவனைக் கட்டிக் கொண்டாள்.

ராகவன் கால்சட்டைப் பையிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு சூரியாவை நோக்கிக் குறி பார்த்து, "அடே காலிப்பயலே! என் மனைவியை அழைத்துக்கொண்டு ஓடிப் போனது போதாது என்று குழந்தையையுமா அழைத்துப் போகப் போகிறாய்? உன்னைப்போன்ற அயோக்ய சிகாமணியைக் கொன்றால் துளிக்கூட தோஷமில்லை!" என்று கர்ஜித்தான்.

சூரியா ஒரு நிமிஷம் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தான்.



லண்டனில் நடைபெறும் சாம்ராஜ்ய பிரதம மந்திரிகளின் மகாநாட்டுக்குச் சென்ற ஏப்ரல் 19உ பண்டித ஜவாஹர்லால் நேரு புறப்பட்டுச் சென்றார். கவர்னர் ஜெனரலும் உதவி பிரதம மந்திரியும் விடை கொடுத்து அனுப்பினார்கள்.



# சபதம் செய்வோம் ★ ★ ★

1\. சீர்சிறந்த தமிழர்களின் புத்தாண் டிந்த
 சித்திரையில் தொடங்குகிற திருநாள் இன்று
பார்புரந்த மனுநீதிச் சோழன் பண்டோர்
 பசுவினுக்கும் சமதர்மம் பரிவாய்ச் செய்து
ஏர்சிறந்த ஒருமகனை ஈடாய்த் தந்து
 இணையறியாப் பெரும்புகழைத் தமிழுக் கீந்த
தேர்சிறந்த தியாகேசன் திருவா ரூரில்
 திகழுமிந்தச் சபைதனிலோர் சபதம் செய்வோம்!

2\. அமிழ்தமென எவ்வுயிர்க்கும் அன்பே செய்து
 அருள் நெறியைப் புகட்டுவதே அறமாய்க்கொண்ட
தமிழ் மொழியின் பெருங்குணத்தின் தாராளத்தைத்
 தடுக்கவரும் துடுக்குகளைத் தவிர்க்க வேண்டும்.
தமதருமை முன்னோர்கள் நெடு நாளாக
 நடத்திவந்த நன்னெறியை நலியப் பேசி
அமைதிமிக்க தமிழ்வாழ்வைக் குலைக்க என்றும்
 அநியாயம் முழுவதையும் அகற்ற வேண்டும்.

3\. பாண்டியரும் சோழர்களும் சேர மன்னர்
 பாடுபட்டுப் பயிர்செய்த நாகரீகம்
நீண்டுயர்ந்து கோபுரங்கள் வடிவாய் நின்று
 நிரந்தரமாம் பரம்பொருளின் நினைவு கூட்டித்
தூண்டியநல் லுணர்ச்சிகளின் தொகுப்பே யன்றோ
 தோன்றுதொட்டு இன்றளவும் தொடரும் நூல்கள்?
ஈண்டிவைகள் யாவினையும் இகழ்வோ மானால்
 என்னமிச்சம் தமிழ்வளர்ச்சி இனியும் உண்டோ?

4\. கோயில்களின் பெரும்பயனைக் குறைத்துப் பேசிக்
 கும்பிடுவோர் நம்புவதைக் குலைத்தும் ஏசித்
தூயவழி வாழ்வதற்கு நல்லோர் கண்ட
 துறவுமனப் பொறையறிவைத் தோஷம் சொல்லி
வாயில்வந்த கொச்சைகளால் வசைகள் வீசி
 வகுப்புகளில் வெறுப்புகளை வளரச் செய்யும்
ஞாயமற்ற பேச்சுகளை நீக்கா விட்டால்
 நம்முடைய தமிழ் வாழ்வு நாசமாகும்.

5\. முன்னோர்கள் யாவரையும் மூடரென்றும்
 மூவேந்தர் பரம்பரையும் அமைச்சர் முற்றும்
சொன்னவர்கள் சூழ்ச்சிகளைச் செய்தா ரன்றிச்
 சொந்தபுத்தி இல்லாத வீணர் என்றும்
பொன்னாலும் புகழாலும் மயக்க வொண்ணாப்
 புலவர்களின் இலக்கியங்கள் பொய்க ளென்றும்
என்னேரம் பார்த்தாலும் இகழ்வே யானால்
 எப்படிநம் தமிழ்மொழிக்கு வளர்ச்சி ஏறும்?

✱ ✱ ✱ ✱

திருவாரூர் தமிழ்த் திருநாளில்
ஆஸ்தான கவிஞர் நாமக்கல்
வெ. இராமலிங்கம் பிள்ளை பாடியது.

6. ஏனென்று கேட்பதற்கோ எவரும் இன்றி
எழில்மிகுந்த தமிழ்வாழ்வை இகழ்ந்துபேசிக்
கோனென்ற யாவரினும் குணமே மிக்க
மூவேந்தர் நெறிமுறைக்கும் குற்றம் கூறும்
நானென்ற அகங்காரம் நம்மைச் சூழ
நல்லதமிழ் வளர்ச்சியினி நமக்கும் உண்டோ?
தேனென்ற நமதுமொழி வாழ வேண்டின்
தீவிரமாய் இந்நிலையைத் தீர்க்க வேண்டும்.

7. நித்தியமாம் சத்தியமே நெறியாய்க் கொண்டு
நெற்றிக்கண் ஈசனுக்கும் குற்றம் காட்டும்
சுத்தமுள்ள பெரும்புலவர் வழியில் தோன்றிச்
சுகபோக ஆசைகளைத் துறந்து வாழ்ந்த
எத்தனையோ பெரியவர்கள் இசைத்த நூல்கள்
ஏளனத்தால் இழிவடைய விட்டோம் இன்று
அத்தனையும் அழிந்தொழிய விடுவோ மானால்
அதன்பிறகு தமிழ்வளர்ச்சி ஆசை என்னும்?

8. புதுமையென்றும் புரட்சியென்றும் புனைந்துகூறிப்
புவியறிந்த உண்மைகளைப் பொருள் செய்யாமல்
முதுமொழிகள் யாவையுமே மோசம் செய்யும்
மூடபக்தி யாகுமென முரண்டு சொல்லிச்
சதிபுரியத் துணிந்து விட்டோம், தமிழ்த்தாய் நொந்து
தவிக்கின்றாள் தான்வளர்த்த தருமம் எல்லாம்
கதியிழந்து போகுமெனக் கண்ணீர் கொட்டிக்
கதறுகின்றாள் அவள்பெருமை காப்போம் வாரீர்!

9. விஞ்ஞானக் கலைகளெல்லாம் விரிந்திட் டாலும்
வேறெவர்க்கும் அழிவுசெய்ய விரும்பிடாத
மெய்ஞ்ஞானக் கருணைவழி காக்கும் மேன்மை
மிகப்படைத்த தமிழ்மனசை மிகவும் தூற்றி
அஞ்ஞானப் பொய்களையே அடுக்கிக் கொண்டு
அருந்தமிழின் பெருவாழ்வை அழிக்க எண்ணும்
பொய்ஞ்ஞானத் தீமைகளைப் போக்க வேண்டும்
புத்தாண்டுச் சபதமிதைப் புனைவோம் இன்று.

10. தெள்ளியநல் அறங்களையே தெளிவாய்ச் சொல்லித்
தினையளவும் பிசகாமல் நடந்து காட்ட
வள்ளுவனே மறுபடியும் வந்தான் என்ன
வழிகாட்டித் திருக்குறளை வாழ்ந்த வள்ளல்
பிள்ளைமனப் பேரறிஞன் பெம்மான் காந்தி
பெருநெறியே தமிழ்த்தாயின் பேச்சா மென்று
கள்ளமற நாமறிந்து கொள்வோ மானால்
காத்திடலாம் தமிழ்மொழியை வளர்ச்சி காணும்.

# கலகமும் காரணமும்

கீஸாமாஸ்

மாடித் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டு, வானவீதியில் ஆனந்தமாகப் பவனி வரும் வெண்மதியைப் பார்த்த வண்ணமாயிருக்கிறேன். அவர் சாப்பிட்டுவிட்டுக் கை அலம்பினார்; உடனே நண்பர் ஒருவர் வந்து அவரை அழைத்தார். அவ்வளவு தான்; கை அலம்பிய ஈரம் உலருமுன் அவர் நண்பருடன் புறப்பட்டு விட்டார். அப்பப்பா! இந்த நண்பர்கள் இருக்கிறார்களே, இவர்கள் மகா கொடியவர்கள்! இவர்களுக்கெல்லாம் வீடு, வாசல், மனைவி என்று ஒன்றுமே கிடையாதோ! கவிஞர்கள், பிரிவாற்றாமையால் வருந்தும் காதலிக்கு— தென்றல், சந்திரன், மலர் முதலியவைகளெல்லாம் விரோதிகளாய் விடும் என்று கூறியிருக்கிறார்கள். என்னைக் கேட்டால் அந்த வரிசையில் இந்த நண்பர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று துணிந்து கூறுவேன்.

“குமுதம், இதோ அரை மணியில் வந்து விடுகிறேன். நீ சாப்பிட்டுவிட்டுக் காற்றாட மாடியில் இரு!” என்று சொல்லிவிட்டு அவர் துணிந்து போய்விட்டாரே!—இதைப் பார்க்கும்போது பழைய சம்பவம் ஒன்று என்னுடைய நினைவுக்கு வருகிறது.

* * *

அன்று இரவு அவர் ஆபீஸிலிருந்து வந்ததும் வெளியே ஏதோ காரியமாகச் சென்றார். போகும்போது, “குமுதம், இதோ இன்னும் ஒரு மணியில் வந்து விடுவேன். நீ எனக்காகக் காத்திருக்க வேண்டாம். சாப்பிட்டு விடு. நான் வந்து சாப்பிட்டுக் கொள்கிறேன்! நீ விழித்துக் கொண்டிருந்து, நான் வரும்போது கதவைத் திறந்தால் போதும்!” என்று சொல்லிக் கொண்டே என்னைப் பார்த்தார்.

“ஆகா! போய் வாருங்கள்! சமையற்கார அம்மாளிடம் சொல்லிவிட்டால் அவளே கதவையும் திறந்துவிடுவாள்!” என்றேன்.

நான் இதைச் சாதாரணமாகத்தான் சொன்னேன்; அவர் இதை அசாதாரணமாகப் புரிந்து கொண்டிருக்கவேண்டும். “என் குமுதம், நான் இல்லாததனால் உனக்கு ஒன்றும் லக்ஷ்யமாயிராதா?” என்று கேட்டார். அவர் குரலில் சற்றுக் கரகரப்புக் கண்டது.

அதை நான் அவ்வளவாகப் பொருட்படுத்தாமல், “நான் என்ன, நாடகத்திலும் நாவலிலும் வரும் கதாநாயகியா? உணவு செல்லாமல் உறக்கம் கொள்ளாமல் படுக்கையில் புரண்டுகொண்டு கிடப்பதற்கு? நீங்கள் எங்கே போகிறீர்கள்? விவரம் தெரியாதவரா, வீட்டுக்கு வரத் தெரியாமல் தவிப்பதற்கு? நல்ல ‘ஜமா’ சேர்ந்தால் சீட்டு ஆடுவீர்கள். கொஞ்சம் நேரம் ஆகத்தான் ஆகும்!” என்று நான் கொஞ்சமும் கபடமின்றி வெளிப்படையாகக் கூறினேன்.

“நிஜமாகவா இப்படிச் சொல்லுகிறாய், குமுதம்?” என்று கேட்டார் அவர்.

“ஆமாம், இதில் பொய் எதற்கு?”

“குமுதம், அப்படியானால் நான் என் படுக்கையைக்கூட வாசற்புறத்து ஆபீஸ் அறையிலேயே வைத்துக்கொண்டு விடுகிறேன். நேரஞ் சென்று வந்தாலும் அப்படியே படுத்துக்கொண்டு விடலாம் அல்லவா?” என்றார்.

நானும், “ஆகா! உங்கள் சௌகரியம் போல் செய்யுங்களேன்!” என்று சொல்லி விட்டேன்.

அவரும் அதற்குமேல் பேசாமல் சற்று யோசனையில் ஆழ்ந்திருந்துவிட்டு ‘விர்’ என்று வெளியே போய்விட்டார்.

அன்றைய தினத்திலிருந்து அவர் தம் காரியங்களையெல்லாம் தாமே கவனித்துக் கொண்டார். தாமே வேஷ்டி துவைத்து, தாமே குளிக்க ஜலம் எடுத்து வைத்துக் கொண்டார். ஆனால் அதற்காக என்னிடம் அவர் பேசாமலிருந்துவிடவில்லை. பேச்சு வார்த்தையில் குத்திக் காட்டவும் இல்லை. நானும் இதை விளையாட்டு என்றே முதலில் நினைத்தேன். போகப் போக எனக்கே அவர் போக்கு ஆச்சரியமாயிருந்தது. எல்லாம் தானே சரியாய்ப் போய்விடும் என்று நான் பாட்டுக்கு என் காரியங்களைக் கவனித்து வந்தேன்.

## 2

அன்றைக்கு அவர் ஆபீஸிலிருந்து வந்ததும் வராததுமாக என்னிடம் ஒரு கல்யாணப் பத்திரிகையைக் கொடுத்து, “குமுதம், என் மாமாவின் பெண்ணுக்குக் கல்யாணம். நீயும் வருகிறாயா?” என்று கேட்டார்.

"ஆகா! வருகிறேன்!" என்றேன்.

"சரி, இன்று ராத்திரி வண்டிக்கே புறப்பட வேண்டும். தயார் செய்துகொள்!" என்றார். நானும் வேண்டியதை யெல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு பிரயாணத்துக்குத் தயாரானேன்.

சேலம் ஜங்ஷனிலேயே அவருடைய அம்மாஞ்சி எங்களுக்காகத் தயாராய்க் காத்துக் கொண்டிருந்தார்.

வீட்டுக்குப் போனதும் அவருடைய மாமாவின் பெண் தங்கம்—அதாவது, கல்யாணப் பெண்ணின் தமக்கை—'அத்தான், அத்தான்' என்று உறவு கொண்டாடிக் கொண்டு அவருக்குச் சகல உபசாரங்களும் செய்ய ஆரம்பித்துவிட்டாள்.

கல்யாணம் பிரமாதமாக நடந்தது. நலங்கு, ஊஞ்சல் எல்லாவற்றிலும் நான் முக்கிய பங்கெடுத்துக் கொண்டேன்.

அவர் சாப்பிடும் நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் தங்கத்துடனேயே சுற்றினார்.

தங்கம் பலே சாமர்த்தியக்காரி. ஆளை மயங்க வைக்கும் சிரிப்பும் பேச்சுத் திறமையும் அவளிடம் அபரிமிதமாயிருந்தன.

அன்றைக்கு அவர், கல்யாணப் பெண்ணுக்குப் பரிசாகக் கொண்டுவந்த அந்தப் பட்டுப் புடவையைத் தங்கத்திடம் கொடுத்து, "புடவை எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

"ரொம்ப நன்றாயிருக்கிறது, அத்தான்! புடவை வாங்கும் கலையில் நீ தேர்ந்தவன்தான். கத்தரிப்பூக் கலர் புடவைக்குக் கிளிப் பச்சை பார்டரைத் தேர்ந்தெடுத்திருக்கிறாயே! சபாஷ்!" என்றாள் அந்த மாயக்காரி.

உடனே அவருக்கு உற்சாகம் தாங்கவில்லை.

"தங்கம்! உன்னைப்போல் பாராட்டி ரசிக்கத் தெரிந்த பெண் யாருமில்லை என்றே சொல்லுவேன். மற்ற பெண்களும் இருக்கிறார்களே, களிமண் மாதிரி ரசிகத் தன்மையே இல்லாமல்!" என்றார்.

கூட இருந்து இதைக் கேட்ட எனக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது. நான் களிமண்ணாமே இவருக்கு!

"அத்தான், எங்கே நீ மட்டும் வருவாயோ என்று நினைத்தேன். புத்திசாலித்தனமாகக் குமுதத்தையும் அழைத்துக்கொண்டு வந்தாயே! அதற்காகவே உன்னை விசேஷமாய்க் கவனித்துக் கொள்ளணும். கல்யாணம் ஆனதிலிருந்து நீ இந்தப் பக்கமே தலைகாட்டவில்லையே என்று நினைத்தேன். உன் அகமுடையாள் குமுதத்தைப் பார்த்த பிறகுதான் எனக்கு விஷயம் புரிந்தது. இவ்வளவு அழகியை விட்டுவிட்டு வருவதென்றால் ஆகிற காரியமா?" என்று அவள் சொல்லிவிட்டுச் சிரித்தாள். அதைக் கேட்ட அவருடைய முகத்திலும் புன்னகை தவழ்ந்தது.

அதற்குப் பிறகு, "அத்தான், கொஞ்சம் என் அகத்துக்கு வாயேன். உன்னிடம் முக்கியமாகப் பேச வேண்டியிருக்கிறது!" என்று தங்கம் சொன்னதும் அவர் மறு வார்த்தை பேசாமல் அவளைப் பின்தொடர்ந்தார்.

முதலிலெல்லாம் சாதாரணமாய்த் தோன்றிய அவள் பேச்சு வரவர எனக்கு வெறுப்பைத் தந்தது. ஆனால் அவளை வெறுப்பதில்






பயன் என்ன? அந்தப் பேச்சுத் திறமை என்னிடம் இல்லாததனுல்தானே அவரிடம் தாறுமாருக எதையோ பேசிவிட்டு இப்போது தவிக்கிறேன்?

இந்த வேதனையின் காரணமாக, ஊர்வலத்தில் கூட நான் கலந்து கொள்ளவில்லை. தலை வலிக்கிறது என்று சொல்லிவிட்டுக் கல்யாண வீட்டு மாடிக்கு வந்து படுத்தேன். கோடைகாலத்துப் புழுக்கம் என் உடம்பைத்தான் வாட்டியது என்ருல் உள்ளத்தையுமா வாட்ட வேண்டும்?

"என்ன இருந்தாலும் குமுதம் ரொம்ப புத்திசாலி; அடக்க ஒடுக்கமான பெண். இந்தக் காலத்துப் பெண்கள் மாதிரி 'தாம், தாம்' என்று குதிக்கிறதும், சதா அகமுடையானைச் சுற்றிச் சுற்றி வருகிறதுமாக இல்லாமல் ரொம்ப சமர்த்தா இருக்கிருள்!"

இது அம்மாமி என்னைப் பற்றிச் செய்த விமரிசனம்.

ஆனல் என் மனவேதனை அவர்களுக்கு எப்படித் தெரியும்?

## 3

அன்றும் பால்போன்ற வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்தது. மாடி வராந்தாவில் படுத்திருந்த எனக்குத் தூக்கமே வரவில்லை. உடம்பும் சோர்ந்திருந்தது; உள்ளமும் சோர்ந்திருந்தது.

காலடிச் சத்தம் கேட்டு, சிந்தனை கலைந்து திரும்பினேன். அவர்தான் என்னெதிரில் வந்து நின்ருர்.

"என் குமுதம், தலை வலிக்கிறதா? படுத்துக் கொள்ளுகிறதுதானே?" என்று கேட்டுவிட்டுத் தம் படுக்கையை எடுத்து வெளியே போட்டுக்கொண்டார்.

அடக்கி வைத்திருந்த அழுகையெல்லாம் பீறிக்கொண்டு வந்தது.

"ஏன், தங்கத்தோடு இன்னும் பேச வேண்டியது ரொம்ப இருக்கிறதோ?" என்று துணிச்சலோடு கேட்டுவிட்டேன்.

"அடி அசடே, அதற்காகவா கோபம்? அவனோடு எனக்கு ஒன்றும் இல்லை. அவன் புருஷனுக்கு வேலையில்லை. அதை எல்லோருடைய எதிரிலும் சொல்ல அவளுக்குக் கூச்சம். அதற்குத்தான் அவள் என்னை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனுள். அவனுக்கும் என் ஆபீஸிலேயே வேலைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்!" என்ருர் அவர்.

எனக்கு நாணத்தினல் தலை நிமிர முடியவில்லை; என் தவறைச் சொல்லி மன்னிப்புக் கேட்கவும் நா எழவில்லை.

"சரி, சமர்த்தோ இல்லையோ! போய்ப் படுத்துக்கொள். தூக்கம் விழித்தால் உடம்புக்கு ஆகாது. காலைக்கு ஊருக்குப் புறப்பட வேண்டும்!" என்று அவர் அன்பு கனியச் சொல்லித் தூர இருந்தபடியே சமாதானப் படுத்தினர்.

எனக்குத் தூக்கம் தாங்கவில்லை. அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அவர் கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "அன்றைக்கு நான் தெரியாத்தனமாக உளறினதற்குத் தண்டனை போதும்; மன்னித்து விடுங்கள்!" என்று சொல்லி வாய்விட்டுக் கதறினேன். அதுவரை ஒன்றுமே நிகழாததுபோல் அவர் புன்சிரிப்புடன் என்னை அணைத்துக் கொண்டார்.

ஆகா! அன்று என் மனம் எவ்வளவு உற்சாகமாய் இருந்தது!

• • •

"குமுதம், குமுதம்!" என்று அவர் பலமுறை கூப்பிட்டிருக்கவேண்டும். ஏனென்ருல், அவர் கடைசியாகக் கூப்பிட்டது மிகவும் பலமாயிருந்தது.

"என்ன குமுதம், பலத்த யோசனை! மீண்டும் ஏதாவது......!" என்று இழுத்தாற்போல் சொல்லிக்கொண்டே கலகலவென்று சிரித்தார்.

"அந்த அசட்டுத்தனம் அன்றோடு போய் விட்டது!" என்று சொல்லி, நானும் அவருடைய சிரிப்பில் கலந்து கொண்டேன்.

# உண்மை வாத்தியார்

ஈ. ஸ்ரீ.

அன்று அரண்மனை முழுவதும் ஒரே குதூகலமாயிருந்தது; நகரம் முழுவதும் ஒரே அலங்காரமாயிருந்தது;. வீதிகளில் எல்லாம் தோரணங்கள் கட்டி, வீடுகளுக்கெல்லாம் புதிதாகச் சுண்ணாம்பு அடித்திருந்தார்கள்; நகர ஜனங்களோ மிகவும் உற்சாகமாயிருந்தார்கள். ஆலயங்கள் எல்லாம் அற்புதமாகத் தீபாலங்காரம் செய்யப்பட்டுப் பிரமாதமாக விளங்கின.

ஆமாம், மன்னனுக்கு வெகு நாட்களாகக் குழந்தையில்லாமலிருந்து இப்பொழுது ஆண் குழந்தை பிறந்தால் ஜனங்களின் உற்சாகத்துக்குக் கேட்க வேண்டுமா? அரசனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. தன் அருமைக் குமாரனுக்குக் குணசீலன் என்று அழகாகப் பெயர் வைத்து மிகவும் செல்வமாக வளர்த்து வந்தான்.

குணசீலனுக்கு ஐந்து வயது ஆயிற்று. அரசன் அவனை அரண்மனைப் புலவரிடம் அனுப்பிக் கல்வி பயிலச் செய்தான்.

குணசீலனுக்குப் படிப்பில் மனம் செல்லவேயில்லை. சதா விளையாடுவதில்தான் அவன் மனம் சென்றது. சின்ன வயதில் ராஜகுமாரன் விளையாட்டுப் போக்காயிருந்தாலும் பின்னால் சரிப்பட்டு விடுவான் என்று அரசன் எண்ணினான். ஆனால் குணசீலன் போக்கு மாறுகிற வழியாயில்லை. போகப் போக அவனுக்கும் படிப்புக்கும் ரொம்ப தூரம் என்று ஏற்பட்டு விட்டது. குருவினால் அவனுக்கு ஒரு எழுத்துக்கூடச் சொல்லிக் கொடுக்க முடியவில்லை.

அரசன் யோசித்தான்; 'ராஜகுமாரன் குணசீலனுக்கு ஒரு வருஷத்துக்குள் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கும் உபாத்தியாயர் தேவை. அவருக்கு ஆயிரம் ரூபாய் சன்மானம் தரப்படும்!' என்று நகரம் முழுவதும் தண்டோராப் போடச் செய்தான்.

உபாத்தியாயர்கள் கணக்கில்லாமல் அரண்மனையில் வந்து குவிந்தார்கள். ஆனால் அவர்களுடைய சாமர்த்தியம் ராஜகுமாரனிடம் சாயவில்லை.

கடைசியில் ஒரு பெரியவர் வந்தார். ராஜகுமாரனுக்குப் பாடம் சொல்லித் தரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அரசன் அவரிடம், "ஆறு மாதத்துக்குள் குணசீலனுக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கச் சொல்லிக் கொடுத்துவிட வேண்டும். நான் வந்து பரீக்ஷை செய்து பார்ப்பேன்!" என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டான்.

குணசீலனோடு ஓர் ஊமைப் பையனையும் சேர்த்துக்கொண்டு உபாத்தியாயர் பாடம் சொல்லிக் கொடுத்தார். ஆனால் அவர்கள் படிக்கவில்லை. சதா விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

உபாத்தியாயர் அவர்களுக்குப் பாடம் சொல்லித் தருகிறாரோ இல்லையோ, நிறைய விளையாட்டுப் பொம்மைகள் வாங்கித் தந்தார். நவராத்திரிக் கொலுவில் வைக்க வேண்டிய மயில்,





சலவைத் தொழிலாளி:—மசாலா தோசை ஒண்ணு கொடுங்க!

ஸர்வர் :—'ஆர்டினரி' தானே?

ச. தொழிலாளி:—'ஆர்டினரி' ஒரு வாரம் ஆகுங்களே? 'அர்ஜண்'டாக் கொடுங்க!

---

மாங்காய், தேங்காய் முதலிய என்னென்னவோ பொம்மைகள் ராஜ குமாரனிடம் வந்து விட்டன.

ஆயிற்று: ஆறு மாதம் முடிந்து விட்டது. அரசன் குணசீலனைப் பார்க்க அந்தப் புது உபாத்தியாயர் வீட்டுக்குச் சென்றான். அரசனை உபாத்தியாயர் ராஜோபசாரத்துடன் வரவேற்றார்.

பிறகு குணசீலனை அழைத்துவரச் செய்தார். அவன் வந்து தகப்பனுருக்கும் உபாத்தியாயருக்கும் வணக்கம் செலுத்திவிட்டுப் பால பாடத்தை முழுவதும் கடுகடு என்று படித்துக் காண்பித்தான்.

அரசனுக்கு ஆச்சரியம் தாங்க வில்லை. அரண்மனை குருவும் ஆச்சரி யத்தினுல் பிரமித்துப் போய்விட்டார். எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்தான். எழுத்து வாசனையே இல்லாத ராஜ குமாரனுக்கு இவ்வளவு நன்ருய்ப் படிக்க வருகிறது என்ருல் ஆச்சரியமா யிருக்காதா?

உடனே அரசன் ஆயிரம் ரூபாயை உபாத்தியாயரிடம் கொடுத்து, "இன்னும் உங்களுக்கு எவ்வளவு வேண்டுமானலும் தருகிறேன்; நீங்கள் கேட்கலாம்!" என்ருன்.

"அரசே, அந்த ஆயிர ரூபாய்க்கு உரியவன் நான் அல்ல; அதோ நிற்கும் ஊமைப் பையன்தான் உரியவன்!" என்ருர் உபாத்தியாயர்.


அரசன் ஆச்சரியத்துடன், "ஊமையா என் குமாரனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தான்? எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே!" என்ருன்.

"அரசே, உண்மையில் இந்த ஊமைப் பையனைக் கொண்டுதான் காரியத்தைச் சாதித்தேன். விளை யாட்டு மூலமாகவே குணசீலனுக்கு எழுத்துக் கற்பிக்க எண்ணினேன். அணில், ஆடு முதலிய வார்த்தைகளுக்கு எல்லாம் பொம்மைகள் வாங்கி வந்து விளையாடக் கொடுத்தேன். ஊமைப் பையனும் ராஜகுமாரனும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

"ஒரு நாள் ராஜகுமாரன் என் னிடம் வந்து, 'அந்தப் பையன் ஊமை மாத்திரம் அல்ல; செவிடு; சுத்த மக்கு; மாங்காய் பொம்மையைக் கொண்டு வா என்ருல் தேங்காய் பொம்மையைக் கொண்டு வருகிருன்' என்ருன்.

"அதற்கு நான் 'அவன் பாவம், ஊமை; காதும் செவிடு. உன் வாய் அசைவதைப் பார்த்துக்கொண்டுதானே அவன் வார்த்தையைப் புரிந்துகொள்ள வேண்டும்? அதற்கு ஓர் உபாயம் சொல்லித்தருகிறேன்' என்று சொல்லி, 'தே' என்று, அவன் உள்ளங்கையில் எழுதி, இப்படி எழுதினுல் தேங்காய் என்று அர்த்தம். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு ஊமைப் பையன் கையில் எழுதி உனக்கு வேண்டியதைக் கொண்டு வரச் சொல் என்றேன். இப்படியே ஒவ்வொரு எழுத்தாகச் சொல்லிக் கொடுத்தேன். மற்ற வற்றை ஊமைப் பையன் சுலபமாகச் சொல்லிக் கொடுத்துவிட்டான். ராஜ குமாரனும் விளையாட்டாகவே உற் சாகத்துடன் கற்றுக்கொண்டு படிக்க ஆரம்பித்துவிட்டான். ஆனல் இவ்வள வுக்கும் அந்தப் பையன்—ஊமையைப் போல நடித்தானே—அவனுக்குத் தான் நம் பாராட்டைச் செலுத்த வேண்டும்!" என்ருர் உபாத்தியாயர்.

அரசன் அதற்குச் சம்மதித்து அந்தப் பையனையும் அரண்மனையிலேயே வைத்துக் கொண்டு ஆதரித்தான்.






ரயில்வே ஸ்டேஷன் குறுக்குச் சாலைப் பக்கம் லயித்திருந்த என் பார்வையில், ஒரு பெண் தன்னந் தனியாக ஸ்டேஷனிலிருந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது. இந்த விஷயம் எனக்கு மிகவும் அதிசயத்தைத் தந்தது. அந்த இரண்டும் கெட்டான் வேளையில் துணையின்றி ஒரு பெண் வந்து கொண்டிருப்பதென்றால்...?

அவள் அருகில் வந்து கொண்டிருந்த போது என் மனதில் பளபளவென்று ஒரு நினைவு எழுந்தது. அந்தப் பெண்ணின தோற்றம், நடை, உடை, பாவனை எல்லாம் தத்ரூபம் என் மனைவியினுடையவைபோல் இருந்தன. அதற்குப் பிறகு மனதிற்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? தொடர்ந்த நினைவுகள்......

மாயவரம் — திருவாரூர் மார்க்கத்தில் இருந்த ஒரு ரயில்வே ஸ்டேஷன் அது. கிராமத்திலிருந்து ஸ்டேஷனுக்கு இரண்டு மைல் தூரம். ஸ்டேஷனுக்கு எதிர்ப்புறமாகக் குறுக்குச் சாலை வந்து ராஜபாட்டையில் கூடும் இடத்தில் ஒரு சின்ன மதகு உண்டு. ஒரு 'கன்னி' வாய்க்காலின் மதகு அது. தினசரி ஊரிலிருந்து அந்த மதகு வரையில் நடந்து வந்து, பொழுதைக் கழிப்பது வழக்கம் எனக்கு. அன்றும் அப்படித்தான் வந்து உட்கார்ந்திருந்தேன்.

அவள் பிறந்தகத்திலிருந்தாள். பிறந்தகத்திற்கு மனைவியை அனுப்பிவிட்டு உட்கார்ந்திருப்பவன் நிலைமையைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? ஒரு சின்ன விஷயத்தின் மூலம் என் நிலைமையின் உச்சத்தைத் தெரியப்படுத்தி விடுகிறேன். சிறு குழந்தைகளுக்கு ரயிலையும் இருப்புப் பாதையையும் கண்ணால் காணும்போது, ஊருக்குப் போகும் இன்பமான நினைவுகள் மனதிலே பூக்கும். நான் 'அவளை'ப் பிறந்தகத்திற்கு ரயிலேற்றி அனுப்பிவிட்ட பிறகு அநேகமாகத் தினசரி ரயில்வே ஸ்டேஷன் பக்கம் வருகிறேனா? கேட்பாரற்றுத் தனித்து, முடிவற்றது போன்று நீண்டு கிடக்கும் அந்த ரயில் பாதைகள் என் திருஷ்டியிலே பட்ட மறு கணம் என் நினைவைத் தூண்டி விட்டுவிடும். அதன் பின் தொடர்ந்த நினைவுகள்......

இன்றும் நினைத்தேன். நினைத்துச் சில நிமிஷ நேரத்துக்குள் அவளே பிரத்தியட்சமாக என் முன் தோன்றினால் எனக்கு எப்படி இருக்கும்?

மதகை அவள் சமீபித்தவுடன் நான் எழுந்து உற்றுப் பார்த்தேன், யார்தான் என்று நிர்த்தாரணம் செய்துகொள்ள. மறு கணம் என் காதுகளில் "புவனம்!" என்ற வார்த்தை, வெண்கலத்தில் ஓங்கித் தட்டினாற்போலக் கேட்டது. என் வாயினின்றும் வெளிப்பட்ட வார்த்தைதான் அது. ஆனால், திகைப்பின் மிகுதியால் மூர்ச்சித்துவிட்ட யந்திரம் அலறுவதுபோல நான் அவள் பெயரைச் சொல்லி யழைத்தது யாரோ பிற மனிதர் பேசுவது போன்றிருந்தது.

"யார்......?" என்று பயம், சந்தேகம் இரண்டும் கலந்த உணர்வுடன் அவள் கேட்டாள்.

"நான்தான், புவனா! இது என்ன இப்படி......தன்னந் தனியாக......" என்று தடுமாறித் தடுமாறிக் கேட்டேன்.

இன்னும் அதிசயம்! அவள் என்னிடம் நெருங்கி வந்து, என் தோள்களில் கையை வைத்துக்கொண்டு விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள்.

"என்ன புவனா, ஏன் அழுகிறாய்?" என்று கேட்டேன்.

"நீங்கள் என்னை மறந்து விட்டீர்களா!... மூன்று மாசமாய் என் நினைவே உங்களுக்கு இல்லையா?" என்று கேட்டாள்.

"இது என்ன பைத்தியக்காரத்தனம், புவனா? ஒவ்வொரு நிமிஷமும் உன் நினைவு தான். இன்றுகூட......"

"அப்படி நினைக்கிறவர் மூணு மாசமாக என் பாராமுகமாக இருந்து விட்டீர்களாம்......?'

"எனக்கு லீவு கிடைக்கவில்லை......அதி ருக்கட்டும்; நீ ஏன் இப்படி முன்பின் அறிவிக்காமல் தனியாகக் கிளம்பி வந்தாய்...? உடம்பு வேறு இளைத்துவிட்டதே!"

வான வெளியில் பூரண சந்திரன்தான் பிரகாசித்தான் என்றாலும், சாலையில் இடைவெளியின்றித் தொடர்ச்சியாக வானளாவி நின்ற ஆலமரங்களின் இலைகளினூடே சிறிது சிறிது வெளிச்சம்தான் தெரிந்தது. இந்த ஒளியில் முகத்தை முகம் அறிய முடியாது. ஆனால், தொலைவில் மரங்களில்லாத பிரதேசத்தில் வெட்ட வெளியிலே பாவியிருந்த ஒளி அவன் முகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ள உதவி செய்தது.

"என் உடம்பு உங்கள் முகத்தைப் பார்த்தால் தேறிவிடும் என்ற நம்பிக்கை எனக்கு! ......இங்கேயே மாயவரம் ஆஸ்பத்திரியில் பார்த்துக் கொள்ளலா மென்று கிளம்பி வந்துவிட்டேன்......அப்பாதான் அரை மனதுடன் ரயிலேற்றி அனுப்பினார்......"

"புவனம், நீ இந்த நிலைமையில் தனியாகக் கிளம்பி வந்திருக்கவே கூடாது. என்னால் ஒன்றையும் நம்பவே முடியவில்லை. இயற்கைக்கு மாறாக எல்லாம் நடக்கிற மாதிரி தோன்றுகிறது. அனாதையைப் போல உன்னை வண்டி யேற்றி அனுப்பக் கூடியவரல்லவே உன் தகப்பனார்? எனக்கு ஒரு தந்திகூட......"

"தந்தி கொடுத்தாரே......?"

"எனக்குக் கிடைக்கவில்லையே......!"

அவன் நிலைமை—அதுவும் மனோ நிலை—என்னை ஆட்டங் கொள்ளச் செய்தது. அவனுடைய எதிர்காலம் அவனுக்கு நம்பிக்கையை ஊட்டவில்லையோ, என்னவோ? நினைவுகளைத் தாங்கச் சக்தியற்ற என் மனத்தினும் மென்மையானதுதானே அவனுடையதும்? எனவே, இயற்கையாக அவன் மனதில் பய மூட்டங்கள் எழத்தானே செய்யும்?

'கூ...குக்...' என்று ரயில் கூவியது.

* * *

கண்ணை விழித்தேன். எல்லாம் கனவு!...அத்தனை காட்சிகளையும் நினைவுப் படுத்திப் பார்த்தேன். இந்த விசித்திரமான கனவின் அர்த்தம் என்ன? இப்படிக் கூடக் கனவு காண்பது உண்டா? வாழ்க்கையில் எதைத்தான் கனவில் காண்பதில்லை? அனுபவித்து நுகரத்தக்கவைகளையும், அல்லாதவைகளையும், இன்னும் கற்பனையே செய்து பார்க்க முடியாத அசாதாரணக் காட்சிகளையும் கனவிலே காண்பதில்லையா?

மிகவும் பூஞ்சை அவன்; அவனுடைய பயம் நிறைந்த உணர்ச்சிகளை எதிரொலித்தது இந்தக் கனவு. ஒவ்வொரு வினாடியிலும் எங்கள் பிரிவைப் பற்றின ஏக்கத்திலே அவன் வளர்த்திருந்த அவநம்பிக்கைதான் கடைசியில் அவனிடமே திரும்பிக் கொண்டிருந்திருக்க வேண்டும். இடம் கொடுத்து வளர்த்த அவநம்பிக்கை மனதில் எதைத்தான் கிளறாது? இயற்கைக்கு மாறான கனவுக் காட்சிகள், காலக்கிரமத்தில் நனவாகவோ, அல்லது அதற்கும் ஒரு படி அதிகமாகவோ ஆகிவிட எத்தனை நிமிஷம், வினாடி பிடிக்கும்!


எனவே, நானும் கவலை கொள்ள வாரம்பித்தேன். இத்தனை நாள் 'விட்டேத்தி'யாக இருந்துவிட்டதாக என் மனதிலேயே ஒரு எண்ணம் மின்னி மறைந்தது. வாஸ்தவம்தான்; புவனம் உருகிக் கரைந்து என்னை வரச் சொல்லி எத்தனை கார்டுகள், கவர்கள் எழுதியிருக்கிறான்! எல்லாவற்றிற்கும் நான் காட்டினது ஒருவேளை அலட்சியந்தானோ, அல்லது உண்மையாக




ஹோட்டலில் சாப்பிட்டவர்:— முன்னைக்கு இப்போது உங்கள் ஹோட்டல் ரொம்பவும் 'இம்ப்ரூவ்' ஆகியிருக்கிறது!

ஹோட்டல் முதலாளி:— எல்லாம் உங்களுடைய ஆதரவுதான்!

ஹோட்டலில் சாப்பிட்டவர்:— முன்னே யெல்லாம் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குப் போன பிறகு வயிற்று வலி வரும்; இப்போது சாப்பிட்ட உடனே வந்துவிடுகிறது!



பையன் :—இன்றைக்குத் தேதி என்ன, ஸார்!

உபாத்தியாயர் :—தேதி கிடக்கட்டுமடா! பரீக்ஷை யல்லவா முக்கியம்? சரியாக எழுது!

பையன் :—ஏதேனும் ஒன்றாவது பேப்பரில் சரியாக இருக்கட்டுமே என்றுதான் கேட்டேன்!

என் பலவீனம் — முயலாமை காரணமான பாராமுகமோ?

## 2

காரியாலயத்திற்குப் போன பிறகு என் நிலைமை இன்னும் தீவிரத் தன்மை யடைந்தது. மனதில் ஒரே பரபரப்பு; இந்தப் பரபரப்புடன் — நிதானமற்றுக் காரியாலய வேலையில் ஈடுபட்டு இயங்குவதெனில் அது வெறும் போலித் தோற்றம் என்பதில் என்ன சந்தேகம்?

எதிர்பாரா விதமாக எங்கள் தெருப் பையன் ஒருவன் எனக்கு எதிரே வந்து நின்றான். அவன் கையில் ஒரு தந்தி இருந்தது.

“என்னடா, அம்பி?” என்றேன். அவன் கொடுக்கு முன்னால் என் கைகள் அவனிடமிருந்து தந்தியை வாங்கின.

“புவனாவுக்குப் பிரசவ சமயம்; மிகவும் உடல் நிலை மோசமுற்றிருக்கிறாள்; உடனே வரவும்.”

அவள் தகப்பனார் கொடுத்திருந்த தந்தி அது. காரியாலயம்...... அது காரியாலயமா? லீவு பெற முயற்சித்ததில், வெட்கக் கேடு, இரண்டு நாட்கள்தான் கிடைத்தன. கிடைத்தது போதும் என்று கிளம்பினேன். மதகடியில் சந்திப்பது போன்று எழுந்த கனவுக் காட்சிகள் மனக் குளத்தில் அலை புரண்டன. இந்த ருசகத்தை எப்படிக் கொல்வது என்று தெரியாமல் திணறினேன். ஒன்றையும் பற்றி நினைக்காமல் நிச்சிந்தையாய் இருந்து விடுவோம் என்று தீர்மானித்து, இரண்டு நிமிஷ காலம் எப்படியோ ஓட்டுவேன். ஆனால், இதயம் — சபலபுத்தி — இவை எண்ணங்களின் தொடர்க் கட்டத்தில் மனதை இழுத்து திறத்திவிடும்.

ரயிலை விட்டு இறங்கியவுடன் மனவேகத்துடன் போட்டியிட்டுக் கொண்டு வீட்டுக்குச் சென்றேன். மனதிலிருந்த கனம் கொஞ்சம் குறைந்தது; கைப்பெட்டியைக் கூடத்தில் கொண்டு போய் வைத்துவிட்டு நிமிர்ந்தேன். புதுமை பூத்த புதுப் பெண்போல் புவனா பல் வரிசைகள் முற்றும் தெரியும்படி சிரித்துக்கொண்டு என் எதிரில் நின்றாள்! அவள் உடம்புக்கு ஒன்றுமில்லை!

“என்ன புவனா, இது......?” என்று இழுத்தேன்.

என்னுடைய நிலை அவளுக்கு வேடிக்கையாயிருந்திருக்க வேண்டும். முதல் தினம் கனவில் அவளைச் சந்தித்தபோது கண்ட பயங்கரமான மெலிந்த தோற்றத்தையும், இப்போதைய சுடர் விடும் வாளிப்பான தோற்றத்தையும் எண்ணினேன்; அந்தப் பழைய நினைவுகள் மனதில் கிளர்ந்தெழுந்தன. ஆனால், அந்த நினைவின் அடையாளமாய், அந்த நினைவின் நிழலாய் கவலை வேலையாக அவளுக்கு ஒன்றும் சேர்ந்து விடவில்லை.

“என்னை மன்னிக்க வேண்டும்...”

“யார் கொடுத்தது, தந்தி?”

“நான்தான்; அப்பாவுக்குத் தெரியாது. அப்பாவிடம் நீங்கள் பிரஸ்தாபிக்கவும் கூடாது. நான் உங்களைப் பார்க்க வேண்டுமென்று துடித்தேன் ... அதனால் ...”

அவளுடைய பேதமைக்கு நான் இரங்கினேன். அப்புறம் அவளுடைய சாகஸம் மறைந்து, இயல்பான உரிமை உணர்வு தலைகாட்டியது. அவள் உரிமைக்கு நான் இணக்கம் காட்டினேன்.

## 3

வாய்த்த இரண்டு நாட்களும் இரண்டு நொடிப் போதாக — கை நிமிட்டு நேரம் போன்று சென்று விட்டன. மாலையில் ஊருக்குத் திரும்பிவிட வேண்டுமென்று யத்தனம் செய்து கொண்டிருந்தேன்.

புவனா என் எதிரில் வந்து மண்டியிட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். மூட்டை கட்டுவதை வேடிக்கை பார்க்கும் சிறு குழந்தையைப்போல் இருந்தது அவள் செய்கை.

பெட்டிக்குள் எதையோ திணித்துக் கொண்டிருந்தபோது புவனாவை நிமிர்ந்து பார்த்தேன். அவள் முகத்தை உயரத் தூக்கியிருந்தாள்; கண் இமைகள் பாதி மூடியிருந்தன; உதடுகள் இறுகப் பற்றிக் கொண்டிருந்தன; கண்களின் ஓரத்தில் இரண்டு திவலைகள்—கண்ணீர்!

"அவசியம் ராத்திரி ஊருக்குப் போக வேண்டுமா?" என்று திடீரெனக் கேட்டாள் புவனம்.

"ஆமாம்; இரண்டு நாள்தான் லீவு. அதுவும் மூக்கால் அழுதுகொண்டு கொடுத்தான், புவனா... ஏன்?" என்றேன்.


அவள் முகம் மீண்டும் பழைய நிலையில் உயர்ந்தது. வாயால் சொல்லாமல், ஒன்றுமில்லை என்பதற்கடையாளமாக வெறுமனே தலையை நிதானமாக ஆட்டினாள். பெட்டியை மூடிப் பூட்டிவிட்டு எழுந்தேன். கரகர வென்று கண்ணீர் விட்டு அவள் அழுது கொண்டிருந்தாள். "புவனா!" என்றேன், அவள் செய்கையை மாற்றும் தோரணையில்.

"போங்கள்; போங்கள், ஊருக்கு! நீங்கள் போனபிறகு நானும் போய் விடுவேன்; எனக்கு இப்போதே நல்ல ஜுரம். ராத்திரி ஜன்னி பிறந்து விடும். நீங்கள் போங்கள்...!" என்றாள்.

அவள் குரல் இனிமையாயில்லை அப்போது. ‘சட்’டென்று நெற்றியில் கை வைத்துப் பார்த்தேன். சுட்டது; நல்ல ஜுரம்; அத்துடன் ஜுர வேகம்.

இரண்டு நாளைய இன்பமான அனுபவத்திற்குப் பிறகு நான் அவளைப் பிரியப் போகிறேனல்லவா? அதன் விளைவாக ஏற்பட்டது இந்த நிலைமை என்பதை உணர்ந்தேன். மனோ நிலையைப் பொறுத்து, அதன் அடிப்படையாக ஏற்பட்ட விஷயம் இது. இருந்தாலும், இப்படி எண்ணிக் கொண்டு சும்மா இருந்துவிட மனம் வரவில்லை. புவனாவின் நிலைமைக்கு மாற்று ஏற்படுத்த என் பிரயாணம் தடைப்பட வேண்டும்...ஆனால், பிழைப்பு முழுவதும் அடங்கிக் கிடக்கிறது என் உத்தியோகத்தில்...அதை நினைக்கும் போது...என் மனதைக் கல்லாக்கிக்கொண்டு ஊருக்குக் கிளம்ப நிச்சயித்தேன்.

ஆனால், அவள் உடல் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. நினைவிழந்தாள். இரவு என் பயணம் தடைப்பட்டது. நான் போகவில்லை. மறுநாள் காரியாலயத்திலிருந்து தந்தி வந்து விட்டது; என்னைப் புறப்பட்டு வரச் சொல்லியிருந்தனர். அன்று போய் விட்டு மீண்டும் லீவு பெற்று மறுநாள் இரவு கிளம்பி வந்துவிடலாம் என்று நினைத்துப் புறப்பட்டேன். நான் கிளம்பியபோது புவனம் தன் சுய உணர்வுடன் இருக்கவில்லை. பலஹீனம் காரணம் என்றார் டாக்டர். உண்மையறிந்த அவர் என்னையும் பக்கத்தில் இருக்க வேண்டுமென்றார். மறு



நான் வந்து விடுவோம் என்று கிளம்பி விட்டேன். என்னை நானே நம்பவில்லை. அவ்வளவு மனித உணர்ச்சியற்றவனாகவா ஆகிவிட்டோம் என்று நினைத்தேன்.

## 4

ரயில்வே ஸ்டேஷனை விட்டு வெளியேறிக் குறுக்குச் சாலை மதகை வந்தடைந்த போது, எனக்கு ஒரு நிமிஷம் அங்கே நிற்கத் தோன்றியது. அந்த இடம் வழக்கமாக நான் மாலை வேளைகளில் வந்து உட்காரும் இடம்தான். நான் கண்ட நூதனக் கனவுக்கும் அந்த இடம்தான் சூழ்நிலையாக இருந்தது. அத்தனை நினைவுகளையும் அந்தக் கனவில் நிணிக்க அந்த இடம்தான் காரணமோ என்று எண்ணினேன். இப்படி எண்ணும்போதே, இப்போது மீண்டும் முந்தின இரவில் புவனாவை அந்த நிலையில் விரித்து வந்திருப்பது நினைவுக்கு வந்தது. அந்த இடத்தின் ராசி, நல்ல நினைவுகளுக்கு அங்கே இடமில்லை போலிருக்கிறது என்று எண்ணி வேகமாக நடக்க ஆரம்பித்தேன். ஓட்டமும் நடையுமாகச் சென்று வீட்டை யடைந்தேன்.

வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததும் அம்மா என்னிடம் ஒரு தந்தியைக் கொண்டு வந்து கொடுத்தாள். என் உடல் பதறிற்று. கைகள் நடுங்கின. 'ஆ! புவனா போய்விட்டாளே!' என்று நினைத்தேன். 'பாவி, நேற்றுத் தங்காமல் கிளம்பி வந்து விட்டேனே!' என்று நினைத்தேன். மூன்று நாட்களுக்கு முந்தி கண்ட கனவும், அந்த நினைவுகளும் மனதில் எழுந்தன. அந்த நினைவின் நிழலாக எதையோ எதிர்பார்த்த எனக்கு, அதற்கும் பெரிதாக என் புவனாவையே.........

தந்தியைப் பிரித்தேன்.

"புவனாவுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது: தாயும் சேயும் சௌக்யம்" என்று தந்தி!


நான் அந்த இடத்தை விட்டுக் கிளம்பிய பிறகு கொடுக்கப்பட்டிருக்கிறது; நான் வீட்டிற்கு வருமுன்பே வந்துவிட்டது. நான் அதிசயித்தேன். அதற்குள் பிரசவமா......?

"என் அம்மா, விஷயத்தை முதலிலே சொல்லப்படாதோ! நான் என்னமோ, ஏதோன்னு......"

"எதிராத்துச் சுந்தரம் படிக்கச் சொன்னான்; அது இரண்டும் கெட்டான்......... ஒன்னு கிடக்க ஒன்னு சொல்லியிருக்குமோன்னு எனக்கு......நெசந்தானா......?" என்றாள்.

"ஆமாம்" என்றேன்.

"அப்போ மாசம்தான் தப்பாய்க் கணக்குப் பண்ணி யிருக்காப்போலிருக்கு......" என்று ஏதோ அவள் சொன்னது அரை குறையாக என் காதில் விழுந்தது.




"புது மந்திரிகளுக்குப் புது இலாக்காக்கள்" என்னும் தலைப்புடன் 17-4-'49 "கல்கி" இதழில் வெளியான கார்ட்டூனைப் பார்த்த நேயர் ஒருவர் "பேட்டி கொடுக்கும் மந்திரி ஒருவரும் இருக்கலாமே?" என்று அபிப்பிராயப்படுகிறார். நமக்கு ஆட்சேபம் இல்லை!



# யாருக்குச் சொந்தம்?

அஜயம்

"மன்னி!"

"யார்? பத்மாவா? வா, அம்மா!"

"மன்னி, நான் உன்னை ஒன்று கேட்கிறேன், சொல்லுகிறாயா?"

"கேளு, தெரிந்தால் சொல்லுகிறேன்."

"ஆமாம்; நீ ஏன் எப்பொழுதும் வெள்ளைப் புடவையையே உடுத்திக் கொள்ளுகிறாய்?"

"சும்மாதான்!"

"ஏன் மன்னி, உனக்கு அம்மா கலர்ப் புடவை வாங்கித் தரமாட்டேன் என்கிறாளா?"

"அம்மா தரமாட்டேன் என்று சொல்லவில்லை, பத்மா! என் விதி என்னைக் கலர்ப் புடவை உடுத்திக் கொள்ள விடவில்லை. அதற்கு அம்மா என்ன செய்வாள், பாவம்!"

"ஏன் மன்னி! 'விதி, விதி' என்கிறாயே! அது யார்? அம்மாவைப் போல அவள் உன்னோடு தினம் தினம் சண்டை போடுகிறாளா? திட்டுகிறாளா?" என்று அலமேலுவின் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு கேட்டாள் ஐந்து வயதுகூட நிரம்பாத பத்மா. சிறிது நேரம் வரை அலமேலுவின் பதிலை எதிர்பார்த்தும் அவள் பதில் சொல்லாமல் இருக்கவே, "மன்னி, அந்த விதி என்பவள் எங்கே யிருக்கிறாள்? எனக்குச் சொல்ல மாட்டாயா?" என்று மோவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு பத்மா கெஞ்சாக் குறையாகக் கேட்டாள்.

அம்மியில் அரைத்துக் கொண்டிருந்த துவையலை ஒரு தட்டில் எடுத்து வைத்தவாறே ஒரு பெருமூச்சு விட்டாள் அலமேலு. பிறகு, "அந்த விதி இருக்குமிடம் எனக்கே தெரிந்தால் அல்லவா சொல்வதற்கு?" என்று சொல்லியவாறே அலமேலு சமையலறைக்குள் சென்றாள்.

உள்ளே சென்றதும் புடவைத் தலைப்பினால் கண்ணைத் துடைத்துக் கொண்டு அடுப்பில் வெந்து கொண்டிருந்த கறிக்குத் தாளித்துக் கொட்டினாள். சமையல் காரியம் கிட்டத்தட்ட முடியும் தருவாயில் இருந்தது. அதற்குள் பத்மாவின் தாயார் ரௌத்திரா காரமாகச் சமையலறைக்குள் நுழைந்தாள். "மணி பத்துக்கு மேலாகப் போகிறது, இன்னும் சமையல் ஆகவில்லையா? விடிந்தாற் போலத்தான்! குழந்தைகள் வயிற்றுப் பசியுடனேயே பள்ளிக்கூடம் போய்த் தொலையட்டும் என்பது உன் எண்ணமோ? அப்பப்பா! இந்தக் கடன்காரியினால் எனக்கு எவ்வளவு துன்பம்? வீட்டிலே அப்படியென்ன பிரமாதமாகப் புரட்டி எடுக்கிற வேலையிருந்து விட்டது, இன்னும் சமையல் ஆகாமல் இருப்பதற்கு? உலகத்திலே உள்ள பொம்மனாட்டிகள் அத்தனை பேரும் வேலை செய்யவில்லை; நீ மட்டுந்தான் வேலை செய்து புரட்டுகிறாயாக்கும்!" என்று மூச்சு விடாமல் அடுக்கிக் கொண்டே போனாள். பிறகு பக்கத்திலிருந்த பலகையை எடுத்துப் போட்டுக்கொண்டு, அடுப்பங்கரையில் உட்கார்ந்து கொண்டாள். அலமேலு மிகவும் பயபக்தியுடன், "அம்மா, மணி இப்பொழுதுதானே ஒன்பதாகிறது? இன்னும் பத்து நிமிஷத்துக்குள் சமையலாகிவிடும். நீங்கள் எதற்காக வீணில் சிரமப்பட வேண்டும்?" என்று கேட்டாள்.

பக்கத்தில் இருந்த கரண்டியைத் தூக்கி அலமேலுவின் மேல் விட்டெறிந்து, "நான் பொய் சொல்லுகிறேன், நீதான் நிஜம் சொல்லுகிறாயாக்கும்! எத்தனை தடவை, எதிர்த்து வாயாடாதே என்று நான் உனக்குச் சொல்லுவது? சொல்லச் சொல்லக் கேட்காமல் நீபாட்டில் பேசிக் கொண்டே போகிறாயே! உனக்கு மூளை யிருக்கிறதா? என்ன கர்வமடி யம்மா, உனக்கு! உன்னைப் போல நூறுபேரை நான் இந்த விரலை விட்டு ஆட்டிவிடுவேனாக்கும்! பதில் பேசாமல் சமையலறையை விட்டு வெளியே போய்த் தொலை!" என்று எரிந்து விழுந்தாள் பத்மாவின் தாயார்.

கண்களைத் துடைத்துக்கொண்டு அலமேலு சமையலறையை விட்டு வெளியே போனாள். சின்னக் குழந்தையான பத்மாவுக்குத் தன் தாயார் செய்யும் இந்த காட்டாண்மை ஒரே ஆச்சரியத்தை விளைவித்தது. அலமேலு போவதைக் கண்டு அவளும் அவள் பின்னாலேயே போகலானாள். ஆனால் தாயார் ஒரு அதட்டல் போட்டதும் பத்மா கதிகலங்கிப் போய்ப் பேசாமல் திரும்பி விட்டாள்.

அந்த வீட்டில் தினம் இதுபோல ஏதாவது ரகளை நடந்துகொண்டேயிருந்தது.

## 2

குழந்தைகள் சாப்பிட்டுவிட்டு அரை மணி முன்னதாகவே பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டு விட்டன. சிறிது நேரத்துக்கெல்லாம் வக்கீல் ராமச்சந்திரய்யர், தன் கட்சிக்காரர்களிடமிருந்து ஒருவிதமாகத் தன்னை விடுவித்துக் கொண்டு உள்ளே நுழைந்தார். அவருக்குக் குழந்தைகள் பள்ளிக்கூடம் புறப்பட்டுப் போனது தெரியாது. வீடு வெறிச்சென்றிருப்பதைப் பார்த்துவிட்டு, "குழந்தைகள் எல்லாம் எங்கே?" என்று கேட்டார்.

பத்மாவின் தாயார் முகத்தைப் பெரிதாக வைத்துக் கொண்டு, "பள்ளிக்கூடம் போய் விட்டதுகள்! வேறெங்கே அவைகளுக்குப் போக்கிடம்? ஆமாம், மணி என்ன ஆயிற்று, தெரியுமோ?" என்று கேட்டாள்.

இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த கடிகாரத்தை எடுத்துப் பார்த்துவிட்டு, "மணி ஒன்பதரைதான் ஆகிறது. சரி, நான் இன்றைக்குச் சீக்கிரமாகக் கச்சேரிக்குப் போகணும்" என்றார் ராமச்சந்திரய்யர்.

பத்மாவின் தாயாருக்கு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "அவள் சொன்னதைக் கேட்டுவிட்டாற் போலிருக்கிறது. மாட்டுப் பெண் 'ஒன்பதுதானே ஆகிறது?' என்றாள்! மாமனார் ஒன்பதரை ஆகிறது என்கிறார். நியாயந்தானே? நீங்கள் அவளுடைய வார்த்தையைப் பொய்யாக்குவீர்களோ? மாட்டீர்கள்! இந்த வீட்டில் வேலைக்காரர்களுக்குக் கூட மட்டு-மரியாதை உண்டு. ஆனால் எனக்குத்தான் அதெல்லாம் இல்லை. இந்த வீட்டிலே எல்லாரும் நிஜம் சொல்லுகிறவர்கள்; நான் மட்டும்தான் பொய் பேசுகிறவள். நான் பண்ணின பூஜா பலன் அப்படி. என் தலையிலே எழுதின எழுத்து அப்படி!" என்று சொல்லிப் பத்மாவின் தாயார் 'கோ'வென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

"நீ பொய் சொல்லுகிறாய் என்று நான் எங்கே சொன்னேன்? கடிகாரம் தப்பாகப் போகிறதோ, என்னவோ? இதற்காக அழுவதற்கு என்ன இருக்கிறது? அடி அசடே!" என்று சமாதானப் படுத்திவிட்டு, ராமச்சந்திரய்யர் ஸ்நானம் செய்யப் போனார்.

அவருக்குத் தன் மனைவியின் சுபாவம் நன்றாகத் தெரியும். அவள் அலமேலுவை எப்படியெல்லாம் ஹிம்சிக்கிறாள் என்பதும் அவருக்குத் தெரியாததல்ல. சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் அவள் அலமேலுவைத் திட்டுவதும் அடிப்பதும் சர்வசகஜம். இம்மாதிரிக் காரணங்களால் தான் அவருக்குத் தன் மாட்டுப் பெண்மீது அளாதி அன்பும் அனுதாபமும் ஏற்பட்டிருந்தது. அலமேலு அவருடைய முதல் மனைவிக்குப் பிறந்த பிள்ளையின் மனைவி. கலியாணமாகிக் கொஞ்ச காலத்துக்குள்ளேயே பாழும் தெய்வம் அலமேலுவின் கணவனை ஏப்பமிட்டுவிட்டது. அவளுக்குப் பிறந்த வீட்டிலும் யாரும் கிடையாது. அபாக்கியவதியான அலமேலுவைப் பார்த்துக்கொள்ள யாரும் இல்லாமற் போகவே அவள் வக்கீல் ராமச்சந்திரய்யருடைய வீடுதான் கதி என்றிருந்தாள். அவரும் மாட்டுப்பெண்ணை வெகு பட்சமாக நடத்தி வந்தார். அதைக் காணப் பத்மாவின் தாயாருக்குச் சிறிதும் சகிக்கவில்லை. அவர் எவ்வளவுக் கெவ்வளவு அநுதாபம் காட்டுகிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு அவள் அலமேலுவை வெறுத்து வந்தாள்.



ராமச்சந்திரய்யர் கொஞ்சம் மனைவிக்குப் பயந்தவர். அதனால் தான் அவள் செய்யும் கொடுஞ்செயல்களையெல்லாம் கண்டிக்க அவருக்குத் துணிவு உண்டாகவில்லை. உண்மையென்னவென்றால், மனைவிக்கு விரோதமாக ஒரு காரியத்தைச் செய்து, அவளுடைய விரோதத்தை விலைக்கு வாங்கிக் கொள்ள அவர் சற்றும் விரும்பவில்லை. அதனால்தான் அவர் அதிகமாக

'மௌனம் சர்வார்த்த சாதனம்' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார்.


இன்றைக்கும் ஏதோ வார்த்தை நடந்திருக்கிறது என்பதை அவர் நன்றாக உணர்ந்து கொண்டார். அலமேலு அன்ன ஆகாரமின்றி பட்டினி கிடக்கவேண்டியும் வரலாம் என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆகவே அவர் கச்சேரிக்குப் போவதற்கு முன்பாக அலமேலு இருந்த அறைப்பக்கம் சென்று, "அம்மா குழந்தாய்! பட்டினி கிடக்காதே! சாப்பிட்டுவிடு. நீ பட்டினி கிடந்தால் எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கும்" என்று சொல்லிச் சென்றார்.

"பட்டினி கிடக்காதே; நீ பட்டினி கிடந்தால் எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கும்" என்று ராமச்சந்திரய்யர் சொன்ன சொல் பத்மாவின் தாயாருடைய காதிலும் விழுந்தது. அவளுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. "இந்த அன்னக்காவடியின் மேல் இவ்வளவு அன்பா? கச்சேரிக்குப் போவதற்கு முன்னாலே உபதேசம் வேறு செய்துவிட்டுப் போகிறாரே! 'சாப்பிடாமல் இருந்து விடாதே!' என்று எவ்வளவு கரிசனமாகச் சொல்லிவிட்டுப் போகிறார்! இந்த மனுஷ்யருக்கு என்னோடு ஒரு வார்த்தை பேசுவதற்குப் பொழுதில்லை; மாட்டுப்பெண்ணுக்கு உபதேசம்செய்ய மட்டும் பொழுது எங்கிருந்து வந்ததோ? இருக்கட்டும், அவள் சாப்பிடுவதை நான் பார்த்து விடுகிறேன்!" என்று அவள் தன் மனதுக்குள் கருவிக் கொண்டாள்.

பத்மாவின் தாயார் சாப்பிட்டு எழுந்ததும் முதல் வேலையாக மிகுந்திருந்த சோற்றையெல்லாம் வேலைக்காரிக்குக் கொடுத்துவிட்டுப் பாத்திரங்களை எடுத்துத் தேய்க்கப் போட்டுவிட்டாள். அலமேலு சமையலறைக்குள் போய்ப் பார்த்தாள். எல்லாப் பாத்திரங்களும் 'மறமறக்க' ஒழித்துப் போடப்பட்டிருந்தன. வெங்கலப் பானையில் ஒரே ஒரு பிடி சாதம் மட்டும் இருந்தது. அதை எடுத்து மோரும் சாதமுமாகக் கரைத்துக் குடித்துவிட்டுப் பேசாமல் தன் அறைக்குப் போய்ப் படுத்துக் கொண்டாள்.

## 3

அன்று கச்சேரியில் அதிக வேலை இல்லாததால் ராமச்சந்திரய்யரும் சீக்கிரமாகவே வீடு திரும்பி வந்தார். பத்மாவின் தாயார் எங்கேயோ வெளியே போயிருந்தாள். வீட்டில் மனைவியைக் காணாமல் போகவே அவர் தன் மாட்டுப்பெண் இருக்கும் அறைக்குப் போனார். அவள் இருந்த பரிதாப நிலையைப் பார்த்து அவர் கண்களில் நீர் சுரந்தது. இன்று கிட்டு உயிருடன் இருந்தால் இவளுடைய நிலைமை இவ்வளவு கேவலமாகவும் பரிதாபமாகவும் இருக்குமா?



"அடே ராமு! இந்த அலமாரியைத் திறக்காதே. உள்ளே பூச்சாண்டி இருக்கிறான்!"
"அம்மா! நீ நேற்றைக்குப் பொய் தானே சொன்னாய், நான் பட்சணத்தைத் தின்று விட்டேன் என்று!"

தன்னுடைய பயங்கொள்ளித்தனத்தை நினைத்து தன்னைத்தானே அவர் மிகவும் நொந்து கொண்டார். அலமேலு உடுத்தியிருந்த புடவை தாறுமாறாகக் கிழிந்து கிடந்தது. அந்தப் புடவை மானத்தைக் காத்துக்கொள்ளக்கூடப் போதுமானதாகத் தோன்றவில்லை. அவளுக்கென்று பாய் படுக்கை கிடையாது. தரையில் கையைத் தலைக்கு உயரமாக வைத்துக்கொண்டு அவள் படுத்திருந்தாள். அரைகுறைத் தூக்கத்திலிருந்த அவள் காலடிச் சத்தம் கேட்டு அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்து நின்றாள். எதிரே மாமனார் நிற்பதைக் கண்டதும் அவள் எண்சாண் உடம்பை ஒரு சாணாகக் குறுக்கிக்கொண்டு ஒரு மூலையில் போய் நின்றாள். வாடி வதங்கிப் போன அவளுடைய முகத்தைக் கண்ட ராமச்சந்திரய்யர் மிகவும் அன்புடன், "அம்மா, சாப்பிட்டாயா?" என்று கேட்டார்.

அலமேலுவின் வாயிலிருந்து 'இல்லை' என்ற சொல் வந்துவிட்டது. ஆனால் அடுத்த கணமே அவள் அதைச் சமாளித்துக் கொண்டு, "ஆ! சாப்பிட்டேனே!" என்றாள்.

"உன்னைப் பார்த்தால் சாப்பிட்டவளாகத் தோன்றவில்லையே!" என்றார் அவர்.

அலமேலு வாய் திறக்கவில்லை. அவள் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு நின்றாள். கண்களில் கண்ணீர் கோத்து நின்றது. அவள் தன் கால் நகங்களால் பூமியில் கோடு இழுத்தவண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

"நீ சாப்பிடவில்லை அல்லவா? கிழவன் சொன்ன இந்த வார்த்தையை இப்படி நீ கேட்காமல் இருந்ததில் எனக்கு ரொம்ப வருத்தம்!" என்று ஆரம்பித்தார் ராமச்சந்திரய்யர்.

அதைக் கேட்கவும் அலமேலுவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அவள் என்ன பதில் சொல்லுவாள்? சிறிது நேரம் கழித்து, "அப்பா, நான் உங்கள் வார்த்தையைத் தட்டவில்லை. சமையலறையில் இருந்ததைச் சாப்பிட்டேன்" என்றாள்.

ராமச்சந்திரய்யருக்கு அவள் வார்த்தையில் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆகவே, வேலைக்காரியைக் கூப்பிட்டுக் கேட்டார். அதற்கு அவள், "நான் சாப்பிட்ட உடனே தான் அம்மா மிச்சம் மிகுதியிருந்த சோற்றை என்னிடம் எடுத்துப் போட்டு விட்டாங்களே! இந்த அம்மா எங்கே சாப்பிட்டிருக்கப் போறாங்க?" என்று பதில் சொன்னாள்.

தன் மனைவியின் கொடுஞ் செயலையும், மாட்டுப் பெண்ணின் தன்னடக்கத்தையும் நினைக்க நினைக்க ராமச்சந்திரய்யருக்கு மாட்டுப் பெண்மேல் அளவு கடந்த பற்றுதல் ஏற்பட்டது. உடனே அவர் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து மாட்டுப் பெண்ணிடம் கொடுத்து, "இந்தா, அம்மா! இந்தப் பணத்தை உன் செலவுக்கு வைத்துக்கொள்" என்றார்.

அதே சமயம் சொல்லி வைத்தாற்போல, பத்மாவின் தாயார் எங்கிருந்தோ வந்து சேர்ந்தாள். ஒரே ஓட்டமாக ஓடிப்போய் அந்தப் பணத்தை 'வெடுக்'கென்று பிடுங்கிக் கொண்டாள். அவளுடைய முகம் குங்குமமாகச் சிவந்தது. "சிவ சிவா! இந்த அநியாயத்தை யாராகிலும் கண்டது உண்டோ? கலி பெருகி விட்டது என்று சொல்லுவது

## பஞ்சுக்குப் பஞ்சம்!



சரியாகத்தானிருக்கிறது. சின்னஞ் சிறிசுகள் இருக்கிற இடத்திலே—அதுவும் தன்னந் தனியாக இருக்கிறபொழுது—உள்ளே நுழைய உங்களுக்கு வெட்கமாயில்லே! நீங்கள் கொடுக்கிற இடத்தினால் தானே இவனுக்கு இவ்வளவு மண்டைக் கனம் ஏறிவிட்டது! இவ்வளவு தூரம் விஷயம் முத்திப் போய்விட்டது என்று எனக்குத் தெரியவே தெரியாதே! அட கிரஹசாரமே!'' என்று சொல்லிவிட்டு வெகு வேகமாக அந்த அறையை விட்டு வெளியேறினாள். அவளுக்குப் பின்னாலேயே அவரும் வாய் திறக்காமல் சென்றார்.

அவர் அவ்வளவு வயதானவர் அல்ல. இருந்தாலும் வாழ்க்கைப் போராட்டத்தில் பல அல்லல்களுற்றுப் பிள்ளையையும் பறி கொடுத்த துயரத்தினால் அவர் ரொம்பவும் வயதானவராகத் தோற்றமளித்தார். துயரமும் கோபமும் தாங்கமாட்டாமல் அவர் வாசற் பக்கத்து அறையில் வந்து படுத்துக் கொண்டார். பிள்ளை பிட்டுவின் நினைவு வரவே, தலையணைக்கடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அவர் விசித்து விசித்து அழலானார். அதே சமயம் பின்னாலிருந்து வந்த பத்மா அவருடைய கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு, கள்ளங் கபடமற்ற குரலில், "ஏன் அப்பா அழுகிறாய்?'' என்று கேட்டாள். ராமச்சந்திரய்யர் விரக்தியுடன், "எல்லாம் என் விதியை நினைத்துத்தான் அம்மா!'' என்றார்.

காலையில்தான் அவள் அலமேலுவின் வாயிலிருந்து 'விதி' என்ற சொல்லைக் கேட்டிருந்தாள். அப்புறம் அவள் அழுவதையும் கண்ணால் கண்டாள். அதேபோல இப்பொழுது அப்பாவும் 'விதி' என்று சொல்லிவிட்டு அழுவதைக் காணும்பொழுது, அவளுக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. "ஏன் அப்பா! இந்த விதி யார்? எங்கே இருக்கிறான்? அவன் அம்மாவுக்கு ஏதாவது சொந்தமோ?'' என்று கேட்டாள் குழந்தை.

பத்மாவின் இந்தக் கள்ளங்கபடமற்ற கேள்வியைக் கேட்டு, துயரம் ததும்பிய அந்தச் சமயத்திலும் ராமச்சந்திரய்யருக்குச் சிரிப்பு வந்தது. "ஆமாம் கண்ணு, அது உங்க அம்மாவுக்குக் கூடப் பிறந்த தங்கை!'' என்று பதில் சொன்னார் அவர்.

பத்மாவுக்கு அவர் சொல்லில் அபார நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. "அதனால் தான் அவன் உன்னையும் மன்னியையும் அம்மாவைப் போல இப்படி அழ வைக்கிறான் போலிருக்கிறது!'' என்றாள் பத்மா.

**(ஹிந்திக் கதையைத் தழுவியது)**




### இருக்கலாம்!

"இந்த ஹார்மோனியத்துக்குப் பத்து ரூபாய்க்குமேல் ஒரு தம்பிடி கூடக் கொடுக்க முடியாது!''

"என்ன அப்பா, இது? பத்து ரூபாயா? பக்கத்து வீட்டுக்காரர்கள் பதினைந்து ரூபாய் தருகிறேன் என்கிறார்களே!''

"நீங்கள் ஹார்மோனியம் வாசிப்பதை நிறுத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் சொல்லியிருக்கலாம்!''

★

### நிஜம்தான்!

**கணவன்:**—இன்னும் கொஞ்ச நாளில் ரேஷனையே எடுத்துவிடப் போகிறார்களாமே!

**மனைவி:**—நிஜமாகவா?

**கணவன்:**—ஆமாம், நிஜமாகத்தான்! அரிசி கிடைத்தால்தானே ரேஷன் திட்டம் இருக்கும்? இன்னும் கொஞ்ச நாளில் அரிசியே கிடைக்காது போலிருக்கிறதே!

★

### நல்ல தீர்ப்பு!

**நீதிபதி** (ஒரு ஜீவனாம்ச வழக்கில்):—நான் உன் மனைவிக்கு மாதம் முப்பது ரூபாய் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

**கணவன்** (குற்றவாளி):—ரொம்ப சந்தோஷம். நீங்கள் செய்யும் உதவிக்கு நன்றி. நானும் ஏதாவது என்னால் முடிந்த ரொக்கத்தை அவளுக்கு அனுப்பி வைக்கிறேன்!

★

### பாதகமில்லை!

**நண்பர்:**—ஐந்து ரூபாய் கடன் கொடுப்பது பிரமாதமில்லை. அதனால் நமக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு, பேச்சு வார்த்தை கூட நின்றுவிடும். ஆகையினால் நான் கொடுக்க மாட்டேன்!

**மற்றவர்:**—பாதகமில்லை, கொடு அப்பா! சிநேகம் இருந்தால் இருக்கட்டும், போனால் போகட்டும்; சமயத்துக்கு ஒத்தாசை செய்!

# கம்பர் காட்டும் காட்சி

டி.கே.சி.

## 250. உன் சொல்லும் அவனது சொல்தான் !

விபீஷணன் ராவணனுக்கும் மற்ற அரக்க வீரர்களுக்குமாக இரணியனது கதையைச் சொல்லுகிறான்.

இரணியன் என்பவன், பிரமனுடைய நேர் வாரிசு என்று சொல்லும்படியாக, சகல பாக்யங்களுக்கும் உரியவனாய் இருந்தான்.

தேக திடத்திலும் காத்திரத்திலும் அவனுக்குச் சமானமானவர் உலகத்தில் யாருமே இல்லை. வேறொரு உலகத்தைச் சேர்ந்தவனோ என்றுதான் சொல்லவேண்டும்.

அறிவிலும் மகா மேதாவியாய் இருந்தான். சகல சாஸ்திரங்களையும் கற்றுக் கரை கண்டிருந்தான்.

வீரச் செயல்களினால் பல நாடுகளும் அவனுக்கு உட்பட்டிருந்தன. மூவுலகங்களுமே அவனுடைய ஆக்ஞைக்கு அடங்கி நடந்தன என்று சொல்லத் தோன்றும்.

எல்லாவற்றிலும் மேலாக அவனுடைய செல்வம் மிகப் பெரியதாய் இருந்தது. குபேரன் ஏழைதான், இரணியனது பொக்கிஷத்தைக் கணக்கிடும்போது. உலகத்திலுள்ள பொன் எல்லாம் அவனுக்குக் காணிக்கையாக வந்துவிட்டது. அதனாலேயே அவனை ஹிரண்யன் (ஹிரண்யம் - பொன்) என்று அழைத்தார்கள்.

தன்னிடத்திலுள்ள அளவிறந்த பொன்னைக் கொண்டு எத்தனையோ பெரிய காரியங்களைச் சாதித்தான். ஏரிகளை உண்டாக்கினான், காடுகளை வளமான நன்செய்களாக ஆக்கினான், சத்திரங்களைக் கட்டினான். யாரும் செய்ய முடியாத வேள்விகளைச் செய்தான்; அதாவது விருந்தளித்தான்.

அத்தனை அரிய காரியத்தையும் செய்த காரணத்தால் எல்லோரும் அவனைக் கடவுள் என்று சொல்லி உபசரித்தார்கள். உபசார வார்த்தை மெள்ள மெள்ள உண்மை உரையாகத் தொனித்தது.

இரணியனுடைய மனசிலும், சக்தி எல்லாம் தன் சக்திதான் என்று தோன்றிற்று. கடவுளாவது ஒன்றுவது என்று பேச ஆரம்பித்தான்.

சகலரும் அதை ஆமோதிக்க வேண்டும் என்றாயிற்று.

***

இந்த நிலையில் இரணியனுக்குப் பிள்ளை பிறந்தது. பிள்ளைக்குப் பிரகலாதன் என்று பேரிட்டான்.

பிரகலாதன் பிறக்கும்போதே ஞான திருஷ்டியோடு பிறந்தான். அவனுடைய பார்வைக்கும் மற்ற சாமானிய மக்களது பார்வைக்கும் வெகு தூரம். கண்ணுள்ள ஒருவனுக்கும் கண்ணே இல்லாமல் இருப்பார்களே அவர்களுக்கும் உள்ள வித்தியாசம்தான்.

சாமானிய மக்கள் ஒரு மரத்தைப் பார்த்தால் அதன் புறமான பாகத்தைப் பார்க்கிறார்கள். அதற்கு அப்பால் ஒன்றும் தோன்றுவதில்லை.

ஆனால் பிறவிஞானியான பிரகலாதனுக்கோ மரத்துக்குள் நிகழும்—அணு அணுவாகவே அணுவுக்குள் அணுவாகவே நிகழும்—சகல நிகழ்ச்சியும் தெளிவாய்த் தோன்றும்.

அது மாத்திரம் அல்ல, எல்லா நிகழ்ச்சியும் அநாதியான ஒரு நியதியின் படியே நிகழ்கின்றன என்பதும் தெரியும். அந்த நியதி தத்துவம் என்றென்றும் நிலைத்து நிற்பது, எங்கும் நிறைந்து நிற்பது, ஆனந்த மயமாகவே நிற்பது என்ற உண்மையும்



"உன் சட்டைப் பையில் இருக்கும் கடிகாரத்தை எடுத்துக் கீழே வை!"

"ஐயோ! கடிகாரமா? என்னிடம் கடிகாரமே இல்லையே!"

"டக் டக் என்று கடிகார சத்தம் கேட்கிறது! இல்லை என்று பொய் சொல்லுகிறாயே!"

"ஐயோ! அது கடிகாரம் இல்லை. என் நெஞ்சு அப்படி அடித்துக் கொள்ளுகிறது!"

பிரகலாதனுக்குப் பிரத்தியக்ஷமாகவே தெரிந்தது.

இந்த உண்மைகளை—தானே கண்டு அனுபவித்த உண்மைகளை, பிரகலாதன் பிறருக்குச் சொல்லிக் கொண்டும் அதை உணர்த்தும் பாடல்களைப் பாடிக் கொண்டும் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறான்.

தந்தையின் பெரிய பெரிய செயல்களை அவன் கவனித்ததாகவே இல்லை. மற்றவர்கள் எல்லாரும் வாய் ஓயாமல் புகழ்ந்து கொண்டிருக்க, சொந்த மகன் புகழாமல் இருப்பது ஏதோ தன்னை இகழ்ந்தமாதிரி பட்டது தந்தைக்கு.

இரணியன் ஒரு நாள் மகனை அழைத்து "அப்பனே, உனக்கு நான் ஒரு பொருட்டாகப் படவில்லை போலிருக்கிறது. என்னைவிட சக்தியுள்ளவர்கள் யாரையாவது நீ கண்டிருக்கிறாயா?" என்று கேட்டான்.

"ஆம், கண்டுள்ளவன் தான் நான்!" என்றான் பிரகலாதன்.

"அவன் யாரோ?" என்று கேட்டான் தந்தை.

"அவன்தான் எங்குமாய், எல்லா வஸ்துவுமாய் இருக்கும் கடவுள்" என்றான் பிரகலாதன்.

"அவன் எங்கே இருக்கிறான் கொஞ்சம் காட்டேன், பார்க்கலாம்" என்றான் தந்தை. ஏளனமாய்த்தான்.

'சாணிலும் உளன், ஓர்தன் மை
அணுவினைச் சதகூறிட் ட
கோணிலும் உளன்மாமே ருக்
குன்றினும் உளன்இந்நின் ற
தூணிலும் உளன், நீசொன் ன
சொல்லினும் உளன்: இத்தன் மை
காணுதி விரைவின்' என் றான்;—
நன்றெனக் கனகன்நக் கான்.

[சாணிலும் உளன்: இறைவன் ஒருச் சாண் இடத்திலும் இருக்கிறான்; ஓர் தன்மை அணுவினைச் சத கூறிட்ட கோணிலும் உளன்: கட்டடத்துக்குச் செங்கல் போல், ஜட உலகத்துக்கு ஒரு தன்மையான அணு இருக்கிறது. அந்த அணுவை நூறு (அதாவது லக்ஷந்தான் கோடி தான்) பாகமாக வைத்த நுனியிலும் இருக்கிறான்; மாமேருக் குன்றிலும் உளன்: உலகத்திலேயே பெரிய மலை என்று சொல்லும் மேரு மலையிலும் நிறைந்து இருக்கிறான்; இந்நின்ற தூணிலும் உளன்: இதோ உன் பக்கத்தில் தூண் நிற்கிறதே அதிலும் இருக்கிறான்—இதோடு நிற்கவில்லை; நீ சொன்ன சொல்லினும் உளன்: கடவுளோது ஒன்றேது என்று நீ சொன்னாயே அந்தச் சொல்லும் நீ சொன்னதல்ல, அந்த இறைவன் உன் வேஷத்தில் நின்று சொன்ன வார்த்தைதான், நீ என்று ஒருவனே இல்லை; இத்தன்மை காணுதி விரைவின் என்றான்: கடவுளாது இந்த நிலைமையை இதோ காட்டப் போகிறேன் நீயே பார்த்துக் கொள் என்று சொன்னான் பிரகலாதன்; நன்றெனக் கனகன் நக்கான்: பலே பேஷ்! வெகு அழகு! என்று இரணியன் (கனகம்: பொன்) சிரித்தான்.]

"கடவுள் இல்லை" என்று இரணியன் சொன்னதே, "கடவுள் சொன்ன வார்த்தை தான்" என்று மகன் சொன்னது ஏதோ ஒரு புதிர் போல்பட்டது இரணியனுக்கு; அது சிரிப்பை உண்டாக்கி விட்டது.

மிகப்பெரிய உண்மையை வெகு ரஸமான முறையில் சொல்லுகிறது கவி.

# புத்திசாலிகள்!

சோனல்

சோனி நெற்றிப் புருவத்தைக் கைகளால் அழுத்திப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனை அசைப்பில் பார்ப்பவர்கள் அவன் இருக்கிற நிலையைப் பார்த்து அவன் பொறுக்க முடியாத தலைவலியால் அவஸ்தைப் படுகிறான் என்றுதான் நினைப்பார்கள். அதே சந்தர்ப்பத்தில் அவன் கையிலிருக்கும் பத்திரிகையையும் கவனிக்கும்படி நேர்ந்தால், அந்தப் பத்திரிகைதான் அவனுக்குத் தலைவலியை உண்டாக்கி யிருக்க வேண்டுமென்ற முடிவுக்குச் சுலபமாக வருவார்கள்.

இப்படிப்பட்ட தலைவலியை உண்டாக்கும் சூழ்நிலையில்தான் சிங்காணி சோனியின் அறையில் நுழைந்தான்.

சிங்காணி ஒரு பெரிய மேதை என்பது சோனியின் அபிப்பிராயம். அவனை மேதையாக்கிய விஷயம் எதுவென்றால் அவன் பேச்சுத்தான். பேச்சென்றால் சாதாரணப் பேச்சல்ல. அது அவனுக்கும் விளங்காது ; நமக்கும் விளங்காது! அப்படிப்பட்ட பேச்சு. இந்த சிங்காணி சோனிக்கு அத்யந்த நண்பன். சோனி சிங்காணிக்கு உயிர் நண்பனாய் இருப்பதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதாவது அவனை யொட்டித் தானும் ஒரு குட்டி மேதையாகி விடலாம் என்ற எண்ணந்தான்.

சோனியின் தலை வேதனையைக் கணத்தில் தெரிந்துகொண்டு அரைமணி நேரம் ஸ்தம்பித்து நின்ற சிங்காணி ஜாக்கிரதையாகச் சோனியை நெருங்கி "என்ன சோனி, தலை வலியா?" என்றான் அனுதாபத்தோடு.

"இல்லை; ஒரு கணக்கு!" என்றான் சோனி.

"கணக்கா? என்ன கணக்கு? சொல்லு! நான் இருக்கும்போது உனக்கேன் இந்தத் தலை வேதனை?"

சோனி கையிலிருந்த பத்திரிகையை மூடி வைத்துக்கொண்டு சொல்ல ஆரம்பித்தான். "முதலில் அவன் ஐந்து ஆழாக்குப் போட்டான்; அப்புறம் மூன்று ஆழாக்குப் போட்டான். மொத்தம் எட்டு ஆழாக்கு ஆகிவிட்டதா? ஆனால் அவனுக்கு வேண்டியது ஏழு ஆழாக்குத்தான்!"

"என்னத்தை ஐந்து ஆழாக்குப் போட்டான், மூன்று ஆழாக்குப் போட்டான்?"

"ஏதோவொன்று—அரிசி."

"அரிசியா? ரேஷன் கடையிலா?"

"ரேஷன் கடையிலோ, பிளாக் மார்க்கெட்டிலோ—எங்கேயோ!"

"எங்கே யிருந்தா லென்ன? இந்தக் காலத்திலே ஒரு ஆழாக்கு அரிசி ஏமாந்து போய்க் கொடுத்துட்டானென்னு கப்புச்சிப்புன்னு எடுத்திண்டு வரதுதான் புத்திசாலித்தனம்!"

"ஹும்! இது நிஜமா நடந்தில்லே—பத்திரிகையிலே வந்திருக்கு இந்தக் கணக்கு. இதுமாதிரி இருபது கேள்வி வந்திருக்கு. இதற்கெல்லாம் நாம் விடை கண்டு பிடித்தால்தான் புத்திசாலிகளாம்."

"இல்லாவிட்டால்?"

"இல்லாவிட்டால் என்னவென்று போடல்லே!"

"அடாடா! இந்தச் சமயத்தில் என் மாமா இல்லாமல் போய்விட்டாரே? அவரை யார் எந்தக் கேள்வி கேட்டாலும் கையோடு கையாய்ப் பளிச்சுப் பளிச்சுன்னு பதில் சொல்லி விடுவார்" என்றான் சிங்காணி.

"அவர் இப்போ எங்கே இருக்கிறார்?"

"வேலூர் ஜெயிலிலோ, பெல்லாரி ஜெயிலிலோ இருக்காராம்."

"ஐயோ பாவம்! அது போகட்டும். இப்போ இந்தக் கணக்குக்கெல்லாம் நாம் இரண்டுபேரும் விடை கண்டு பிடிக்க வேண்டும். இருபது கணக்கில் பதினைந்துக்கு யார் சரியான விடை கண்டு பிடிக்கிறார்களோ அவர்களுக்குப் பிரமாதமான மூளை இருக்கிறதாம். பத்துக் கணக்கிற்கு விடை கண்டு பிடித்தால் சாதாரண மூளையுள்ளவர்களாம்."

"சரி! அந்த ஆழாக்குக் கணக்கு வேண்டாம். வேறொரு கணக்குச் சொல்லு."

சோனி பத்திரிகையைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். "ஒரு மனிதன், ஒரு ஓநாய், ஒரு ஆடு, ஒரு புல்லுக் கட்டு இவைகளுடன் ஒரு ஓடத்தில் ஆற்றைக் கடக்க நினைத்தான்......"

"பயித்தியக்காரத்தனமா யிருக்கே! ஒரு மனிதனுக்கு ஓநாய் எதற்கு?"

"எனக்கென்ன தெரியும்? ஒருவேளை ஆட்டைப் பயமுறுத்துவதற்காக இருக்க

லாம். மேலே கேளு: அவன் ஒரே சமயத்தில் தன்னோடு ஏதாவதொன்றை வைத்துக்கொண்டுதான் ஆற்றைக் கடக்க முடியும். அவன் ஆட்டையும் ஓநாயையும் கரையில் விட்டுவிட்டுப் போனால் ஆட்டை ஓநாய் தின்றுவிடும். அவன் ஆட்டையும் புல்லையும் வைத்துவிட்டுப் போனால் புல்லை ஆடு தின்றுவிடும். ஆகையால் முதன் முதலில் அவன் ஆட்டையும் புல்லையும் வைத்துவிட்டு ஓடத்தில் போகிறான்."

"சே! சே! ஆடு புல்லை தின்னுடாதா?"

"ஆமாம்! ஆமாம்! தவறாகச் சொல்லி விட்டேன். முதலில் அவன் புல்லை எடுத்துப் போகிறான்."

"அப்படியென்றால் ஆட்டை ஓநாய் தின்றுவிடும்."

"ஆமாம். முதலில்...முதலில் அவன் ஆட்டை எடுத்துப் போகிறான்."

"இதுவும் எனக்குச் சரியாகப் படவில்லை. ஓடத்தில் போகும்போது ஓநாய்க்குத் தெரியாமல் மனிதன் ஆட்டை விழுங்கிவிடக் கூடாதா?"

"சே! சே! மனிதன் ஆட்டை விழுங்க முடியுமா?"

"சாதாரண மனிதனால் முடியாது. ராக்ஷஸ மனிதன்னு வைத்துக்கொள்."

"ராக்ஷஸ மனிதன்னு இந்தப் பத்திரிகையிலே போடவில்லையே?"

"போடாததுதான் அசட்டுத்தனம். சரி, அடுத்த கேள்வியைச் சொல்லு."

"ஒரு கிணற்றில் இருபது அடி ஆழத்தில் ஒரு தவளை இருக்கிறது......" என்று மூன்றாவது கணக்கைச் சொல்ல ஆரம்பித்தான் சோனி.

"இருபது அடி ஆழத்திற்கு அது எப்படிப் போச்சு?"

"எப்படிப் போச்சோ!"

"அது தவறிப் போய்க் கிணற்றில் விழுந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதை யாராவது கிணற்றுக்குள் தூக்கிப் போட்டிருக்க வேண்டும்."

"அப்படித்தானிருக்கணும். உம்; மேலே கேளு: ஒவ்வொரு நாளும் அந்தத் தவளை மூன்றடி உயரம் எழும்புகிறது; இரண்டடி கீழே இறங்குகிறது. இப்படி இருந்தால் எத்தனை நாளில் அது கிணற்றின் மேல் மட்டத்திற்கு வரும்?"

"தினம் அந்தத் தவளை ஒரு தடவைதான் எழும்புகிறதா?"

"ஆமாம்!"

"சோனி! அப்படின்னா அது சோம்பேறித் தவளையாய் இருக்கும்! இல்லாவிட்டால் உடம்பில் பலமில்லாத தவளையாய் இருக்கும்."

"இருக்கலாம்!"

"ஹும்!......தினம் ஒரு தடவைதான் எழும்புகிறது இல்லையா......? நான் நினைக்கிறேன், அது கிணற்றுக்குள்ளேயே இருப்பதுதான் நல்லது. அந்தத் தவளை கிணற்றுக்கு வெளியே வந்து எதற்காக நம்மைப்போலக் கஷ்டப்பட வேண்டும்?"

"உன்னுடைய அபிப்பிராயமும் சரிதான். ஆனால் அது கிணற்றுக்கு வெளியே வராவிட்டால் எப்படி இந்தக் கணக்கு உண்டாகும்? எப்படி நம்முடைய மூளையைச் சோதனை செய்து பார்ப்பது?"

"அதுவும் சரிதானே! இது என்ன கஷ்டம்? அந்தத் தவளை இருபது நாளில் தண்ணீரின் மேல் மட்டத்துக்கு வந்துவிடும்."

சோனி மெதுவாக ஒரு தடவை பத்திரிகையைப் பிரித்துப் பார்த்துவிட்டு, "தவறு! பதினெட்டு நாளில் அது மேலே வந்துவிடும். ஏனென்றால் பதினெட்டாவது நாள் அது எழும்பும்போது மேல் மட்டத்திற்கு வந்துவிடுகிறது. மேலே வந்த பிறகு இரண்டடி கீழே போக அதற்கு மனது வருமா? சரி! இன்னொரு கணக்கு......" என்று ஆரம்பித்தான்.

சிங்காரிக்கு எப்படியோ ஆத்திரமும் கோபமும் பொங்கியெழுந்தது. "உனக்கு எப்படிச் சரியான விடை தெரிந்தது?" என்றான்.

"இந்தப் பத்திரிகையிலேயே இருபத்தியோராம் பக்கத்தில் எல்லாக் கணக்குகளுக்கும் விடை போட்டிருக்கிறது!" என்று மிக்க பெருமிதத்துடன் கூறிச் சிரித்தான் நண்பன் சோனி.



ரயிலில் உள்ளவர்:—ஸார்! பார்த்துப் போடுங்கள் பெட்டியை!

பிளாட்பாரத்தில் ஓடி வந்தவர்:—பார்த்து விட்டேன், ஸார்! பெட்டி திறந்து கொள்ளாது!

# ஆந்திரர்களின் ஆக்கிரமிப்பு

★ சென்னை ரேடியோ நிலையத்தின் போக்கு வரவரச் சீர்கேடடைந்து வருகிறது. தமிழுக்குச் சரியான ஸ்தானத்தை, தமிழருக்குச் சொந்தமான சென்னையில் தக்கபடி கொடுக்காமலிருப்பதைக் கண்டு எந்தத் தமிழனும் தலை குனியாமலிருக்க முடியாது. உதாரணத்திற்கு தெலுங்கு, தமிழ் வருஷப் பிறப்பை எடுத்துக் கொள்வோம்.

இரவு பத்தரை மணிக்குப் படுக்கப்போனாலும் வழக்கம்போல ஏழு மணிக்கு எழுந்திருக்கும் ரேடியோ, தெலுங்கு வருஷப் பிறப்பன்று ஆறேமுக்கால் மணிக்கே எழுந்திருந்து விடுகிறது! ஆனால் தமிழ் வருஷப் பிறப்பன்று மட்டும் எப்போதும்போல் ஏழு மணிக்குத்தான் எழுந்திருக்கிறது. இந்த வித்தியாசம் எதற்காக?

என்றைக்கும் எட்டே கால் மணிக்குச் சினிமாப் பாட்டு வைப்பது வழக்கம். தினசரி நடக்கும் அந்த நிகழ்ச்சியைத் தெலுங்கு தினத்திற்காக ரத்து செய்துவிட்டார்கள். அதற்குப் பதில் அந்த நேரத்தில் 'பில்லல உகாதி!' ஆனால் தமிழ் வருஷப் பிறப்பன்று மட்டும் எப்போதும்போல் வழக்கமான சினிமாப் பாட்டு ஒலிபரப்பு. இது ஏன்? தெலுங்கு தான் முக்கியம், தமிழ் மட்டும் முக்கியமில்லையா?

தெலுங்கு தினத்தின் காலை ஒன்பது மணியிலிருந்து பத்துமணி வரை 'விஜயவாடாவின் உள்ளபடி'. ஆனால் தமிழ்தினத்தில் மத்தியானம்தான் செய்திருக்கிறீர்கள். காலையில் அவர்கள் ஏதாவது நிகழ்ச்சிகள் நடத்தினால் என்ன? பண்டிகையன்று எல்லோரும் அநேகமாக வீட்டிலேயே இருப்பார்கள். நல்ல நிகழ்ச்சிகளைக் கேட்க அவர்களுக்கு நேரம் கிடைக்குமே? சாதாரண ஞாயிற்றுக் கிழமைகளில் கூட ஒன்பதரைமணி வரை ரேடியோ உண்டே; தமிழ் தினத்தில் ஏன் ஒன்பது மணிக்கே மூடிவிட வேண்டும்?

சரி, அதுதான் போகிறது. மத்தியானம் பன்னிரண்டு மணிக்கே திருச்சி ஒலிபரப்பை ஆரம்பித்திருக்கும்போது சென்னை மட்டும் ஏன் பன்னிரண்டரைக்கு ஆரம்பிக்க வேண்டும்? அல்லது அதையாவது அஞ்சல் செய்யக் கூடாதா?

தெலுங்கு வருஷப் பிறப்பன்று இரவு ஏழரை மணிக்கு 'வாகர சங்கீதமு-ரூபகமு'; ஆனால் தமிழ் வருஷப் பிறப்பன்று அதே நேரத்தில் கே. எல். சைகால்—இசைத்தட்டு நிகழ்ச்சி! ஆனால் யார் செய்த புண்ணியமோ, அன்றைய தினத்தில் அப்படி நடக்கவில்லை. அதற்காக அதிகாரிகளை மனப்பூர்வமாய்ப் பாராட்டுகிறேன்.

தெலுங்கு தினத்தன்று 'மதராஸ் — 1' மட்டுமல்லாது 'மதராஸ்—2' கூடச் சில விசேஷ நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியிருக்கிறது. ஆனால் அதே மதராஸ் - 2 தமிழ் தினத்திற்காக ஒன்றுமே செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளாதது மிகவும் வருந்தத்தக்கது.

டாக்கிப் பாட்டுக்களில் பெரும்பாலும் தெலுங்கும் ஹிந்தியுமே ஆக்கிரமித்துக் கொண்டுவிடுகின்றன. மீதமிருக்கும் தமிழ் டாக்கிப் பாட்டுகள் மகா மட்டமானவையாக இருப்பதால் நன்றாக ரஸிப்பதற்கில்லை. ஆதலால் தமிழ் மொழி, தமிழ் டாக்கி—இவ்விரண்டின் பேரிலும் மிகவும் தப்பபிப்பிராயம் விழுந்துவருகிறது. ஆதலால் மட்டரகப் பாட்டுக்களை வைக்காமலிருப்பதே உத்தமம். அப்படியில்லையெனில், தமிழில் உள்ள தனிப் பாடல்களை வைத்து நற்பெயரைச் சம்பாதிக்கலாம்.

கிராம நிகழ்ச்சிகள் தெலுங்கில் மட்டும் சென்னை — 2ல் ஏன் தினசரி நடக்க வேண்டும்...? இது ரொம்ப சாமர்த்தியமாகச் செய்து வரப்படுகிறது. அதாவது சென்னை 2ல் ஒலி பரப்புவதாம்......தினசரி அதை விஜயவாடாவில் அஞ்சல் செய்வதாம்! தமிழில் கிராம நிகழ்ச்சிகள் திருச்சியில் மட்டும்தான் நடத்த வேண்டுமா...? சென்னையைச் சுற்றித் தமிழர்களே இல்லையா?

சாயங்காலம் பொழுது போக்குக்காக 'ரேடியோ' கேட்க வரும் பொதுஜனங்களின் பாடு போதும், போதும் என்றாகி விடுகிறது. அப்பொழுது நடக்கும் நிகழ்ச்சிகள் ருசிப்பதேயில்லை. ஏதோ பாடகர்கள் அங்கு வந்து சாதகம் பண்ணுவதாகத் தோன்றுகிறதே ஒழிய, சங்கீதம் பாடுவதாகத் தோன்றவில்லை! அதுவும் பெரும்பாலும் தெலுங்கிலே தான்! சங்கீதம் என்றாலே தெலுங்கில்தான் இருக்கிறது என்ற அபிப்பிராயம் விழவே இது இடங்கொடுக்கிறது! கிராம நிகழ்ச்சிகளைத் தமிழில் நடத்தினாலும், அந்தச் சமயத்தில் ரேடியோ கேட்கும் பாமர ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மை ஏற்படும்!

"வானொலி"யில் தமிழ்ப்பாட்டு முதலில் போட்டிருந்தாலும், அநுபவத்தில் தெலுங்குக்கே முதலிடம் தரப்படுகிறது. தமிழ் பின்னால் தள்ளப்படுகிறது! தமிழ் நிகழ்ச்சிகளைக் கூடச் சிலசமயம் தெலுங்கிலேயே அறிவித்து விடுகிறார்கள்! இப்படியெல்லாம் தமிழைச் சிறைப்படுத்த வேண்டிய அவசியமேயில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அழியாமல் வளர்ந்து வரும் நமதருமைத் தமிழ் மொழிக்கு, தமிழ்நாட்டின் தலைநகரமாகப் போகும் சென்னை நகரத்திலேயா தடை?

தியாகராயநகர்
16—4—49 ச. சு. மணியம்

●

## கிராமங்களில் தொல்லை

கிராம அன்றிவார உத்தியோகஸ்தர்களான கிராம முனிசீப், கர்ணம் ஆகியவர்களுக்கு மாதச் சம்பளம் ரூபாய் ஏழரையாகும். சென்ற இரண்டு மூன்றாண்டுகளாக மாதம் ஏழரை ரூபாய் பஞ்சப்படியாகப் பெறுகின்றார்கள். ஆனால் அவர்களின் கீழ் வேலை செய்யும் தலையாரிக்கு மாதச் சம்பளம் எட்டரை ரூபாய் இப்பொழுது பஞ்சப்படி ஏழரையும் அத்துடன் பெற்று வருகின்றார்கள். "மேல் வரும்படி" இருப்பதால்தான் தங்கள் சம்பளம் குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதென்று கிராம முனிசிப்புகளும் கர்ணங்களும் கருதி ஏழை விவசாயிகளைப் பல விதத்தில் கசக்கிப் பிழிகின்றார்கள்.

குறிப்பிட்ட சில காரியங்களுக்குக் கிராம முனிசிப்பின் அத்தாட்சிப் பத்திரம் (V. M. Certificate) தேவை. அது இன்றேல் அக்காரியங்கள் நடைபெறா. (உதா. பின்னுக்குக்கு பெர்மிட் வாங்குதல், கிணறு வெட்டக் கடன் வாங்குதல் போன்றவை) அதுகாலை விவசாயிகளிடம், 5 ரூ. 10 ரூ என்று கொடுத்தால்தான்



"சோசியரே! எனக்கு இப்போ காலம் ரொம்ப மோசமா யிருக்குதுங்க! இனிமே பாக்கும் காலம் நல்ல காலமா யிருக்கறதுக்கு என் ஜாதகத்தைக் கொஞ்சம் திருத்திக் கொடுங்க!"

அத்தாட்சிப் பத்திரம் தாருங்கள் என்று கூறிப் பணமும் பெற்று விடுகின்றனர்கள். காரணம் விவசாயிகளுக்கு வேறு வழியில்லை.

போதாதற்கு இப்பொழுது மறுமுறையும் உணவுப் பங்கீடு முறை அமுலுக்கு நம் மாகாணத்தில் வந்தாலும் வந்தது. கிராம முன்சீப்புகளைக் கொண்டு பங்கீட்டுச் சீட்டை விநியோகிக்க உத்தரவு பிறந்தது. பங்கீட்டுச் சீட்டு ஒன்றுக்கு எட்டணா வீதம் கொடுத்தால் தான் கார்டு கொடுப்போம் என்று கிராம முன்சீப்புகள் கூற ஆரம்பித்தனர். சில இடங்களில் ஆயிரக் கணக்கிலும் பங்கீட்டுச் சீட்டு விற்கப்பட்டதாகத் தெரிகிறது. இம்மாதிரி முறைகளால் மேல் வருமானத்தைப் பெறுகின்றார்கள் கிராம அதிகாரிகள். இம்முறையால் மத்தியதர வகுப்பார் பணத்தைக் கொடுத்துப் பலனைப் பெறுகின்றார்கள். ஆனால் அனுதினம் வரும் கூலியைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் பாமர ஏழைக் கூலிகளும் விவசாயிகளும் தான் மிகக் கஷ்டப்படுகின்றார்கள். லஞ்சத்தை ஒழிப்பது கிராம முன்னேற்றத்திற்கு முக்கியமான காரியமாகும்.

எரசக்கநாயக்கனூர்
20—4—49 பால்ராஜ்

●

## பிரதமரின் பேச்சு!

கனம் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றும் பதவி ஏற்றும் முதல்வராக 6-4-49ல் இரவு 7-45 மணிக்கு மதராஸ் ரேடியோ நிலையத்தில் பேசுவதாகவும், அதைத் திருச்சியில் அஞ்சல் செய்வதாகவும் திருச்சி நிலைய கிராம நிகழ்ச்சியிலிருந்து தெரிந்துகொண்டோம். நாங்கள் புதுப் பிரதமர் முதல்வராகத் தேர்ந்த தமிழிலே இனிமையாகப் பேசுவாரென்று ஆவலுடன் கேட்க எங்களூரிலுள்ள பொதுஜன ரேடியோவுக்கு அநேகம் பேர் திரண்டு வந்து எதிர்நோக்கி யிருந்தோம். குறிப்பிட்ட நேரம் வந்ததும், கனம் பிரதமர் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தவுடன், பெரும் ஏமாற்ற மடைந்தோம். நம் மாகாணத்தில் எங்களைப்போல் எதிர்நோக்கி யிருந்த எண்ணிறந்த தமிழ் அன்பர்கள் பெரும் ஏமாற்ற மடைந்திருப்பர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

காடந்தாப்பட்டி
9—4—49 மு. க. முருகப்பன்

●

## ★ எர்ணாகுளம் கோர்ட்டுகள்

திருவிதாங்கூரும், கொச்சியும் சேர்ந்து யூனியன் ஆகப் போவதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்து நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டிருக்கின்றன எர்ணாகுளம் கோர்ட்டுகள் என்று சொல்லப்படுகிறது! திரும்பத் திரும்ப சிறு எண்ணிக்கை கொண்ட கொச்சி அட்வகேட்டுகளுடைய ராஜ்யமில்லாத கட்சிக்காரர்களைப் பார்த்துக் கடிந்து மெலிந்த கோர்ட்டுகளுக்கு, திருவனந்தபுரத்திலிருந்து அட்வகேட்டுகளும் நீதிபதிகளும் சிப்பந்திகளும் ஆக சுமார் 3000 குடும்பங்கள் வரலாம் என்ற வதந்தி சந்தோஷத்தைக் கொடுக்காதா?

யூனியன் ஹைகோர்ட் எர்ணாகுளத்தில் இருக்க வேண்டும் என்றும் இப்பொழுது அங்கு இருக்கும் சிறிய கோர்ட்டுடன் திருவனந்தபுரத்திலிருக்கும் ஹைகோர்ட்டையும் இணைத்து விட வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணங்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? யூனியனின் தலைநகரம் திருவனந்தபுரமானாலும் ஹைகோர்ட் எர்ணாகுளத்தில் இருக்க வேண்டுமாம்! இல்லையென்றால் கொச்சியின் கௌரவம் போய்விடுமாம்!! எல்லா வசதிகளும் அடங்கிய சகல வாசஸ்தலமாகிய திருவனந்தபுரத்தில் இப்பொழுது இருக்கும் ஹைகோர்ட்டுடன் கொச்சி ஹைகோர்ட்டைச் சேர்த்து விடுவது மிகவும் சுலபம். அப்படிச் செய்வதால் அதிக அசௌகரியங்கள் ஏற்படாது. அதை விட்டு விட்டு எந்தவிதமான இடவசதி யில்லாமல் தவிக்கும் எர்ணாகுளத்தில் போதிய காரணமில்லாமல் 3000 குடும்பங்களை அடைத்துக் கஷ்டப்படுத்த வேண்டுமா?

"இங்கு ஒன்று கொடுத்தால் அங்கும் ஒன்று கொடு" என்று குரங்கு நியாயம் வழங்கின கணக்காக அல்லவா இருக்கிறது!

திருவிதாங்கூர் ஹைகோர்ட்டில் தாவா செய்து கொள்பவர்களில் பெரும்பான்மையோரைத் திருவனந்தபுரத்தைவிட்டு 200 மைல்களுக்கப்பால் இருக்கும் எர்ணாகுளத்திற்குப் போகச் சொல்வது நியாயமா?

வியாபார விஷயமாக நாளுக்கு நாள் முன்னணியில் வந்துகொண்டிருக்கும் எர்ணாகுளம் கொச்சி துறைமுகத்தின் அருகிலிருப்பதால் சீக்கிரமே பெரிய "கப்பற்படைத் தளம்" (Naval base) ஆகப் போகிறது. நகரத்தைப் பெரிதாக்குவதற்கு வேண்டிய வசதிகளும் இல்லாமல் இருக்கும் எர்ணாகுளம் இதையெல்லாம் எப்படி சமாளிக்கப் போகிறது! அத்துடன் நீதி ஸ்தாபனத்தையும் அங்கு அடைத்து எர்ணாகுளத்தை மூச்சு விட முடியாமல் திணற அடிப்பானேன்?

திருவிதாங்கூர் நீதிபதிகளையும் அட்வகேட்டுகளையும் இறைவன் எர்ணாகுளம் கோர்ட்டுகளிலிருந்து காப்பாற்றுவான் என்று நினைப்போமாக! இதைப்பற்றி நீங்களும் மண்டையைப் போட்டு 'பூச்சி காட்டி' போடுவதென்ன காரணங்களை சொல்லாமல் மனதில் வைத்துக் கொண்டு சரியான தீர்மானத்திற்கு வருவார்கள் என்றும் எதிர்பார்ப்போமாக!

திருவனந்தபுரம்
15—4—49 செய்யா

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "ஆந்திரர்களின் ஆக்கிரமிப்பு" என்ற கடிதம் எழுதிய கோபாலபுரம் ஸ்ரீ ச. க. மணியத்துக்கும், "எர்ணாகுளம் கோர்ட்டுகள்" என்ற கடிதம் எழுதிய திருவனந்தபுரம் செய்யாவுக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.


கல்கி
ALKI
மே 1, 1949
4 அண

## கேசரியின்
## மூன்று பிரசித்த மருந்துகள்

•

# லோத்ரா

**கர்ப்பாசய ரோக நிவாரணி**

சங்காதோஷம், இசிவ் வாயு, தூக்கமின்மை, அஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகு வலி முதலியவற்றைக் குணப்படுத்தும்.

•

# அம்ருதா

**ரத்த சுத்தி டானிக்**

ரத்த சோகை, அஜீரணம், மலச் சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றைக் குணப்படுத்தும்.

•

# அர்க்கா

**சிறந்த ஜுர நிவாரணி**

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல் குலைக் கட்டிகளும் குணமாகும்.

•

**விவரங்களுக்கு எழுதுங்கள்**

## கேசரி குடீரம் லிட்.

**ராயப்பேட்டை, மதராஸ் - 14**



தலை நிறைந்த கூந்தலே முகத்தின் அழகை எடுத்துக் காட்டுவது. கூந்தலே முக அழகை ஆக்குவதும் அழிப்பதும். கூந்தலழகையும் முக அழகையும் இன்றே கேசவர்த்தினியைக் கொண்டு விருத்தி செய்யுங்கள்.

அற்ப கேசத்தைவிட அழகுக்கு ஹானி வேறில்லை. இதைப் பரிஹரிக்கக் கேசவர்த்தினியைவிடச் சிறந்த மருந்துமில்லை. இழந்த கூந்தலையும் இளமையையும் கேசவர்த்தினியைக் கொண்டு இன்றே பெறுங்கள்.

அழகுள்ளவர் ஒரு சிலரே. ஆனால் கூந்தலழகையோ கேசவர்த்தினி உபயோகத்தால் ஒவ்வொருவரும் பெறலாம். கேச சம்பத்து படைத்தவர் அதை இழக்காமல் கேசவர்த்தினி கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியால் அதை அடையுங்கள்.

# கேசவர்த்தினி

**கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது**

**விலை அணா 14**

(மேற்செலவு வேறு)

**எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்**

தயாரிப்பவர் :

## தென் இந்திய ரஸாயனசாலை

**கிராஸ் கட் ரோடு, கோயமுத்தூர்**

REGD. NO. M. 4392



# ரோஜா மார்க் நெய்

"நல்ல மண்வாக்குள்ள கிராமங்களில், வரத் தட்டு, பருத்தி விதைகளை ஏராளமாகக் கொடுத்து வளர்க்கப்பட்ட பசு, எருமைகளினின்றும் கிடைக்கும் புத்தப் புதிய வெண்ணெய்களைக் கொண்டு, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது.

எல்லா ஊர் கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும் 3 வீசை, 12 வீசை டின்களில் கிடைக்கும். கோவையில் 14-86, ஒப்பணக்கார வீதியிலும் கிடைக்கும்.

●

டெலிபோன் நெ. 192

அவிநாசி ரோடு : தலைமை ஆபீஸ்

**லிங்கம் & கோ., கோயமுத்தூர்**

---

# கல்யாணமா?

2000 டிசைன்களில் - பட்டுச் சேலைகள்
*விலை ரூ. 10 முதல் 700 வரை*

4000 டிசைன்களில் - நூல் சேலைகள்
*விலை ரூ. 5 முதல் 60 வரை*

1000 டிசைன்களில் -
பட்டு - நூல் வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், வாயில், ஷர்ட்டிங், கோட்டிங், மில் ஜவுளிகள் இன்னும் பல

பெங்களூர், பெனாரஸ், பெங்கால், பம்பாய், கல்கத்தா, கொள்ளேகாலம், ஆரணி, காஞ்சீபுரம், சேலம், கோயமுத்தூர், ஜம்மலமடுகு, முதலிய ஊர்களில் நெசவுத் தொழில் நிபுணர்களால் நெய்யப்பட்டு அற்புதமான முந்திகள் அழகான பார்டர்களுடன் கொண்டு வந்து குவித்துள்ளோம்.


மலிந்த விலைகள் உயர்ந்த ரகங்கள்


இன்றே வந்து பார்வையிடுங்கள்!

## கஸ்தூரிபாய் கம்பெனி

உயர்தர பட்டு நூல் ஜவுளி வியாபாரிகள்

மேலவீதி :: சிதம்பரம்


WRIST CHRONOGRAPHS
காரியதரிசிகள், என்ஜினியர்கள், சர்வேயர்கள், டாக்டர்கள், விஞ்ஞானிகள் முதலியோருக்கு, ரிஸ்ட் க்ரோனுக்ராப் ரிகார்டர் மிகவும் உபயோகமுள்ளது. சாதாரண டயலுடனே, டாகிமீடர் அல்லது டெலிமீடர் டயலுடனே கிடைக்கும். இயந்திர வேகம், நீர் பாயும் வேகம் நாடி பார்த்து துடிப்பை எண்ணுதல் முதலியவைகளுக்கு இது மிகவும் இன்றியமையாதது.
மாடல் நெ. 4613. 14" ஸ்டீல்கேஸ் ரூ. 241/-
மாடல் நெ. 4623. 13" ஸ்டீல்கேஸ் ரூ. 270/-
மாடல் நெ. 4627. 13" 18 காரட் கோல்டு கேஸ் ரூ. 486/-
மாடல் நெ. 4633. 13" வாட்டர்ப்ரூப் ஸ்டீல் கேஸ் 12 மணி நேரம் வரை குறிப்பு எடுக்கக் கூடியது. ரூ. 326/-
FAVRE-LEUBA
பேவர் - லூபா & கம்பெனி லிமிடெட் • பம்பாய் • கல்கத்தா


டயபெப்ஸின்
ஆகாரம் சரிவர ஜீரணமாக டயஸ்டாஸ், பெப்ஸின் என்னும் இருவகைப் பொருள்கள் அத்யாவசியமானவை. இவைகள் இரண்டும் உயர்ந்த ரசாயன முறையில் சேர்ந்ததுதான் டயபெப்ஸின். ஆகாரத்துக்குப் பின் ஒரு டீஸ்பூன் டயபெப்ஸின் உட்கொண்டால் ஜீரணச் செயல் க்ஷணமே ஆரம்பித்து, பாக்கி ஜீரண வேலை வயிற்றுக்கு மிக எளிதாகிறது. உங்கள் ஆகாரத்தின் முழுப் போஷணையும் அடைய இதுவே சிறந்த மார்க்கம்.
யூனியன் டிரக், கல்கத்தா
ஏஜண்டுகள்: அப்பா அண்ட் கோ., மதராஸ்
மற்றும் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்
DIA-PEPSIN
UNION DRUG. CALCUTTA

## ரூ. 22-8-0 பெறுமானமுள்ள ஒரு கைக் கெடியாரமும் ஒரு பவுண்டன் பேனாவும் இனாம்

## உயர்தர கைக் கெடியாரங்கள்

எல்லா கெடியாரங்களும் உயர்ந்த ரகம். ஸ்விஸ் தயாரிப்பு. உறுதியுள்ள லீவர் மெக்கானிஸம். நீடித்து உழைப்பதுடன் சரியாக மணி காட்டும். ஐந்து வருஷங்களுக்கு உத்திரவாதம். படத்தில் காட்டி இருப்பதைவிட மிகவும் அழகானவை. ஒவ்வொன்றும் ப்ளாஸ்டிக் பட்டையுடன், வெல்வெட் பெட்டியில் அமைக்கப்பட்டுள்ளது.



நெ. 201 வட்ட வடிவம்

| | | | |
|---|---|---|---|
| வட்டவடிவம் க்ரோமியம் | 17/8/- | உயர்ந்த ரகம் | 18/8 |
| 3 ஜுவெல்கள் | 20/8/- | 5 ஜுவெல்கள் உ. ர. | 22/8/- |
| 7 ,, | 26/- | ரோல்ட்கோல்டு | 28/- |
| 15 ,, | 35/- | ,, ,, | 58/- |




நெ. 202 தட்டை வடிவம்

| | | | |
|---|---|---|---|
| 5 ஜுவெல்கள் | 28/- | உயர்ந்த ரகம் | 30/- |
| 5 ,, | | ரோல்ட்கோல்டு 10 வருஷ உத்தரவாதம் | 38/- |
| 7 ,, | 35/- | ரோல்ட்கோல்டு | 40/- |
| 15 ,, | 50/- | ,, ,, | 58/- |



நெ. 203 வளைந்த வடிவம்

| | | | |
|---|---|---|---|
| 5 ஜுவெல்கள் க்ரோமியம் | 30/- | உயர்ந்த ரகம் | 32/- |
| 5 ,, | | ரோல்ட்கோல்டு 10 வருஷ உத்தரவாதம் | 40/- |
| 7 ,, க்ரோமியம் | 40/- | ரோல்ட்கோல்டு | 45/- |
| 15 ,, ,, | 52/- | ,, ,, | 60/- |




நெ. 204 நீண்ட சதுர டோனு வடிவம்

| | | | |
|---|---|---|---|
| 5 ஜுவெல்கள் க்ரோமியம் | 34/- | உயர்ந்த ரகம் | 37/ |
| 5 ,, | | ரோல்ட்கோல்டு 10 வருஷ உத்தரவாதம் | 42/- |
| 7 ,, க்ரோமியம் | 42/- | ரோல்ட்கோல்டு | 48/- |
| 15 ,, ,, | 54/- | ,, ,, | 62/- |

தபால் செலவு அணா 12 பிரத்தியேகம். ஒவ்வொரு கைக் கெடியார ஆர்டருக்கும் ஒரு அமெரிக்கன் பேனா இனாமாக அளிக்கப்படும். சேர்ந்தாற்போல் மூன்று கைக் கெடியாரங்களுக்கு ஆர்டர் செய்தால் ரூ. 22-8-0 பெறுமானமுள்ள ஒரு கைக் கெடியாரம் இனாமாக அளிக்கப்படும். அல்லது விலையில் பன்னிரண்டரை சத விகிதம் தள்ளுபடி செய்யப்படும்.

**STANDARD WATCH CO. (K) Post Box No. 11419 - CALCUTTA - 6**

---




# போனோமின்ட்

## பேதி மிட்டாயிக்கு ஜே!

திவ்வியமான பெப்பர்மிண்ட் மிட்டாய் போல் சுவையுள்ளது. அதிலுள்ள மருந்து சத்துக்கள் உமிழ்நீரோடு கலந்து உதர கோசங்களில் சேர்கின்றன. இது மலபோக்கை செம்மையாக எளிதில் சரிப்படுத்துகிறது.

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜன்டுகள் :

மெஸர்ஸ். ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி

99-A, அரமனைக்காரத் தெரு :: மதராஸ் - 1

WL 6

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras